MBSL

மாற்றமடையும் நாளைய தினம்

மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா என்ட் பினேன்ஸ் பீஎல்சீ

ஆண்டறிக்கை 2016

இணைய வழி ஆண்டறிக்கை
www.mbslbank.com

2016
ஆண்டறிக்கை 2016

Merchant Bank of Sri Lanka & Finance PLC

மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீலங்கா என்ட் பினேன்ஸ் பீஎல்சீ
இலங்கை வங்கி மர்ச்சன்ட் கோபுரம்
28,சென்ட் மைக்கல் வீதி, கொழும்பு 03.
தொலைபேசி : 4 711711
மின்னஞ்சல் : mbslbank@mbslbank.com
இணையத்தளம் www.mbslbank.com

மாற்றமடையும் நாளைய தினம்

2016 ஆம் ஆண்டில் MBSL இனை ஒன்றிணைத்ததன் சாதகமான தாக்கத்தை அனுபவித்ததுடன், நிறுவனத்தின் அடையாளமும் விருத்தி செய்யப்பட்டது. வருமானம் மற்றும் இலாபம் கடந்த ஆண்டினைப் பார்க்கிலும் அதிகரித்ததன் காரணமாக சந்தையில் எமது நிலைத்திருப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாற்றமடைந்த நிறுவனமொன்றின் அத்தியாவசியமான பகுதியான முக்கிய காரணிகளின் வெற்றிகரமான சேர்க்கைக்காக நாம் முயற்சி செய்தமையினால் உயர் வெற்றியை அடைந்துகொள்வதற்கு எம்மால் முடிந்தது. எமது தூர நோக்கான நவீன முறையிலான நிதி சார்ந்த தீர்வுகளை வழங்குபராக முன்னேறிச் செல்வதுடன், எமது மூலோபாய ரீதியிலான வழிகாட்டல் எமது அறிவுமிக்க வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதற்கு எமது தகவல் தொடர்பாடல் உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டியெழுப்பப்பட்டது.

இது MBSL புதியதொரு பரிமாணத்தில் தொடர்ந்தேர்ச்சியாக வளர்ச்சியடைந்து பரிணாமமடைவதற்கான வழியை ஏற்படுத்துவதுடன், அது எமது வாடிக்கையாளர்களின் நாளைய தினத்தை மாற்றியமைக்குமென நம்புகின்றோம்.

பொருளடக்கம்

தூரநோக்கு, செயற்பணி மற்றும் பண்பாடு | 3
எமது வளர்ச்சிப் பயணம் | 4
தலைவரின் கருத்துரை | 6
பிரதம நிறைவேற்று அதிகாரியின் கருத்துரை | 8
இந்த அறிக்கை தொடர்பாக | 10
செயற்திறன் | 11

எமது வணிக நடவடிக்கைகள்
பங்குரிமை அமைப்பு | 13
நிறுவனக் கட்டமைப்பு | 14
உற்பத்திகள் மற்றும் சேவை | 15
எமது பிராந்திய விரிவாக்கம் | 16

செயற்பாட்டு சூழல் மற்றும் மூலோபாயம்
பெறுமதி உருவாக்கல் மாதிரி | 18
எமது செயற்பாட்டு சூழல் | 19
எமது வாடிக்கையாளர்களுடனான தொடர்பு | 23
விடயம் பற்றிய வரைவிலக்கணம் | 24
மூலோபாய ரீதியிலான திட்டம் | 26
தகைமைக்கான எமது அணுகுமுறை | 27

மூலோபாய ரீதியிலான செயற்திறன் வணிக நடவடிக்கைகளின் மீளாய்வு
குத்தகை(லீசிங்) | 28
நிறுவன மற்றும் வாடிக்கையாளர் கடன்கள் | 30
நிறுவன ரீதியிலான ஆலோசனைகள் மற்றும் மூலதனச் சந்தை வசதிகள் | 32
பொருளாதாரப் பெறுமதி சேர்த்தல் | 33

முகாமைத்துவக் கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வு
நிதி மூலதனம் | 36
உற்பத்தி மூலதனம் | 44
மனித வள மூலதனம் | 46
சமூக மற்றும் தொடர்புகள் மூலதனம் | 54
இயற்கை மூலதனம் | 57

முகாமைத்துவம்
பணிப்பாளர் சபை | 62
நிறுவன முகாமைத்துவம் | 68
நிறுவன நல்ஆளுகை | 72
கம்பனியின் நடவடிக்கைகள் சம்பந்தமான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை | 106
கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 113
ஊதியக் குழு அறிக்கை | 116
தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல் மீளாய்வுக் குழு அறிக்கை | 118
ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழு அறிக்கை | 120
அபாயங்கள் அல்லது அபாய முகாமைத்துவம் | 122

நிதி சார் தகவல்கள்
நிதி நாட்காட்டி | 133
நிதி அறிக்கைப்படுத்தல் சம்பந்தமாக உள்ளகக் கட்டுப்பாட்டுக்கான பணிப்பாளர்களின் கருத்துரை | 134
நிதி அறிக்கைப்படுத்தல் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் சம்பந்தமான கருத்துரை | 136
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 137
இலாப நட்டக் கூற்று | 140
விரிவான வருமானக் கூற்று | 141
நிதி நிலைமைக் கூற்று | 142
பங்குகள் மாற்றல் கூற்று | 144
காசுப் பாய்ச்சல் கூற்று | 145
நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள் | 146

மேலதிக தகவல்கள்
காலாண்டு ரீதியிலான பகுப்பாய்வு | 240
தசாப்தத்திற்கான நோக்கு | 242
சுயாதீன பாதுகாப்பு சான்றிதழ் | 250
புசுஐ சரிபார்ப்புப் பட்டியல் | 252
சதவிகிதங்களின் அடிப்படை | 264
அகராதி | 266
அழைப்புத் தகவல்கள் | 270
நிறுவனத் தகவல்கள் | 277
கூட்டத்தின் அறிக்கை | 278
முன்நிகழ்வுப் பத்திரம | 279

எமது தூரநோக்கு

G4-56

தேசத்திற்கு நவீன வணிகத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பவராக பரிணமித்தல்.

எமது செயற்பணி

தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்து நவீன மற்றும் பேணத்தகு தீர்வுகளின் ஊடாக எமது வாடிக்கையாளர்களின் செல்வத்தை அதிகரித்தல்

நிறுவன நல்ஆளுகை சம்பந்தமாக உயர் தரத்தைப் பேணி பங்குதாரர்களின் பெறுமதியை அதிகரித்தல்

சேவை சிறப்புத் தன்மையை அடைந்துகொள்வதற்காக ஊழியர்களுக்கு பரிசுகளை வழங்கி அவர்களது அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்தல்.

எமது வணிகப் பங்காளிகளுடன் பரஸ்பர அனுகூலத் தொடர்புகளை போஷித்தல்

நிறுவன சமூகப் பொறுப்பு சம்பந்தமான கோட்பாடுகளைப் பேணி தேசத்திற்கு சேவையாற்றுவதன் ஊடாக சமூகம் தொடர்பான எமது பொறுப்புக்களை நிறைவேற்றல்

எமது பண்பாடு

எமது அனைத்து முயற்சிகளின்போதும் பண்பாடு, ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் உயர் சம்பிரதாயங்களை வரவேற்றல்

சிறப்புத்தன்மையை அடைந்துகொள்ளும் முயற்சியின்போது அறிவாற்றலுடன் எமது கோட்பாடுகளை வழிநடாத்தல்

பாதுகாப்பு, பரிமாற்றல் மற்றும் நேர்மையான சூழலொன்றை உருவாக்கி எமது ஊழியர்களிடையே தொழில் முயற்சிகளை வளர்த்தல்

நல்ஆளுகை மற்றும் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்தல்

சேவை சிறப்புத் தன்மை, மாற்றங்கள் மற்றும் நவீனமயப்படுத்தல் ஊடாக எமது வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தல்

சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக ஒன்றிணைதல் மற்றும் ஊக்குவிக்கப்படல்

எமது வளர்ச்சிப் பயணம்



2006

ISO 9001-2000 மற்றும் தேசிய உற்பத்தித்திறன் விருதைப் பெற்றுக்கொள்ளல்

2007

ஆண்டறிக்கைக்கான விருது

2008

AA நிறுவன தரப்படுத்தல்
நிதி நிறுவனங்களுக்கான "வெள்ளிப் பதக்கம் - கூட்டு"

2009

MBSL சேமிப்பு வங்கி மற்றும் MBSL காப்புறுதிக் கம்பனியை கையகப்படுத்தல். த பினேன்ஸ் கம்பனி பீஎல்சீ இன் முகாமைத்துவப் பிரதிநிதியாக இலங்கை மத்திய வங்கி யினால் MBSL இனை நியமித்தல்.

நிதி நிறுவனங்களுக்கான

"வெண்கலப் பதக்கம் விருது"

2012

30 ஆம் ஆண்டு நிறைவு, 16 புதிய கிளைகளை திறந்துவைத்தல்

2014

மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீலங்கா என்ட் பினேன்ஸ் பீஎல்சீ என பெயர் மாற்றப்படல்

குத்தகைத் துறையில் 2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கு தங்கப் பதக்கம் கிடைத்தமை.

2015

MBSL, MCSL மற்றும் MSB இனை ஒன்றிணைத்தல் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனமொன்றாக செயற்பாடுகளை ஆரம்பித்தல்.

குத்தகைத் துறையில் 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கு தங்கப் பதக்கம் கிடைத்தமை.

சில கிளைகளில் இஸ்லாமீய நிதி மற்றும் அடகு செயற்பாடுகளை விரிவுபடுத்தல்.

2016

"இலங்கையின் சிறந்த தொழில் வழங்குனருக்கான விருது"

"ஆண்டின் வளர்ந்துவரும் நிதி நிறுவனத்திற்கான விருது"

தலைவரின் கருத்துரை

G4-01

"குழுமம் கடந்த ஆண்டின் ரூபா 56 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடும்போது ரூபா 246.8 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை ஈட்டிய செயலாற்றுகையில் கணிசமான வளர்ச்சியைக் காட்டுகின்றது."

2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டானது MBSL குழுமத்தின் வளர்ச்சிப் பயணத்தின் திருப்புமுனையாக இருந்ததுடன், குழுமத்தின் ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றை எமது பெறுமதிமிக்க பங்குரிமையாளர்களான உங்களுக்கு சமர்ப்பிக்கக் கிடைத்தமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

ஒன்றிணைந்த நிறுவனமாக இரண்டாம் ஆண்டில் செயற்பாடுகளை மேற்கொண்டு குழுமம் கடந்த ஆண்டின் ரூபா 56 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடும்போது ரூபா 246.8 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை ஈட்டிய செயலாற்றுகையில் கணிசமான வளர்ச்சியைக் காட்டுகின்றது.

குழுமம் பலமான இரு மடங்கு விருத்திக்கு வசதிகளை ஏற்படுத்தும் முழுமையான மற்றும் செயலூக்கம்மிக்க மூலோபாயங்கள் ஊடாக சந்தையில் வளர்ச்சி வாய்ப்புக்களின் அடிப்படையில் மூலதனமயப்படுத்தப்பட்டது. கம்பனியின் சிறப்புத் தன்மைக்காக மத்திய கிழக்காசிய தலைமைத்துவ மாநாட்டில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அங்கு ஆண்டில் வளர்ச்சியடைந்துவரும் நிதி நிறுவனம் எனும் கௌரவ நாமம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. ஆண்டினுள் மனித வளப் பயன்பாடு, கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களின் சிறப்புத் தன்மையை இனங்கண்டு பார்ட்னசிப் சமிட் என்ட் பிஸ்னஸ் எவோர்ட்ஸ் இனால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக மனித வளங்கள் அபிவிருத்தி காங்கிரஸில் சிறந்த தொழில் வழங்குனர் தர அடையாளங்களில் ஒன்றாக MBSL கம்பனி பெயர் குறிப்பிடப்பட்டது.

தொழிற்பாட்டு சூழல்
ஆண்டில் செயற்பாட்டு சூழல் ஊடாக பல்வேறு சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் முன்வைக்கப்பட்டன. கட்டுப்பாட்டாளரால் பேணி வரப்பட்ட கடுமையான நிதிக் கொள்கைகள் காரணமாக ஆண்டின் அதிகளவு காலப் பகுதியில் சந்தையில் வட்டி வீதம் அதிகரிப்பதற்கு காரணமாகியது. இதன் ஊடாக துறையில் தேறிய வட்டி வருமானத்தின் மீது தாக்கம் ஏற்படுத்தப்பட்டது. நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர பிரிவை பலப்படுத்துவதனை நோக்கிய கொள்கையினைக் கொண்ட கடன்களை விரிவு படுத்துவதற்காக பல்வேறு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதை அறியக் கிடைக்கின்றது. இதனிடையே குத்தகை வசதிகளுக்கான விகிதம் 70:30 சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையினால் குத்தகைக்கான கேள்வி குறைந்துள்ளதுடன், அதனூடாக வங்கிகள் அல்லாத நிதிப் பிரிவு கடன் தொகுதியினுள் விருத்தியடைந்துள்ள பல்வகைமையை அடைந்துகொள்வதற்காக சம்பிரதாயபூர்வமான வர்த்தக முறையிலிருந்து விலகிச் செயற்படுவதன் மீது கவனம் செலுத்தப்பட்டது.

பலமான தலைமைத்துவக் குழு
பல்வேறு திறமைகள், அனுபவங்கள் மற்றும் துறைசார் நிபுணர்களைக் கொண்ட புதிய பணிப்பாளர் சபை 2016 ஜூலை நியமிக்கப்பட்டது. பணிப்பாளர்கள் தொழில் முயற்சிகள், தொழில்சார் மற்றும் கல்வி அனுபவத்தைக் கொண்டவர்களாக இருப்பதுடன், ஆழமான கலந்துரையாடல்கள் பயன்மிக்க தீர்மானங்களை எடுப்பதற்கு காணமாகியது. கொழும்பு பங்குப் பரிவர்த்தணையின் தேவைக்களுக்கமைய தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவொன்றை ஒரு வருட காலத்தினுள் நிறுவப்பட்டது. குழுமம் உயர்ந்தளவில் நிறுவனத்தின் நடத்தைகள் மற்றும் பண்பாடுகள் சம்பந்தமான தரத்தை தொடர்ந்து பேணி வருவதுடன் மீளாய்வாண்டில் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டல்கள் அனைத்துக்கும் பூரணமாக இணக்கப்பாட்டைத் தெரிவித்தது.

மூலோபாயங்கள் மற்றும் செயற்திறன்
ஆண்டினுள் வளர்ச்சி சம்பந்தமான எமது அடிப்படை முன்னுரிமைகள், வாடிக்கையாளர்களுடனான தொடர்புகள், மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் பேண்தகு தன்மை சம்பந்தமான கவனத்தை நாம் ஈர்த்துக் கொண்டோம். தொழிற்பாட்டு மூலதனக் கடன் மற்றும் நாளாந்தம் சேகரிக்கும் கடன் போன்ற புதிய உற்பத்தித் துறைகள் சிலவற்றில் ஆக்கிரமிப்பு ரீதியிலான பரவல் ஊடாக குத்தகைச் சந்தையின் வீழ்ச்சியின் போதுகூட எமது கடன் தொகுதியில் பலம்மிக்க வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கு எம்மால் முடிந்தது. எமது நுண்பாக நிதி வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்டு பல்வேறு பங்கேற்கு பொறிமுறைகள் மற்றும் நிதி சார் பயிற்சித் திட்டங்களின் ஊடாக வாடிக்கையாளர்களுடனான தொடர்புகளை நாம் தொடர்ந்தும் மேற்கொள்வோம். எமது ஊழியர்களின் பெறுமதியை விருத்தி செய்தல் ஆண்டில் அடிப்படை முன்னுரிமையாக இருந்ததுடன், உயர் செயற்திறனை நோக்கிப் பயணிக்கும் கலாசாரமொன்றை தோற்றுவிக்கும் நோக்கில் நிறுவனத்தின் ஊழியர்களின் பதவி உயர்வு மற்றும் சம்பளக் கொள்கையை நாம் பலப்படுத்தினோம். பொறுப்பு வாய்ந்த நிறுவனமொன்றின் பிரஜை என்ற வகையில் எமது நாளாந்த செயற்பாடுகளில் பேண்தகு நிலைமையினை உட்பதிப்பதற்கு நாம் முயற்சி செய்கின்றோம். எமது நுண்பாக நிதி வேலைத் திட்டத்தின் ஊடாக போட்டி அடிப்படையிலான விகிதங்களில் பணத்தின் மீதான பிரவேசத்தைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் 17000 இலும் அதிகமான நுண்பாக நிதி தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கு மற்றும் வளர்ச்சியடையச் செய்வதற்கு எம்மால் முடிந்தது. அத்துடன் ஆண்டினுள் பல்வேறு பிரஜைகள் உபசரணை சேவைகள் ஊடாக நாம் பிரஜைகளுடன் செயலூக்கத்துடன்கூடிய பங்கேற்பினை நாம் பேணி வருகின்றோம். எமது மூலோபாயத்தின் ஏற்புடைத்தாகும் தன்மை மற்றும் நிபுணத்துவம் எமது செயற் திறனில் வெளிப்படுத்தப்படுகின்றது. எமது செயற்பாட்டில் திருப்புமுனையினை அடையாளப்படுத்தி மற்றும் எதிர்வரும் ஆண்டின் வளர்ச்சிக்காக பலமான வாய்ப்பினை நாம் பெற்று கம்பனியின் வரிக்கு முன்னரான இலாபம் முன்னைய ஆண்டில் ரூபா 35.4 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடும்போது ரூபா 239.9 மில்லியன் இலாபத்தை ஈட்டியுள்ளது.

எதிர் காலப் பயணம்
2017 முதலாவது காலாண்டில் இலங்கை மத்திய வங்கியின் கடுமையான நிதிக் கொள்கை குறிகாட்டியின் ஊடாக சந்தையின் வட்டி வீதம் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிப் பிரிவுகளின் வளர்ச்சியை நோக்கி அந்த கொள்கைகளின் ஊடாக கடன்கள் தொடர்பான கேள்வியைப் பேணி வருவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இந்த புதிய வளர்ச்சியின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் சிறப்பான வகையில் தயார் நிலையில் உள்ளோம். எதிர்வரும் மூன்று வருடங்களுக்காக மூலோபாய ரீதியிலான சந்தைப் பிரிவு மற்றும் வாடிக்கையாளர்களுக்கான மிகவும் முன்னேறிய பிரவேசத்தினை உறுதி செய்வதுடன், எமது பாரம்பரியமான வர்த்தக முறைகளிலிருந்து மாற்றமடைவதற்காக உயர் விளை திறனுடன்கூடிய உற்பத்திகளை நோக்கிப் பயணிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். ஒட்டுமொத்த இலாபம் ஈட்டுவதற்கு பங்களிப்புச் செய்து கணிசமானளவு செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் ஆபத்து முகாமைத்துவ ஆற்றல்களை ஏற்படுத்திக்கொள்வதற்காக 2017 இன் அரையாண்டில் புதிய தகவல் தொழில்நுட்ப முறைமையொன்றை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

நன்றியுரை
வாய்ப்புக்கள் மற்றும் முன்னேற்றம் சம்பந்தமான மேலுமொரு நலமான ஆண்டொன்றை நான் எதிர்பார்ப்பதுடன், அரச தொழில் முயற்சிகள் தொடர்பான அமைச்சர், செயலாளர் மற்றும் பணியாட் தொகுதிக்கு, பொதுத் திறைசேரியின் பணியாட் தொகுதிக்கு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள் கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபைக்கு நான் நன்றிதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். MBSL நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் எனது சகாக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் உங்களுடன் தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு விரும்புகின்றேன்.இறுதியாக, MBSL முகாமைத்துவத்திற்கு மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களது நிறுவனத்துடனான பிணைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்காக மற்றும் எமது அனைத்து வாடிக்கையாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினருக்கு அவர்களது தொடர்ந்தேர்ச்சியான ஒத்துழைப்புக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

கலாநிதி சுஜீவ லொக்குஹேவா
தலைவர்

2017 ஏப்ரல் 28
கொழும்பு

பிரதம நிறைவேற்று அதிகாரியின் கருத்துரை

“ கடந்த ஆண்டில் ரூபா 35.4 மில்லியன் நட்டத்திலிருந்து கம்பனியின் மொத்த வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 239.9 மில்லியன் வரை அதிகரித்தது.கம்பனியானது கடந்த ஆண்டில் ரூபா 78.3 மில்லியன் தேறிய நட்டத்திலிருந்து ரூபா 85.6 மில்லியன் வரை தேறிய இலாபத்தை அதிகரித்து ஆண்டில் இலாபத்தை ஈட்டியுள்ளது”

குழுமம் 2015 ஆம் ஆண்டில் சிக்கலான மற்றும் சவால்மிக்க வகையில் ஒன்றிணைக்கப்பட்டதன் பின்னர் பலமான மாற்றமொன்றை அடைந்துள்ளமையினால் மீளாய்வுக்குட்படும் அண்டு MBSL குழுமத்திற்கு அர்த்தமுள்ள ஆண்டாகும். கவனத்திற்கொள்ளப்பட்ட மூலோபாயங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்தியதன் ஊடாக குழுமத்திற்கு அதன் மேல் மற்றும் கீழ் மட்டங்களில் பலமான வளர்ச்சியை அடைந்துகொள்ள முடியுமாக இருந்ததுடன், அது 2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்காக குழுமத்தின் செயற்திறன் சம்பந்தமான மீளாய்வொன்றை உங்களிடம் முன்வைக்கக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மிக்க தொழிற்பாட்டு சூழல்

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ஆண்டில் 4.4% (2015 : 4.8%) வரை குறைவடைந்ததுடன் அதற்கு மோசமான காலநிலை காரணமாக விவசாயத்துறையின் வீழ்ச்சி அடிப்படைக் காரணமாக அமைந்தது. இந்த ஆண்டில் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறை முறையே 6.7% மற்றும் 4.2% இனால் வளர்ச்சியடைந்துள்ளது. இதனிடையே, ஆண்டில் பயன்படுத்திய கடும் உறுதியான நிதிக் கொள்கை ஆண்டில் இரண்டாவது அரைப் பகுதயில் வட்டி வீதம் அதிகரிப்பதற்கு காரணமாகியது. பெறுமதிக்கு கடன் வீதச் சட்டம் 70% மற்றும் தொடர்ந்தேர்ச்சியான வாகனங்களின் விலை அதிகரிப்பு குத்தகை(லீசிங்) கடன்கள் தொகுதி மீது தாக்கம் செலுத்தினாலும் ஆண்டில் நிதி சாராத வங்கிப் பிரிவு பாராட்டுக்குரிய விதத்தில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மொத்தமாக முறைமையின் மொத்த சொத்துக்கள் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 16% எனும் சுமாரான பெறுமதியினால் விருத்தியடைந்ததுடன் அது கடன் தொகுதி, நுண்பாக நிதியியல் மற்றும் கைத்தொழில் விரிவாக்கத்திற்கு காரணமாகியது.

இலாபம் ஈட்டுவதற்காக செயலூக்கத்துடன்கூடிய மூலோபாயம்

ஆண்டினுள் எமது செயற்பாட்டு நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்தப்பட்ட மூலோபாயத்தின் ஊடாக வழிநடாத்தப்பட்டதுடன் அதனூடாக இலாப விருத்தி மற்றும் செயற்பாடுகளின் வினைத்திறனே இலக்காகக் கொள்ளப்பட்டது. மூலோபாய ரீதியிலான கவனம் கடன் சேகரிப்பு மீது மற்றும் கடன்களின் தரத்தை பலப்படுத்துவதனை உறுதிப்படுத்தும் பொறிமுறையொன்றை செயற்படுத்துவதன் மீது ஈர்க்கப்பட்டது. வளங்களை சேவையில் ஈடுபடுத்துவதன் ஊடாக ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மீள் அறவிடுவதனை உறுதிப்படுத்தப்பட்டதுடன் அதனூடாக குழுமத்தின் மொத்த செயற்பாடற்ற கடன் வீதம் 4.2% இனால் வீழ்ச்சியடைந்தது அதன் பெறுபேறாக, ஆண்டின் சேதங்களுக்கான செலவு மற்றும் மொத்த இலாபத்தை ஏற்று கடந்த ஆண்டில் நிலவிய ரூபா 462.15 மில்லியன், ரூபா 24.24 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்தமையாகும். அத்துடன், நாம் தொழில்நுட்ப ஆற்றல்களைப் பலப்படுத்தல், புதிய தகவல் தொழில்நுட்ப தொகுதியொன்றை தயாரிப்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு காலம் மற்றும் ஊழியத்தை அர்ப்பணித்துள்ளோம். 2017 இன் இரண்டாவது அரையாண்டில் அந்தத் தொகுதியை செயற்படுத்துவதற்கு நாம் எதிர்பார்த்திருப்பதுடன், உற்பத்தித் திறன், செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் ஆபத்து முகாமைத்துவத்தில் பல்வேறு நன்மைகளை சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். இந்த தொகுதி ஊடாக மொத்த கொடுக்கல்வாங்கல் பெறுமதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் கடன் / பற்று அட்டைகள், இணைய வழி வங்கி நடைமுறை மற்றும் நடமாடும் வங்கி முறை உட்பட பல்வேறு அடிப்படை ஆரம்பங்களுடன் எதிர் காலத்திற்கு தயாராகும் நிதி நிறுவனமொன்றாக கம்பனி நிலை நிறுத்தப்படும். அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றாக மாற்றமடைந்ததன் ஊடாக பொது வைப்புக்கள் எமது நிதியத்தினுள் விருத்தியடைந்த பல்வகைமையை இலகுபடுத்துவதற்கான பிரவேசத்தினை கம்பனிக்கு வழங்கியுள்ளது. ஆண்டினுள் வைப்பு பலத்தினை விருத்தி செய்து கம்பனியின் வைப்பினை ரூபா 18.52 மில்லியன் வரை 16.86% இனால் அதிகரிப்பதற்கு முடியுமாக இருந்ததுடன், வைப்புச் சேவைகளில் ஈடுபடுத்தியதன் ஊடாக மனித வள ஆற்றல்களை நாம் பலப்படுத்தியுள்ளோம்.

சிறந்த பணியாட் தொகுதி

ஆண்டிற்கான எமது ஊழியர் மூலோபாயம், நிபுணத்துவத்துடன்கூடிய, வினைத்திறனை அடிப்படையாகக் கொண்ட கலாசாரமொன்றை அபிவிருத்தி செய்தல் மீது ஈர்க்கப்பட்டதுடன், அது எமது எதிர்பார்க்கும் மூலோபாய நிகழ்ச்சி நிரலை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தேவைப்படும் திறமைகளைக் கொண்ட ஊழியர்களை உருவாக்கும். அங்கு, தலைமைத்துவ அபிவிருத்தி, கடனை மீள அறவிடல் மற்றும் வைப்புக்கள் சேவையில் ஈடுபடுத்துவதன் ஊடாக ஊழியர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக நாம் ரூபா 14.63 மில்லியன் முதலீடு செய்துள்ளோம். கட்டமைக்கப்பட்ட வினைத்திறனின் அடிப்படையில் அனுகூலங்களைப் பெற்றுத்தரும் முறையொன்று உயர் வினைத் திறனைக்கொண்ட ஊழியர்களை இனங்காணல் மற்றும் அவர்களது தொழில்சார் முன்னேற்றத்தின் நிமித்தம் செயற்படுத்தப்பட்டது. 2017 ஜனவரி முதல் மூன்று வருட கால கூட்டு இணக்கப்பாட்டுக்காக தொழிற் சங்கங்களுடன் சிறப்பான வகையில் நடவடிக்கை மேற்கொண்டதுடன், அதனூடாக ஊழியர்களுடன் தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு செயற்பாடுகளில் மிகக் குறைந்த தடையை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டில் எமது ஊழியர்களின் பெறுமதிப் பகுதியை அதிகரிப்பதற்கான எமது முயற்சிகளை இனங்கண்டு பார்ட்னஷிப் சமிட் என்ட் பிஸ்னஸ் எவோர்ட்ஸ் இனால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக மனித வளங்கள் அபிவிருத்தி காங்கிரஸில் சிறந்த தொழில் வழங்குனராக MBSL கம்பனி தெரிவு செய்யப்பட்டது. அத்துடன், MBSL

கம்பனி மத்திய கிழக்காசிய தலைமைத்துவ மாநாட்டில் ஆண்டின் வளர்ந்து வரும் நிதி நிறுவனத்திற்கான விருது வழங்கப்பட்டது.

சாதனைக்குரிய இலாபம் ஈட்டல்

ஆண்டில் குழுமத்தின் சிறப்பான வினைத்திறனானது எமது மூலோபாயம் சம்பந்தமானதைப் போன்றே இந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும்போது எமது குழு உணர்வு சம்பந்தமான சாட்சியாகும். குழுமத்தின் மற்றும் கம்பனியின் தேறிய வட்டி வருமானம் வட்டி வீதங்களின் துரிதமான அதிகரிப்பின்போதும் முறையே 5.55% மற்றும் 4.55% மட்டத்தில் நிலவியதுடன் இது இது தேறிய வட்டி வருமானம் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. எமது கடன் அமைப்பை பல்வகைப்படுத்துவதற்கு நாம் முயற்சி மேற்கொண்டதனால் நிறுவன மற்றும் வாடிக்கையாளர் கடன் தொகுதி (28.67%) மற்றும் நுண்பாக நிதியியல் (59.41%) ஆக பலமான வளர்ச்சியுடன் 16.29% ஆக வளர்ச்சியடைந்தது. கடன்களின் தர விருத்தியின் பின்னர் பாதிப்புக்களுக்கான செலவில் பாரிய வீழ்ச்சி ஊடாக அடிப்படையாக இலாபம் ஈட்டப்பட்டது.

கடந்த ஆண்டில் ரூபா 35.4 மில்லியன் நட்டத்திலிருந்து குழுமத்தின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 239.9 மில்லியன் வரை அதிகரிப்பதற்கு அது காரணமாகியது. அத்துடன், கடந்த ஆண்டில் ரூபா 78.31 மில்லியன் தேறிய நட்டத்திலிருந்து ரூபா 85.6 மில்லியன் வரை தேறிய இலாபம் அதிகரித்ததுடன் ஆண்டில் கம்பனி இலாபம் ஈட்டும் நிலைமையை அடைந்தது.

எதிர்காலப் பயணம்

வங்கி அல்லாத நிதிப் பிரிவின் விருத்திக்காக கணிசமான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்த நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் பிரிவை பலப்படுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதுடன், குழுமம் இவ்வாறு முன்னேறி வரும் சந்தர்ப்பங்களில் மூலதனமயப்படுத்தலுக்காக பொருத்தமான பிரகாரம் நிலைநிறுத்தப்படுகின்றது. புளூ ஓசன் மூலோபாயத்தின் அடிப்படையில் மூலோபாய நிகழ்ச்சித் திட்டமொன்று எதிர்வரும் மூன்று வருடங்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், குழுமம் அதன் பாரம்பரிய உற்பத்திகள் மற்றும் சந்தை பல்வகைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. எமது வர்த்தகக் குறியீட்டைப் பலப்படுத்துவதற்கு மற்றும் சந்தையில் வரவேற்பை அதிகரிப்பதற்கு முனைப்பான பிரச்சாரம் மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றும் இதற்கு இணையான வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. கம்பனியானது புவியியல் ரீதியிலான விரிவுபடுத்தலில் ஈடுபட்டுள்ளதுடன், அடுத்த நிதியாண்டில் 10 மேலதிக கிளைகளுடன் வடக்கு மற்றும் கிழக்கைப் போன்றே தெற்குப் பிரதேசங்களிலும் எமது பரவலை பலப்படுத்துவதற்கு நாம் முயற்சி மேற்கொண்டுள்ளோம்.

நன்றியுரை

எனக்கு வழங்கும் வழிகாட்டல்கள் மற்றும் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்காக தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அரச தொழில் முயற்சிகள் தொடர்பான அமைச்சர், செயலாளர் மற்றும் பணியாட் தொகுதிக்கு, பொதுத் திறைசேரியின் பணியாட் தொகுதிக்கு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு எனது நன்றிதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அத்துடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தணை, பிணைப் பத்திரங்கள் மற்றும் செலாவணி ஆணைக் குழு மற்றும் இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபைக்கு அவர்களது தொடர்ந்தேர்ச்சியான ஒத்துழைப்புக்காக நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறானதொரு சேவைக்கு தம்மை அர்ப்பணித்துள்ள பணியாட் தொகுதியை வழிநடாத்தக் கிடைத்தமையையிட்டு நான் பெருமிதமடைவதுடன், MBSL குடும்பத்தினருக்கு அவர்களது பிணைப்பு மற்றும் ஒத்துழைப்புக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக குழுமத்தின் வளர்ச்சிக்கு தொடர்ச்சியான பங்களிப்பை நல்கிய எமது நேசத்திற்குரிய வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ரீ.முத்துகல
பிரதம நிறைவேற்று அதிகாரி

2017 ஏப்ரல் 28
கொழும்பு

இந்த அறிக்கை தொடர்பாக

இது எமது 3 ஆவது ஆண்டறிக்கையாக இருப்பதுடன், அதனூடாக எமது மூலோபாயம், செயற்பாட்டு முன்மாதிரி, வாய்ப்புக்கள் மற்றும் ஆபத்துக்கள், கட்டுப்பாடு மற்றும் மதிப்பீடு, அடிப்படையாக இலக்காகக் கொள்ளப்பட்ட தற்போதைய மற்றும் எதிர்கால முதலீட்டாளர்கள் சம்பந்தமான சுருக்கமான பகுப்பாய்வொன்றை வழங்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். குழுமத்தின் மூலோபாயம் மற்றும் செயற்பாடுகள் ஊடாக எமது வளங்கள் மற்றும் தொடர்புகள் ஊடாக நாம் ஏற்படுத்திக்கொள்ளும் மதிப்பு மற்றும் மதிப்பை உருவாக்கிக் கொள்வதற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சி வெளிப்படுத்தப்படுவதுடன் சர்வதேச ஒன்றிணைந்த அறிக்கைப்படுத்தல் கவுன்சிலின் ஒன்றிணைந்த அறிக்கைப்படுத்தல் வேலைத் திட்டத்தின் ஊடாக நிச்சயிக்கப்பட்ட மூலதனப் பயன்பாடுகளில் ஈடுபட்டு குழுமத்திற்கு மதிப்பை ஏற்படுத்துவதற்காக ஒப்பீட்டு ரீதியிலான மதிப்பீட்டை பெற்றுக் கொடுப்பதனையே இந்த அறிக்கையின் ஊடாக நாம் எதிர்பார்க்கின்றோம்.

விடயப் பரப்பு மற்றும் வரையறை

G4-3, G4-15, G4-17, G4-18, G4-28,G4-29,G4-30

இந்த அறிக்கையின் ஊடாக 2016 ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையிலான காலப் பகுதிக்குள் மேர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா என்ட் பினேன்ஸ் பீஎல்சீ இன் துணை நிறுவனமான MBSL காப்புறுதிக் கம்பனியின் தொடர்புடைய கம்பனியான லங்கா சிக்கியுரிட்டீஸ் பிரைவட் லிமிடட் இன் செயற்பாடுகள் மற்றும் பொழிப்பு விசாரணை உள்ளடக்கப்படுகின்றது. நாம் ஆண்டறிக்கை முறையொன்றை பின்பற்றுவதுடன், இந்த அறிக்கை 2015 ஆம் ஆண்டிற்காக குழுமத்தின் முன்னைய ஆண்டறிக்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுகின்றது.

எமது அறிக்கையை பூர்த்தி செய்த விதம்

அத்துடன் இந்த அறிக்கை நிலையான அறிக்கைப்படுத்தல் பிரவேசம் (GRI) G4 மத்திம அளவுகோல்களின் ஊடாக உரிய கோட்பாடுகளைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளது. எமது அறிக்கையின் அர்த்தம் மற்றும் நம்பகத் தன்மையை

தொடர்ந்து விருத்தி செய்யும்போது உலகளாவிய அறிக்கைப்படுத்தல் (GRI) அறிக்கைப்படுத்தல் பிரவேசத்தின் ஊடாக தீர்மானிக்கப்பட்டிருக்கும் பிரிவுகளை வெளிப்படுத்துமுகமாக எமது விடயத்திற்குரிய பிரிவுகளில் மற்றும் எமது துறைக்கேயுரிய சிறப்பு பண்புகளைக் கொண்ட விடயப் பரப்பு மற்றும் பெறுமதி உருவாக்கல் நடைமுறையை நாம் பலப்படுத்தியுள்ளோம். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது அறிக்கைப்படுத்தல் விடயப் பரப்பு அல்லது முக்கியமான மீள் கூற்றுக்களில் எந்தவிதமான அளவு ரீதியிலான மாற்றங்களும் ஏற்படவில்லை. GRI இல் உள்ளடக்கப்பட்ட குறிகாட்டி 252 ஆம் பக்கம் முதல் 263 பக்கம் வரை அறிக்கையின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கைப்படுத்தல் கோட்பாடுகள் மற்றும் உறுதிப்படுத்தல்

G4-32, G4-33

இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் தரங்கள், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் மற்றும் 2000 இன் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தின் தேவைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கமைய பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனங்கள் பயன்படுத்த வேண்டிய ஏற்புடையதாகும் தூர நோக்குடைய ஒழுங்கு விதிகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கமைய இந்த அறிக்கையின் 140 முதல் 248 ஆம் வரையிலான பக்கங்களின் ஊடாக முன்வைக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிறுவன நல்லாளுகை மற்றும் ஆபத்து முகாமைத்துவ அறிக்கை பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனங்களுடன் தொடர்பான விதிமுறைகளுக்கு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தணையின் பட்டியலிடப்பட்ட தேவைகளுடன் இணங்கிச் செல்கின்றது. நிதிக் கூற்றுக்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக பணிப்பாளர்களின் கூற்றுக்கள் தொடர்பான உறுதிப்படுத்தலை கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கியுள்ளார்.

பின்னூட்டல்

G4-31

சமர்ப்பிக்கப்படும் தகவல்களின் நிலைமை மற்றும் மேலும் அர்த்தமுள்ளதாக மாற்றியமைப்பதற்காக நாம் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருவதனால் எமது அறிக்கை சம்பந்தமான பிரேரணைகள், பின்னூட்டல் மற்றும் முறைப்பாடுகளை நாம் வரவேற்கின்றோம். அதற்காக தயவுசெய்து கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தலைமை நிதி அதிகாரி
மேர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா என்ட் பினேன்ஸ் பீஎல்சீ
BOC மேர்ச்சன்ட் கோபுரம்
28,சென்ட் மைக்கல் வீதி, கொழும்பு 03
தொலைபேசி : 011 47111749
purnak@mbslbank.com

தலைமைத்துவத்தின் மீளாய்வு

தலைவர் (பக்கம் 06) மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி (பக்கம் 08) ஆகியோரால் முன்வைக்கப்பட்ட பிரகாரம் 2016 இல் மூலோபாயம், வினைத்திறன், கட்டுப்பாடு, சவால்கள்வாய்ப்புக்கள் பற்றிய மீளாய்வு

தலைமைத்துவம்

நிறுவனத்தின் நல்லாளுகை (பக்கம் 72) மற்றும் ஆபத்து முகாமைத்துவம் (பக்கம் 22)

எமது செயற்பாடுகளுக்கான பின்னணி

விடயத்துடன் தொடர்புடைய ஆபத்துக்கள் மற்றும் வாயப்புக்கள் (24 ஆம் பக்கம்)

மூலோபாயங்களை தீர்மானிக்கும் விதம்

எமது பங்காளித் தரப்பினரின் தேவைகள், மதிப்பு உருவாக்கல் முன்மாதிரி மற்றும் விடயத்துடன் தொடர்புடைய பிரிவுகள் சம்பந்தமாக மீளாய்வின் ஊடாக எமது மூலோபாயங்கள் அறிவிக்கப்படும் (18 ஆம் பக்கம்)

எமது செயற்திறன்

எமது மூலதன உள்ளீடுகளுக்கு நாம் உருவாக்கும் பெறுமதியின் செயற்திறன் (பக்கம் 36 – 59)

செயற்திறன் நிகழ்வுகள்

G4-09

நிதி நிகழ்வுகள்

	கம்பனி		
	2016	2015	வேறுபாடு (%)
செயற்பாட்டு செயற்திறன் (ரூபா மில்லியன்)			
தேறிய வட்டி வருமானம்	2,028.17	1,939.83	5
மொத்த வருமானம்	4,888.16	4,216.99	16
வரிக்கு முன்னரான இலாபம்	239.87	(35.43)	ஏற்புடையதாகாது
நடைமுறை வரி	62.84	31.68	98
வரிக்கு பின்னரான இலாபம்	85.62	(78.31)	ஏற்புடையதாகாது
தக்கவைக்கப்பட்ட ஈட்டல்கள்	853.17	747.41	14
நிதி நிலைமை (ரூ.மில்லியன்)			
மொத்த சொத்துக்கள்	31,933.73	28,274.55	13
தேறிய கடன் தொகுதி	27,052.00	23,225.78	16
மொத்த வைப்புக்கள	18,518.42	15,846.31	17
பங்குரிமையாளர்களின் நிதியம்	3,113.49	3,008.06	4
செயற்பாட்டு வீதம் (%)			
பங்குகள் மீதான ஈட்டல்கள்	2.80	(2.54)	ஏற்புடையதாகாது
கிரயத்திற்கு வருமான வீதம்	72.06	66.89	8
சராசரி சொத்துக்கள் மீதான ஈட்டல்கள்	0.28	(0.28)	ஏற்புடையதாகாது
வைப்பு வீதத்திற்கான கடன்	146	147	(1)
மொத்த மூலதன வீதம்	10.69	11.68	(1)
மத்திம மூலதன வீதம்	10.66	11.91	(1)
பங்குரிமை வீதம் (ரூ.மில்லியன்)			
பங்கொன்றிற்கான ஈட்டல்கூடுநட்டம்ரூ டுரூரூ	0.52	(0.47)	ஏற்புடையதாகாது
பங்கொன்றிற்கான தேறிய சொத்து (ரூ.)	18.77	18.13	4
விலை ஈட்டல் வீதம்	26.35	(31.77)	ஏற்புடையதாகாது
பங்கொன்றிற்கான சந்தை விலை (ரூ.)	13.60	15.00	(9)

நிதி அல்லாத நிகழ்வுகள்

	2016	2015	வேறுபாடு (%)
உற்பத்தி மூலதனம்			
வாடிக்கையாளர் பிரவேச இடங்கள்	49	49	0
திறந்துவைக்கப்பட்ட தங்கக் கடன் நிலையங்கள்	6	13	(54)
மனித வள மூலதனம்			
ஊழியர்களின் எண்ணிக்கை	917	866	6
ஊழியர்களுக்கான செலுத்துகை (ரூ.மில்.)	818	707	16
பயிற்சிக்கான முதலீடுகள் (ரூ.மில்.)	14.62	7.09	106
பயிற்சி மணித்தியாலங்கள்	18,395	11,100	66
ஒரு ஊழியருக்கான பயிற்சி மணித்தியாலங்கள்	20.06	12.82	56
ஒரு ஊழியருக்கான இலாபம்(ரூ.மில்.)	0.09	(0.09)	ஏற்புடையதாகாது
தக்கவைத்துக்கொள்ளும் வீதம் டுஸரூ	85	84	1
சமூகத் தொடர்புகள் மூலதனம்			
வாடிக்கையாளர் எண்ணிக்கை	198,824	138,895	43
செலுத்திய வட்டி(ரூ.மில்.)	2,709.60	2,133.33	27
வழங்கிய கடன்கள் (எண்ணிக்கை)	33,725	19,033	77
உருவாக்கிய வைப்புக்கள் (எண்ணிக்கை)	45,170	31,576	43
இயற்கை மூலதனம்			
சக்திப் பயன்பாடு (அலகுகள்)	1,269,818	1,138,679	12
நீர் பயன்பாடு (அலகுகள்)	17,616	18,153	(3)
கடதாசிப் பயன்பாடு (அலகுகள்)	315,960	369,624	(15)
மீள் சுழற்சி செய்யப்பட்ட கடதாசி (கிலோ கிராம்)	720	390	85

வர்த்தக குறியீட்டு
பெறுமதி அதிகரிப்பு
63%
ரூ.மி. **774**

முதலீடு
ரூ.மி. **81**
நவீன மையக் கருத்தைக் கொண் வங்கியியல்

பயிற்சிக் கிரயம
ரூ.மி. **14.62**

ஊழியர் பயிற்சி மணித்தியாலம்
18,395

மொத்த ஊழியர் எண்ணிக்கை
917

கடதாசி பயன்பாடு
15%
நீர் செலவு
22%
குறைத்தல்

ஊழியர்களை தக்கவைத்தல்
85%

சந்தை மூலதனமயமாக்கல்
ரூ.பி. **2.25**

ஊழியர்களுக்கான கொடுப்பனவு மற்றும் அனுகூலம்
ரூ.மி. **818**

எமது வியாபாரம்

எம்மை பற்றி

மேர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா என்ட் பினேன்ஸ் பீஎல்சீ அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனமாக இருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. சுமார் 4 தசாப்த கால சிறப்பான பயணமொன்றுடன் நாட்டு மக்களுக்குநிதிப் பிரவேசம் மற்றும் வலுவூட்டுவதற்காக பங்களிப்பைச் செலுத்தி 190,000 இற்கும் மேலதிகமான வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை கட்டியெழுப்பியுள்ளோம். 22 மாவட்டங்களில் 49 வாடிக்கையாளர் பிரவேசத்திற்கான வலையமைப்பு நிலையங்கள், செயற்பாடு மற்றும் திறமையான 917 ஊழியர்களை நாம் வழிநடாத்துகின்றோம். 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 2.25 பில்லியன் சந்தை மூலதனமயமாக்கலுடன் இந்தக் கம்பனி கொழும்பு பங்குச் சந்தையில் தலைமைப் பெயர் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளது. MBSL கம்பனிக்கு பூரண உரித்துடைய துணை நிறுவனமான MBSL காப்புறுதி கம்பனி பொதுவான மற்றும் ஆயுள் காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட பங்குத் தரகரான லங்கா சிக்கியுரிட்டீஸ் கம்பனி கம்பனியுடன் தொடர்புடைய கம்பனியாக இருப்பதுடன், அது பங்கு வர்த்தகம், கடன் வர்த்தகம் மற்றும் சார்ந்த வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளது. MBSL சொத்துக்கள், வைப்புக்கள் மற்றும் கிளை வலையமைப்பு என்பவற்றுக்கமைய இலங்கையில் மிகப் பெரிய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியான அரசாங்கத்துக்குச் சொந்தமான இலங்கை வங்கிக்கு பூரண உரித்துடைய துணைக் கம்பனியாகும்.

MBSL மத்திய கிழக்கு தலைமைத்துவ மாநாடு மற்றும் விருது வழங்கும் வைபவத்தின்போது டு2016கூ17ரு ஆண்டின் வளர்ந்துவரும் நிதி நிறுவனத்திற்கான விருதைப் பெற்றது. உலகளாவிய தலைமைத்துவக் கூட்டமைப்பு (World Leadership Federation) நிறுவன வெற்றிகளை கொண்டாடும் உலகளாவிய அமைப்பாக இருப்பதுடன், அங்கு உலகத் தலைவர்கள் மற்றும் சிறப்பு நிறுவனங்களினால் உயர் வெற்றிகள் மற்றும் அதி சிறந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் அவர்களது முயற்சிகளை இனங்கண்டு மதிப்பிட்டு விருது வழங்கப்படுகின்றது.

மொத்த சொத்துக்கள்	மொத்த வைப்பு	வட்டி வருமானம்
ரூ.மில். **31,934**	ரூ.மில். **18,518**	ரூ.மில். **4,738**
(2015: ரூ.மில். 28,275)	*(2015: ரூ.மில். 15,846)*	*(2015: ரூ.மில். 4,073)*
ஆண்டின் இலாபம்	**பங்கொன்றின் ஈட்டல்**	**ஊழியர்கள்**
ரூ.மில். **85.62**	ரூ. **0.52**	**917**
(2015: ரூ.மி.(78.31))	*(2015: ரூ.(0.47)*	*(2015: 866)*

நாம் மேற்கொள்ளும் விடயங்கள்

தனி நபர்கள், சிறிய மற்றும் நுண்பாக தொழில் முயற்சிகள் மற்றும் நிறுவன ரீதியான வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் மற்றும் முதலீட்டுத் தீர்வுகளை நாம் பெற்றுத் தருவோம்.

பங்குதாரர்களின் கட்டமைப்பு

G4-07



நிறுவனக் கட்டமைப்பு



உற்பத்திகள் மற்றும் சேவைகள்

G4-04



எமது பிராந்திய விரிவாக்கம்

G4-06

MBSL அதனைச் சார்ந்துள்ள தரப்பினர்களின் பல்வேறு தேவைகளை சுட்டிக்காட்டும் விதத்தில் அதன் வியாபார நடவடிக்கைகளை முகாமைத்துவப்படுத்தல் மீது பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளதுடன், வலுவான தரப்பினரின் பெறுமதியை ஏற்படுத்துவதற்காக இவ்வாறான போட்டி அடிப்படையிலான தேவைகளை சீர் செய்வதற்கு எமது உத்திகள் மிகவும் கவனமாக தயாரிக்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டு சூழல் மற்றும் மூலோபாயம் (உத்திகள்)

பெறுமதி உருவாக்கல் படிவம்

எமது செயற்பாட்டு சூழல்

எமது வாடிக்கையாளர்களுடனான பங்கேற்பு

அளவு சார்ந்த மூலோபாயத் திட்டத்தை வரைவிலக்கணப்படுத்தல்

பேண்தகையை நோக்கிய எமது பிரவேசம்

மூலோபாய ரீதியிலான செயற்திறன்

வர்த்தக வழிமுறைகள் மீளாய்வு

- குத்தகை (லீசிங்)
- நிறுவன மற்றும் வாடிக்கையாளர் கடன்
- நிறுவன ரீதியிலான ஆலோசனைகள் மற்றும் மூலதனச் சந்தை
- பொருளாதார பெறுமதி சேர்த்தல்

பெறுமதி உருவாக்கல் மாதிரி

தூர நோக்கு : தேசத்திற்கு நவீன தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பவராக பரிணமித்தல்

மூலதன உள்ளீடு

நிதி மூலதனம்

பங்குரிமையாளர்களின் நிதியம் : ரூ.மில்“3”113
பொது வைப்பு : ரூ.மில்“ 18இ518
கடன் பெறல் : ரூ.மில்“ 8இ723

உற்பத்தி மூலதனம்

பௌதீக உட்கட்டமைப்பு (ரூ.மில். 248
டிஜிட்டல் உட்கட்டமைப்பு (ரூ.மில். 81

மனித வள மூலதனம்

917 ஊழியர்களின் திறமைகள், ஊக்குவிப்பு மற்றும் தொழில் திறமை
ஊழியர் பயிற்சி : 18இ395 மணித்தியாலம்
பயிற்சிக்கான முதலீடு ரூ.மில். 14.62

சமூக மற்றும் தொடர்புகள்

வாடிக்கையாளர்கள்: 198,824

இயற்கை மூலதனம்

- சக்திப் பயன்பாடு ரூ.மில். 32.34
- நீர் பயன்பாடு ரூ.மில். 1.41
- கடதாசிப் பயன்பாடு ரூ.மில். 3.77

பெறுமதி உருவாக்கல் செயற்பாடு

வியாபார நடவடிக்கை நடவடிக்கைகள்

மூலோபாய ரீதியிலான கவன ஈர்ப்பு, விருத்தி, சிறந்த வாடிக்கையாளர் தொடர்பு, பல்வேறு திறமைகளைக் கொண்ட ஊழியர்களின் இருப்பு

பெறுமதி இயக்கிகள், பொது மக்கள் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், உற்பத்தி விருத்தி, நிதிப்படுத்தல், சந்தைப்படுத்தல்

- வைப்பை பயன்படுத்தல்
- கடன் நடவடிக்கை
- மூலதன சந்தை மற்றும் நிறுவன ரீதியான ஆலோசனை
- பொதுவான மற்றும ஆயுள் காப்புறுதி தீர்வுகள்

ஆபத்துக்கள்

கடன் ஆபத்து, வட்டி வீத ஆபத்து, பங்குகள் ஆபத்து, செயற்பாட்டு ஆபத்து, மூலோபாய மற்றும் கீர்த்தி நாம ஆபத்து, கட்டுப்பாட்டு மற்றும் ஒப்பீட்டு ஆபத்து

உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகள்

நிதி மூலதனம்

வரிக்கு பிந்திய இலாபம் : ரூ.மில் 86
பங்கொன்றின் ஈட்டல் : ரூ 0.52

உற்பத்தி மூலதனம்

கடன் தொகுதி : ரூ.மில் 27,052
வைப்புத் தொகுதி : ரூ.மில். 18,518.

மனித வள மூலதனம்

அனுகூலம் : ரூ.மில். 818 ஊழியர்
தக்க வைப்பு : 85%

சமூக மற்றும் தொடர்புகள் மூலதனம்

வழங்கிய கடன்களின் எண்ணிக்கை: 33,725
உருவாக்கிய வைப்புக்களின் எண்ணிக்கை: 45,170

இயற்கை மூலதனம்

தலைமை அலுவலகத்தின் கடதாசி மீள் சுழற்சி: 720 கி.கிராம்
நீர் பயன்பாட்டைக் குறைத்தல்: 22%

எமது செயற்பாட்டுச் சூழல்

குழுமத்தின் மூலோபாய ரீதியிலான நிகழ்ச்சித் திட்டமானது ஏற்படும் ஆபத்துக்கள் மற்றும் வாய்ப்புக்களுடன் தொடர்பான வகையில் நிலவுவதனை உறுதிப்படுத்தியதன் காரணமாக குழுமத்தின் செயற்பாட்டுச் சூழலின் போக்குகள் மூலோபாயங்களைத் தயாரிப்பதில் அத்தியாவசிய உள்ளீடாகும். MBSL முனைப்பாக குழுமத்தின் எதிர்கால உணர்த்தப்படும் பொருளை தீர்மானிக்கும்போது இந்த ஏற்படும் போக்குகள் முனைப்புடன் கட்டுப்படுத்தப்படுகின்றது.

பொருளாதார விருத்தி

2016 போக்கு

நாட்டின் கைத்தொழில் (6.7%) மற்றும் சேவைகள் துறையின் (4.2%) விருத்தியை உறுதிப்படுத்தி இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2016 ஆம் ஆண்டில் 4"4ஸ இனால் அதிகரித்ததுடன் விவசாயத் துறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பாக தொடர்ந்தும் சேவைகள் பிரிவில் 57ஸ ஆன பங்குகளுக்காக நிதி மற்றும் காப்புறுதி சேவைகள் (8.4) மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் உப பிரிவு (8.0) விரிவடைந்தமை ஊடாக ஒத்துழைப்பை வழங்கியது. அரசாங்கத்தின் மற்றும் தனியார் துறைப் பிரிவின் செயற் திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன், கட்டுமானத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன் கைத்தொழில் துறையில் 5.7% வளர்ச்சி காணப்பட்டது. (2015 ஆம் ஆண்டின் நேரொத்த கால எல்லையின் 2.1 உடன் ஒப்பிடுகையில்) விவசாயத் துறையில் முக்கிய சில பயிர்களுக்கான காலநிலை நிலைமை பாதகமாகக் காணப்பட்டமையினால் 4.2% வீழ்ச்சிக்கு முகங்கொடுத்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி



மூலம் - சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் நிதிச் சேவைகள் துறையின் விருத்தி 11.4%

எமது மூலோபாயத்தினால் உணர்த்தப்படும் பொருள்

விசேடமாக சிறிய மற்றும் நடுத்தர பிரிவின் ஊடாக பொருளாதார விருத்தியை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் கொள்கைக்கமையச் சென்று நாட்டின் வர்த்தகத் துறையின் விருத்திக்கான வாய்ப்பினை அளித்தல். விவசாயத் துறையின் சிரமங்கள் உயர்ந்தளவிலான பாதிப்புக்களுக்கான அறவீடுகளுக்கான காரணமாக அமைந்து இந்தப் பிரிவின் கடன் தொகுதியை பலவீனப்படுத்தவதற்கு வழியமைக்க முடியும்.

நிதிக் கொள்கை மற்றும் வட்டி வீதம்

2016 போக்கு

பண வீக்கத்தினால் ஏற்படும் தாக்கத்தை தடுக்கும் மற்றும் பண இருப்புக்கு உதவும் நோக்கில் இந்த ஆண்டில் கடும் நிதிக் கொள்கை பயன்படுத்தப்பட்டது. அதற்கமைய, நிலையான வைப்பு வசதிகள் வீதம் மற்றும் நிலையான கடன் வசதிகள் வீதம் 2016 பெப்ரவரி மற்றும் ஜுலை மாதங்களில் 50 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டதுடன், ஆண்டிறுதியின்போது முறையே 7.0% மற்றும் 8.5% ஆக இருந்தது. இதனிடையே, வங்கிக்கான சட்ட ரீதியிலான இருப்பு வீதம் 2016 ஜனவரி மாதம் 6.0% இலிருந்து 7.5% வரை அதிகரிக்கப்பட்டது. இந்த செயற்பாடுகளுக்கு எதிர் விளைவைக் காட்டுமுகமாக சந்தை வட்டி வீதம் ஆண்டின் அதிக காலப் பகுதியில் அதிகரிப்பைக் காட்டியது.

வட்டி வீதப் போக்கு



மூலம் - இலங்கை மத்திய வங்கி

எமது மூலோபாயத்தினால் உணர்த்தப்படும் பொருள்

உயர் வட்டி வீதம் காரணமாக ஆண்டின் இரண்டாவது அரைப் பகுதியில் கடன் விண்ணப்பங்கள் குறைவடைந்ததுடன், குறுகிய கால வைப்புக்களுக்கான பொறுப்புக்கள் வேகமாக மீள் விலையிடல் காரணமாக வட்டி இலாபம் குறைவடைந்தது.

எமது செயற்பாட்டுச் சூழல்

பணவீக்கம்

2016 போக்கு

கேள்வியை நோக்கிப் பயணிக்கும் பண வீக்க அழுத்தம், விவசாயத் துறையில் வழங்கல் கூறுகள் மற்றும் வரி அமைப்பில் திருத்தங்களைக் காட்டியவாறு ஆண்டின் முதலாவது அரைப் பகுதியில் பொதுவான மற்றும் மத்திம பண வீக்கம் மேல் நோக்கிப் பயணித்தது. அதனால், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (NCPI) இனால் மதிப்பீடு செய்யப்பட்ட பண வீக்கம் 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் உயர் மட்டத்தில் காணப்பட்டதுடன் அதன் பின்னர் முறையாக வீழ்ச்சியடைந்து ஆண்டின் இறுதிப் பகுதியில் நிலையாக காணப்பட்டது.

எமது மூலோபாயத்தினால் உணர்த்தப்படும் பொருள்

2016 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் பண வீக்கம் உறுதிப்படுத்தப்படல் ஊடாக விசேடமாக 2017 கடன் கேள்வியை முன்னெடுத்துச் செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பணவீக்கம்



மூலம் - இலங்கை மத்திய வங்கி

அரசாங்க நிதி

2016 போக்கு

அரசாங்க நிதி உறுதிப்பாட்டுக்கு ஒத்துழைப்பு நல்கியவாறு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (மொ.உ.உ) சத வீதமாக வரவு செலவுப் பற்றாக்குறையானது ஆண்டில் (முன்னைய ஆண்டில் 7.4% இலிருந்து) 5.4% வரை வீழ்ச்சியடைந்தது. வரி அடிப்படையை விரிவுபடுத்தல் சம்பந்தமாக மற்றும் வரி சேர்த்தல் நிர்வாக வினைத்திறனை விருத்தி செய்தல் சம்பந்தமாக வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் ஊடாக நிதி உறுதிப்பாடு மற்றும் இடைக் கால அடிப்படையிலான மிகவும் நிலையான பேரினப் பொருளாதார நிலைமையொன்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது மூலோபாயத்தினால் உணர்த்தப்படும் பொருள்

ஆண்டினுள் வாகனங்களின் விலைகள் அதிகரித்தமை காரணமாக தீர்வை வரியானது கம்பனிக்கு அதன் வளர்ச்சியை நோக்கிய பயணத்திற்கு மற்றும் வருமான மூலங்களை பல்வகைமைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுத்து வாகனங்களுக்கான கேள்வியில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

அரசாங்க நிதி



மூலம் - இலங்கை மத்திய வங்கி

வர்த்தகப் பொருட்களின் விலை

2016 போக்கு

2016 இரண்டாவது அரைப் பகுதியில் எரிபொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கும் மட்டத்தில் காணப்பட்டது. சீனாவின் பலம்மிக்க உட்கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நிதிக் கொள்கையை இலகுபடுத்தும் நோக்கம் என்பவற்றினால் கன உலோகங்களின் விலையும் ஆண்டில் உறுதியாகக் காணப்பட்டது.

எமது மூலோபாயத்தினால் உணர்த்தப்படும் பொருள்

உலகளாவிய விலைப் போக்குகளுக்கு ஏற்றவாறு பெறுமதியினுள் பிணையாகக் கொள்ளப்பட்ட தங்கத்தின் அளவு அதிகரித்தமையினால் தங்கத்தின் விலை அதிகரித்தமை கம்பனியின் கடன் தொகுதி மீது நன்மை பயக்கும் தாக்கம் நிலவியது.

சர்வதேச தங்க விலை தங்க, வெள்ளி அளவையில்



மூலம்-உலக தங்கக் கவுன்சில்

தனியார் துறையின் கடன் வளர்ச்சி

2016 போக்கு

இலங்கை மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட கடும் நிதிக் கொள்கை உறுதிப்பாட்டின் முன்னேயும் தனியார் துறையின் கடன் வளர்ச்சி ஆண்டினுள் பலம்மிக்கதாக நிலவியது. அதற்கமைய, வர்த்தக வங்கிகளினால் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட கடன் 2016 இல் 21.9% ஆக இருந்ததுடன், அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் பண வீக்க இலக்குடன் சமப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டில் இது முறையாக மாற்றமடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது மூலோபாயத்தினால் உணர்த்தப்படும் பொருள்

புதிய உற்பத்திகள் மற்றும் சந்தைப் பிரிவுக்கு கம்பனியின் விரிவாக்கத்தின் ஊடாக வளர்ச்சிக்காக பல்வேறு சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர் பார்த்த போதிலும் வட்டி வீதம் அதிகரித்தமையினால் கடனுக்கான கேள்வியின் எதிர்பார்த்த வீழ்ச்சியின் ஊடாக கம்பனியின் வளர்ச்சி மீது தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தனியார் துறைக் கடன் வளர்ச்சி



மூலம் - இலங்கை மத்திய வங்கி

எமது செயற்பாட்டுச் சூழல்

வங்கியல்லாத நிதித் துறையின் செயற் திறன்

2016 போக்கு

- நிதிப் துறையின் மொத்தச் சொத்துக்களில் சுமார் 7% உள்ளடக்கப்படும் 1,313 கிளைகளைக் கொண்ட வலையமைப்பை வழிநடாத்தும் 46 LFCs மற்றும் 7 SLCs களை இந்தப் பிரிவு கொண்டுள்ளது.
- பிரிவின் சொத்துக்களின் விருத்தி 2015 இல் 21.7% இனால் பலப்படுத்தப்பட்டது.
- காலத்திற்கேற்ற கடன், நுண்பாக நிதி உட்பட பாதுகாப்புக் கடன் மற்றும் ஆண்டில் விருத்தி குறைக்கப்பட்ட குத்தகைகளின் காரணிசார் விருத்தி ஊடாக முன்கொண்டு செல்லப்பட்ட கால எல்லைக்குள் கடன் வளர்ச்சி 21.0% ஆக இருந்தது.
- சொத்துக்களின் தரம் 2016 டிசம்பர் இறுதியில் 5.4% மொத்த செயற்பாடற்ற கடன் வீதத்துடன் ஒப்பிடும்போது மாறாமல் இருந்தது.
- பங்குகள் மீதான ஈட்டல்கள் மற்றும் சொத்துக்கள் மீதான ஈட்டல்கள் முறையே 4.0% மற்றும் 23.0% ஆக ஆண்டில் இலாப ஈட்டல் சிறப்பாக இருந்தது. கால எல்லைக்குள் மொத்த இலாபம் 2015 இல் 31.5 வரை இரு மடங்காகியது.
- 2015 டிசம்பர் மொத்த RWCAR ஆனது 11.2% இலிருந்து 11.7% வரை அதிகரித்ததுடன், இலாப ஈட்டலின் உதவியுடன் மூலதனம் பலப்படுத்தப்பட்டது.

	2016 ரூ.பி.	2015 ரூ.பி.	வருட (%)
சொத்துக்கள்	1,211.9	995.8	22
கடன், பெறுகை	962.7	795.8	21
வைப்புக்கள்	531.0	480.6	11
மொத்த செயற்பாடற்ற கடன் வீதம்(%)	5.3	5.7	-
தேறிய செயற்பாடற்ற கடன் வீதம் (%)	1.2	1.6	-
சொத்துக்கள் மீதான ஈட்டல்கள் ROA (%)	4.0	3.0	1
பங்குகள் மீதான ஈட்டல்கள் ROE (%)	23.1	12.4	11

கட்டுப்பாட்டு அபிவிருத்தி

கீழ் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டு அபிவிருத்தி ஊடாக குழுமத்தின் செயற்பாட்டின் மீது தாக்கம் நிலவியது.

- 2015 செப்டெம்பர் நாட்டிற்கான வாகன இறக்குமதியை வரையறுத்து நிதி நிறுவனங்களின் ஆபத்தைக் குறைக்குமுகமாக மோட்டார் வாகனங்களுக்கான குத்தகை வசதிகளின் பெறுமதிக்கு கடன் வீதத்தின் மீதான 70% உச்சளவை இலங்கை மத்திய வங்கி அறிமுகஞ் செய்ததுடன், அதில் அண்மைய ஆண்டுகளில் செலுத்தல் நிலுவை மீது கணிசமான தாக்கம் செலுத்தப்பட்டது.
- இறக்குமதி தீர்வை வரிகளுக்கு பல்வேறு திருத்தங்கள் மற்றும் கணக்கிடும் முறை என்பன வாகனங்களின் விலை அதிகரிப்புக்கு காரணமாகியது.

எமது மூலோபாயத்தினால் உணர்த்தப்படும் பொருள்

கொள்ளளவின் மீது கணிசமானளவு தாக்கத்துடன் மேலே கலந்துரையாடிய ஒழுங்கு விதி ரீதியிலான அபிவிருத்தியின் இரு வகையான தாக்கத்துடன் மொத்த குத்தகைக் கைத்தொழிலும் முன்னொருபோதுமில்லாதவாறு சவால்களுக்கு முகங்கொடுத்தது.

அண்மைய ஆண்டுகளில் குத்தகையானது குழுமத்தின் கடன் தொகுதியில் அனைத்துக்கும் மேலாக இருந்ததுடன், இந்த பாதிப்புக்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலானடுளுஆநுரூ மற்றும் நுண்பாக நிதிப் பிரிவில் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் ஊடாக எமது தொகுதியினுள் பன்முகத் தன்மையை ஏற்படுத்துவதற்கு எம்மை ஊக்குவித்தது

வாடிக்கையாளர் விருப்பம்

வாடிக்கையாளர்கள் நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கான நிதிச் சேவைகளில் டிஜிட்டல் பரிணாமம் தமது வாடிக்கையளர்னளுடன் நிதி நிறுவனங்கள் தொடர்புபடும் விதத்தை மாற்றியமைத்து வருகின்றது. சுய சேவைகள் மற்றும் டிஜிட்டல் வழிகளுக்கு விருப்பு மாற்றல் பற்று அட்டைகள், இணையத்தளம் மற்றும் நடைமுறை வங்கிப் பயன்பாடு தொடர்ச்சியாக அதிகரித்தல் என்பன வாடிக்கையாளர் பங்கேற்பிக்கான ஒரு தளமாக சமூக வலையமைப்பு பயன்பாட்டை அதிகரித்தல் ஊடாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

எமது மூலோபாயத்தினால் உணர்த்தப்படும் பொருள்

விசேடமாக நாம் வைப்புக்களைப் பொறுப்பேற்கும் ஒரு நிறுவனமாக இருப்பதனால் குழுமத்தின் டிஜிட்டல் பகுதியை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்துணர்ந்துள்ளோம். 2017 ஜுன் மாதம் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் குழுமத்தின் நவீன மையக் கருத்தைக் கொண்ட வங்கியியல் கட்டமைப்பின் பின்னர் தன்னியக்க 'டேலர்' வலையமைப்பில் முதலீடு செய்து நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நடமாடும் வங்கிச் சேவையினை மேற்கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதனிடையே இந்த அறிக்கையின் பிந்திய பகுதிகளில் கலந்துரையாடப்படும் பிரகாரம் வாடிக்கையாளர்களுடன் சமூக வலையமைப்பு ரீதியிலான பங்கேற்பினை நாம் பலப்படுத்தியுள்ளோம்.



மூலம் - இலங்கை மத்திய வங்கி

பங்குதாரர்களுடனான எமது பங்கேற்பு

G4-24,G4-25,G4-26,G4-27

எமது சகல பங்காளித் தரப்பினர்களின் நீண்ட காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எமது மூலோபாயங்கள் திட்டமிடப்படுவதனால் அந்தத் தரப்பினரை தொடர்ந்து இனங்காண்பதற்கான தேவை எமது மூலோபாயத்தை தயாரிப்பதில் முக்கிய கூறாகும். எமது பிரதான தரப்பினருடன் உயர் மட்ட பங்கேற்பு மற்றும் எமது மூலோபாய ரீதியிலான நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைப்பதற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களை நாம் பேணி வருவதுடன், எமது வர்த்தகச் செயற்பாடுகளை வழிநடாத்துகின்றோம்.

பங்கேற்கச் செய்வதற்காக தரப்பினரைத் தெரிவு செய்யும்போது எமது பெறுமதிகளை உருவாக்கும் நடவடிக்கை மீது அவர்களால் மேற்கொள்ள முடியுமான அழுத்தம் சம்பந்தமாக மற்றும் எமது செயற்பாடுகளின் ஊடாக மிகவும் அழுத்தத்திற்குட்படும் நபர்கள் சம்பந்தமாக உரிய கவனத்தை ஈர்ப்போம். கீழே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் எமது பங்காளித் தரப்பினரை இனங்கண்டு கொள்வதற்கு மற்றும் அவர்களிடமிருந்து கருத்துக்களை வினவுவதற்காக முறையான நடைமுறையொன்றை நாம் பயன்படுத்துகின்றோம்.

	பங்குரிமையாளர்கள் குழுமத்தின்பாரிய பங்குரிமையாளர் இலங்கை வங்கியாகும்.	வாடிக்கையாளர்கள் நாடு பூராவும் 190,000 வாடிக்கையாளர்களுக்கு நாம் சேவையாற்றுகின்றோம்	ஊழியர்கள் / தொழிற் சங்கம் 917 திறமையானவர்களை குழுமம் பணியிலீடுபடுத்தியுள்ளது.
அவர்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளும் விதம்	• வருடாந்த பொதுக் கூட்டம • ஆண்டறிக்கை • காலாண்டு நிதியறிக்கை • நிறுவனத்தின் இணையத்தளம் (தற்போதுள்ள) • ஊடக அறிவித்தல்கள் மற்றும் பத்திரிகைகள் • கலந்துரையாடல்(தற்போது நிலவும்)	• சகல வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் நேருக்கு நேரான தொடர்புகள் (தற்போது நிலவும்) • வாடிக்கையாளர் கணக்கெடுப்பு (தேவையேற்படும்போது) • முறைப்பாடுகளுக்கான தீர்வு (தற்போது நிலவும்) • வாடிக்கையாளர் செயலமர்வுகள் (தற்போது நிலவும்) • ஆண்டறிக்கை • நிறுவனத்தின் இணையத்தளம் (தற்போது நிலவும்) • மின்னஞ்சல் (தற்போது நிலவும்) • சமூக வலையமைப்பு (தற்போது நிலவும்)ரு	• செயற்திறன் மதிப்பீடு (வருடாந்த) • மனித வளங்கள் கொள்கை கோவை (தற்போது நிலவும்) • மாதாந்த அடிப்படையில் ஆளணிக்கான கூட்டம் (மாதாந்தம்) • தொழிற் சங்கக் கூட்டம் (தேவையேற்படும்போது) • சமூகத் தேவைப்பாடுகள் (தற்போது நிலவும்) • MBSL உள்ளக வலையமைப்பு (தற்போது நிலவும்) • அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் போன்ற எழுத்து மூலமான தொடர்பாடல் (முன்னெடுத்துச் செல்லப்படும்) • தேவையேற்படும்போது நேருக்கு நேர் கலந்துரையாடல் (முன்னெடுத்துச் செல்லப்படும்) • ஊடக அறிவித்தல்கள் (தற்போது நிலவும்) • நிறுவனத்தின் இணையத்தளம் (தற்போது நிலவும்)
ஆண்டில் எழுந்த பிரதான தலைப்புக்கள் மற்றும் கருத்துக்கள்	• ஒப்படைக்கும் ஆபத்துக்கு பொருத்தமான பெறுபேறு • ஈட்டல்களின் நிலையான விருத்தி • சிறப்பான நிர்வாகம் மற்றும் ஆபத்து முகாமைத்துவம் • வியாபாரத்தை விரிவுபடுத்தல் • வர்த்தக குறியீட்டை இனங்காணல் • பண்பாடு மற்றும் சமூகத்துக்கு பொறுப்புக்கூறும் பிரயோகம்	• போட்டி அடிப்படையிலான விலையில் நிதித் தீர்வுகள் • நிதியங்களின் பாதுகாப்பு (விசேடமாக வைப்பாளர்கள்) • சிறந்த வாடிக்கையாளர் சேவை • பெறுமதிசேர் சேவைகள் • நிதி அறிவு, கல்வி மற்றும் அறிவுறுத்தல்கள் • குறிப்பிட்ட சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இயைந்து நடத்தல்	• கவர்ச்சிகரமான நிதி மற்றும் நிதி சாரா செயற்பாடுகள் • நடவடிக்கைகள் • பண்பாடுமிக்க ஊழியர் பிரயோகம் • தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு • பயிற்சி மற்றும் அபிவிருத்தி • தொழில் பாதுகாப்பு • தொழில் - வாழ்க்கை சமநிலை • குறிப்பிட்ட சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இயைந்து நடத்தல்
எமது பதிலளிப்புக்கள்/ முகாமைத்துவப் பிரவேசம்	எமது மூலோபாயம், செயற்திறன் சம்பந்தமாக தொடர்ந்தேர்ச்சியான கட்டுப்பாடு மற்றும் முனைப்பான ஆபத்து முகாமைத்துவத்தை மிகக் கவனமாக செயற்படுத்துவதன் ஊடாக நிலையான பங்குரிமைப் பெறுமதியை ஏற்படுத்துவதற்கு நாம் முயற்சி மேற்கொள்கின்றோம். (பக்கம் 122 முதல் 131 வரை)	நாம் முடியுமான வரை வினைத்திறனுடன் சேவையாற்றுவதன் ஊடாக எமது வாடிக்கையாளர்களுடன் நீண்ட கால அடிப்படையிலான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதனை நாம் நோக்காகக் கொண்டுள்ளோம். (பக்கம் 52 முதல் 56 வரை பார்க்கவும்)	எமது ஊழியர்களுக்கு மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுமிக்க மற்றும் சவால் மிகுந்த சூழலொன்றை நாம் பெற்றுத் தருவோம். (பக்கம் 46 முதல் 52 வரை பார்க்கவும்)

எமது அளவு ரீதியிலான மூலோபாய சட்டகத்தை வரைவிலக்கணப்படுத்தல்

G4-02, G4-19, G4-20, G4-21, G4-23

எமது பங்காளிகளுடன் சம்பந்தப்பட்ட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பற்றி நாம் கலந்துரையாடுவதனை உறுதிப்படுத்துவதற்காக இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்கள் பற்றிய பகுப்பாய்வு சம்பந்தமாக முறையான நடவடிக்கைகளின் பின்னர் தீர்மானிக்கப்பட்டது. இந்த விடயங்கள் அளவு சார்ந்த விடயங்கள் என வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் இந்த அறிக்கையின் 23 ஆவது பக்கத்தில் விபரிக்கப்படும் பங்காளித் தரப்பினரின் பங்கேற்பு நடவடிக்கை ஊடாக இனங்காணப்பட்ட பெறுமதி மற்றும் பங்காளித் தரப்பினருக்கான சட்டகத்தை நிர்மாணிப்பதற்கு கம்பனியின் ஆற்றலின் அடிப்படையில் கணிசமானளவு அழுத்தம் ஏற்பட முடியுமான பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அளவு ரீதியிலான விடயங்கள் எமது மூலோபாயம் மற்றும் வியாபார நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதில் அத்தியாவசியமான அலுவலை மேற்கொள்கின்றது.

இந்த ஆண்டு எமது துறை மற்றும் பெறுமதி உருவாக்கத்திற்கான கம்பனியின் பிரவேசத்திற்கு விசேடமாக தொடர்புடைய பிரிவுகளை உள்ளடக்குவதற்காக GRI இனால் சிபாரிசு செய்யப்பட்ட பிரிவுகளுக்கு அப்பால் கவனம் செலுத்தி எமது அளவு ரீதியிலான மதிப்பீட்டு விடயப் பரப்பை நாம் விரிவு படுத்தியுள்ளோம். அத்துடன், தெரிவு செய்யப்பட்ட அளவு சார்ந்த பிரிவுகள் மற்றும் நேரொத்த GRI பிரிவுக்கிடையிலான தொடர்புகள் மற்றும் பிணைப்பை நாம் தெளிவாக இனங்கண்டுள்ளோம்.

அளவு சார்ந்த பிரிவுகளை இனங் காணல் ஊடாக பலம்மிக்க பங்காளித் தரப்பின் பங்கேற்பு (பக்கம் 23), எமது பெறுமதி நிர்மாணப் படிவத்தின் மதிப்பீடு (பக்கம் 18) மற்றும் செயற்பாட்டு சூழலின் போக்கு (பக்கம் 19) பின்பற்றப்படும். அதன் பின்னர் இனங்காணப்பட்ட பிரிவுகள் பங்காளித் தரப்பினருக்கு முக்கியத்துவமானது மற்றும் அழுத்தங்களின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் தரப்படுத்தப்படும்.



இல.	அளவு சார்ந்த துறை	உரிய GRI பிரிவு	பிரிவு வரையறை	முக்கியத்துவத்தின் மாற்றம் (இருப்பின்)
	மூலோபாய ரீதியிலான கவன ஈர்ப்புத் துறை : அதிகரிப்பு			
1	நிதிசார் செயற்திறன்	பொருளாதார செயற்திறன்	உள்ளக	-
2	சந்தையை அணுகுதல்	மறைமுக பொருளாதார அழுத்தம், உற்பத்திகள் தொகுதி	வெளிவாரி	
3	செயல்பாட்டு வினைத்திறன்	-	உள்ளக	
	மூலோபாய ரீதியிலான கவன ஈர்ப்புத் துறை : சிறந்த வாடிக்கையாளர் தொடர்புகள்			
4	சேவை வழங்கல்		உள்ளக , வெளிவாரி	-
5	தொகுதி பல்வகைமையாக்கல்		உள்ளக , வெளிவாரி	▲
6	பொறுப்புடனான கடன் வழங்கல்	உற்பத்தி லேபல்கள், சந்தைத் தொடர்பாடல்	உள்ளக , வெளிவாரி	-
7	வாடிக்கையாளர் இரகசியம் பேணல்	வாடிக்கையாளர் இரகசியம் பேணல்	உள்ளக	-
	மூலோபாய ரீதியிலான கவன ஈர்ப்புத் துறை : பல்வேறு திறமைகளைக் கொண்ட ஆளணியை உருவாக்குதல்			
8	பயிற்சி மற்றும் அபிவிருத்தி	பயிற்சி மற்றும் அபிவிருத்தி	உள்ளக	▲
9	ஊழியர் பங்கேற்பு	-	உள்ளக	-
10	தொழிலாளர் விவகாரம்	பல்வகைமை மற்றும் சம வாய்ப்பு சம ஊதியம்" ஊழியப் பயன்பாடு, சிறப்பான தொழில், குறை தீர்த்தல், தொழிலாளர் முகாமைத்துவம்	உள்ளக	-
11	சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	உள்ளக	-
	மூலோபாய ரீதியிலான கவன ஈர்ப்புத் துறை : கட்டுப்பாடு மற்றும் ஆபத்து முகாமைத்துவம்			
12	ஆபத்து முகாமைத்துவம்	கணக்காய்வு	உள்ளக	-
13	நல்லாளுகை	ஊழல் எதிர்ப்பு	உள்ளக	-
14	இணங்கிச் செல்லல்		உள்ளக	-
	மூலோபாய ரீதியிலான கவன ஈர்ப்புத் துறை : பேண் தகைமை மற்றும் நிறுவன, சமூக பொறுப்பு			
15	எமது சூழல் சார்ந்த தாக்கத்தைக் குறைத்தல்	சக்தி வளம், கழிவுகள் மற்றும் கழிவகற்றல், நீர், அகற்றல் உரிமை	உள்ளக , வெளிவாரி	-
16	பிரஜைகள் பங்கேற்பு	-	வெளிவாரி	-

மூலோபாயத் திட்டம்

ஆண்டிற்கான கம்பனியின் மூலோபாயத் திட்டமானது விரிவான பங்காளித் தரப்பினரின் பங்கேற்பு மற்றும் கம்பனியின் பெறுமதி உருவாக்கல் படிவத்தில் விசேட சக்திகளை மதிப்பீடு செய்ததன் பின்னர் தயாரிக்கப்பட்டது. பெறுமதியை உருவாக்குவதற்காக எமது ஆற்றலுக்கு அழுத்தம் கொடுக்க முடியுமான வாய்ப்புக்கள் மற்றும் ஆபத்துக்களை முன்வைக்கும் செயற்பாட்டுச் சூழலில் ஏற்படும் போக்குகள் ஊடாக மூலோபாயம் தெளிவுபடுத்தப்படும்.



2016 இல் கம்பனியின் மூலோபாய நடவடிக்கைகள் அதன் 2015 மூலோபாயதத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதாக அமைந்திருந்ததுடன், கீழே தெளிவுபடுத்தப்படும் பிரகாரம் நான்கு பிரதான படி நிலைகளில் அமைக்கப்பட்டுள்ளது. எமது உற்பத்தித் தொகுதியை விரிவுபடுத்தல் மீது மற்றும் புதிய சந்தை வாய்ப்புக்களை நோக்கிச் செல்லல் மீது கவனம் செலுத்தியதனால்ஆண்டில் வளர்ச்சி முன்னணி விடயமாகக் கொள்ளப்பட்டது. வாடிக்கையாளர் பங்கேற்பு மற்றும் வாடிக்கையாளர்களை அதிகரிப்பதற்கு கம்பனிக்கு முடியுமான வகையில் தொடர்ச்சியான வாடிக்கையாளர் சேவை மீது ஊழியர்களின் கல்வி மற்றும் திறமைகளை வளர்ப்பதன் மூலம் முதலீட்டின் ஊடாக சிறப்பான வாடிக்கையாளர் தொடர்பு பேணப்பட்டது. ஊழியர்கள் எமது மூலோபாயத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்போது முக்கிய அலுவலை நிறைவேற்றுகின்றனர். கணிசமான அளவு முதலீட்டை இலக்காகக் கொண்டதும், திறமைகளை முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகள் பயிற்சியின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன், தொழில் சார் முன்னேற்றம் மற்றும் பதிலீட்டுத் திட்டம் எமது உயர் திறமை கொண்டவர்களை தக்க வைத்துக்கொள்வதற்காக திருத்தியமைக்கப்பட்டது. சந்தையில் குறைந்தளவு சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பிரிவுகளுக்கு நிதி வழங்கல் மற்றும் நாம் நடைமுறைப்படுத்தும் பிரஜைகளின் நிலையான அபிவிருத்திக்கு பங்களித்தல் மீது விசேட கவனத்துடன் எமது வர்த்தகத்தின் சகல பிரிவுகளிலும் பேண்தகு தன்மை சம்பந்தமாக கவனம் செலுத்துவதற்கு நாம் முயற்சி மேற்கொள்கின்றோம். இந்த மூலோபாய குறிக்கோள்களுக்கமைய கம்பனியின் செயற்திறன் இந்த அறிக்கையின் பற்பகுதியில் கலந்துரையாடப்படும்.



பேண்தகைமைக்கான எமது அணுகு முறை

சகல நிரந்தர ஊழியர்களுக்கும் திறந்த அடிப்படையில் கலந்துரையாடுவதற்கு, பயிற்சிக்கான வாய்ப்புக்களை இனங்கண்டு கொள்வதற்கு மற்றும் செயற் திறன் விருத்திக்காக பயன்மிக்க மறுமொழியை வழங்குவதற்கான வாய்ப்பை வழங்கி குறைந்தது வருடாந்த அடிப்படையில் அவர்கள் மதிப்பீட்டுக்கு உடபடுத்தப்படுகின்றார்கள். திணைக்களங்கள் மற்றும் பிரதேச ரீதியிலான இலக்குகள் ஆண்டுதோறும் ஆண்டின் ஆரம்பத்தில் நிறுவனத்தின் வணிகத் திட்டத்தின் அடிப்படையாகக் கொண்டு ஒப்படைக்கப்படுவதுடன் இந்த இலக்குகளுக்கமைய செயற்திறன் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றது.

ஆண்டினுள் உயர் செயற்திறனைக் கொண்ட ஊழியர்களுக்காக தொழில் முன்னேற்றம் சம்பந்தமான தெளிவான வழிகாட்டலை உருவாக்கும் நோக்கத்துடன் கம்பனியின் பதவி உயர்வுக் கொள்கையை திருத்தியமைத்தோம். அதற்கமைய, தற்போது பதவி உயர்வுக்கான தகைமை இரண்டு வழிகளில் ஏற்படுகின்றது. கல்வி மற்றும் தொழிற் தகைமைகளை சிறப்பான வகையில் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு பொதுவான பதவி உயர்வு வழங்கப்படுவதுடன், உயர் செயற் திறனைக் கொண்டுள்ள ஊழியர்களுக்கு திறமையை அடிப்படையாகக் கொண்ட பதவி உயர்வுகள் வழங்கப்படும். இதனூடாக சிறப்பாக பணியாற்றுபவர்களுக்கு துரிதமாக பதவியில் முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு முடியுமாக இருப்பதுடன், அடுத்த பரம்பரையின் தலைவர்களை உருவாக்குவதற்கு திறமையை அடிப்படையாகக் கொண்ட வழிமுறையை அபிவிருத்தி செய்வதற்கு கம்பனிக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆண்டினுள் நிறைவேற்று தர ஊழியர்கள் 04 பேர் முகாமைத்துவ தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டதுடன், ஏனைய தரங்களில் பணியாற்றிய 06 பேர் நிறைவேற்று தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

பயிற்சி மற்றும் அபிவிருத்தி

G4-LA09,G4-LA10

கம்பனியின் ஊழியர் பெறுமதிப் பங்கின் அடிப்படையாக ஊழியர்களின் ஆற்றல் விருத்தி காணப்படுவதுடன் பல்வேறு உள்வாரி, வெளிவாரி மற்றும் சர்வதேச பயிற்சி வாய்ப்புக்களை நாம் வழங்கியுள்ளோம். 2016 இல் கம்பனியின் இடைக் கால மூலோபாயத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவைப்படும் விசேட திறமைகளைக் கொண்ட ஊழியர்களை உருவாக்குவதனை நோக்காகக் கொண்டு தேவையான பயிற்சித் திட்டங்களை இனங்காணல் மற்றும் பல்வேறு பயிற்சித் திட்டங்களை நடாத்துதல் மீது நாம் கவனத்தைச் செலுத்தினோம். பயிற்சியளிப்பு சம்பந்தமான

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

மனித வள மூலதனம்

மதிப்பீடொன்றையும் ஆண்டில் அறிமுகஞ் செய்ததுடன் அதனூடாக ஊழியர்களுக்கு குறிப்பிட்ட பயிற்சித் திட்டங்களின் விளைதிறன் சம்பந்தமான பதிலிறுப்பை அளிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆண்டினுள் நடாத்தப்பட்ட சில பயிற்சித் திட்டங்கள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

	இலக்காகக்கொள்ளப்பட்ட திறமை	விபரம்	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை	பயிற்சி மணித்தியாலங்கள்
உள்வாரிப் பயிற்சி	தலைமைத்துவ ஆற்றல் விருத்தி	தலைமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஆற்றல் விருத்தி செய்தல் தொடர்பாக முகாமைத்துவப் பணியாட் தொகுதிக்கான 02 நாள் வதிவிட செயலமர்வு	143	2,002
	வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம் மற்றும் உற்பத்திப ற்றிய அறிவு	புதிய சந்தைப்படுத்தல் ஊழியர்களுக்கான பயிற்சியை அடிப்படையாகக்கொண்ட மொடியூல்	105	840
	சட்ட ரீதியான இணக்கப்பாடு, கடன் மற்றும் அறவீடுகள்	கடன்களை அறவிட்டுக்கொள்ளும் பணியாட் தொகுதி ஊழியர்களுக்கு கடன் மற்றும் அறவிடலுடன் தொடர்பான சட்ட ரீதியிலான பிரச்சினைகள் சம்பந்தமான அறிவை விருத்தி செய்தல்.	345	2,760
	நிதிப் பகுப்பாய்வு பிணையை மதிப்பீடு செய்தல், கலந்துரையாடல் ஆற்றல் உட்பட கடன் மதிப்பீட்டு ஆற்றல்	கிளை முகாமையாளர்கள் மற்றும் கடன் பிரிவு உத்தியோகத்தர்களை இலக்காகக் கொண்ட கடன் பற்றிய பயிற்சி	75	6,600
	மூலோபாய ரீதியிலான திட்டமிடல்கள்	நிறுவனத்தின் தற்போதைய மூலோபாய ரீதியிலான திட்டமிடல்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக உயர் மட்ட செயலமர்வுகள்	93	744

மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சிகள் தவிர இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், இலங்கை மத்திய வங்கியின் வங்கியியல் கற்கை நிலையம் பணியாளர்கள் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் என்பன இணைந்து நடாத்திய பல்வேறு வெளிவாரிப் பயிற்சித் திட்டங்களில் ஊழியர்கள் கலந்துகொள்ளச் செய்யப்பட்டுள்ளனர்.

பயிற்சி பற்றிய புள்ளி விபரம்

G4-LA11, G4- HR02

ஆண்டில் ரூபா 14.62 மில்லியன் மொத்த முதலீட்டுடன் 18,395 மணித்தியாலப் பயிற்சிக்காக 1382 ஊழியர்கள் கலந்துகொண்டனர். ஒரு ஊழியருக்கு சுமார் 20 மணித்தியாலப் பயிற்சி வழங்கப்பட்டதுடன் அது கடந்த ஆண்டினைப் பார்க்கிலும் 57% அதிகரிப்பாகும்.

ஊழியர் பயிற்சி



பயிற்சி வகை	கலந்துகொண்ட எண்ணிக்கை		பயிற்சி மணித்தியாலம்	
	2016	2015	2016	2015
உள்வாரி	1,279	1,121	17,364	9,940
வெளிவாரி	102	86	919	952
வெளிநாட்டு	1	6	112	208
	1,382	1,213	18,395	11,100

உள்ளகப் பயிற்சி வாய்ப்பு

G4-LA10

தொழில் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பட்டதாரிகள் மற்றும் மாணவர்களுக்கு MBSL இல் உள்ளகப் பயிற்சி அளிக்கப்படும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக கம்பனி செயற்பாடுமிக்க மற்றும் பெறுமதிமிக்க பெறுபேறுகளை வழங்கும் சூழலில் செயன்முறை அலுவலக சேவை அனுபவத்தை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்.ஆண்டினுள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மாணவர்களுக்கு 32 உள்ளகப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

நிறுவனம்கூ பல்கலைக்கழகம்	2016	
	ஆண்	பெண்
இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம்,	6	9
இலங்கை கணக்கியல் கற்கை நிறுவனம்	-	3
தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபை	-	1
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	-	1
ரஜரட்ட பல்கலைக்கழகம்	1	-
வணிக முகாமைத்துவம் பற்றிய தேசிய நிறுவகம்	-	1
ஏனையவை	1	9
மொத்தம்	8	24

தொழிற் சங்கத் தொடர்புகள்

G4-11,G4-EC5, G4- EC6, G4-LA04,G4-LA08

எமது ஊழியர்களுக்கு ஒன்றாகக் கூடுவதற்கான சுதந்திரத்தை நாம் ஏற்றுக்கொள்வதுடன், எமது ஊழியர்களில் 47% ஆனோர் இலங்கை வங்கி தொழிற் சங்கத்தில் MBSL கிளையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள். அடுத்துவரும் 03 வருடங்களுக்காக கூட்டு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கு எமது தொழிற் சங்கங்களுடன் நாம் செயற்பாடு ரீதியாக நடவடிக்கை மேற்கொண்டதுடன், பயன்மிக்க மற்றும் நட்பு ரீதியிலான தொடர்புகளை தொடர்ந்தும் பேணி வருகின்றோம். ஆண்டினுள் தொழிற் சங்க நடவடிக்கைகளினால் சேவைகளுக்கு எவ்விதப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

செயற்பாட்டு மாற்றங்களுக்காக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் மிகக் குறைந்த அறிவித்தல் காலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

	2016
ஓய்வு	3 மாதம்
இராஜினாமா - சேவை முடிவுறுத்தல்	3 மாதம்

குறைகேள் பொறிமுறை

G4-57, G4-58, G4-LA16,G4-HR12

ஊழியர்களுக்கு அவர்களது கருத்துக்களை தெரிவிப்பதற்காக கட்டமைக்கப்பட்ட மற்றும் முறையான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் பொறிமுறையொன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த செயன்முறையை பெயரளவில் உறுதிப்படுத்துவதுடன் ஊழியர்களின் குறைகளை தீர்ப்பதற்காக விசேட அலுவல்கள் மற்றும் பொறுப்புக்கள் விதிக்கப்படுகின்றன.

ஊழியர்களைத் தக்க வைத்துக்கொள்ளல்

G4-LA03

ஊழியர்களின் பங்கேற்பை பலப்படுத்துவதற்கான எமது முயற்சிகள் தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களை அதிகரித்துள்ளதுடன், பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் தொடர்ச்சியான முதலீடு காரணமாக வருடத்தினுள் சுமார் 85% ஆன ஊழியர் இருப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியுமாகியது.

வயது மற்றும் பால் அடிப்படையிலான ஊழியர் புரள்வு



முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

மனித வள மூலதனம்

மாகாணம் மற்றும் ஆண் பெண் அடிப்படையில் ஊழியர் விலகல் / தொழிலாளர் புரள்வு



இதற்கிடையில் சேவை இலகு சூழல் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் பெண் ஊழியர்களை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கான கம்பனியின் முயற்சியை சுட்டிக் காட்டி பிரசவ விடுமுறையின் பின்னர் ஊழியர்கள் வருகை தருவது குறிப்பிட்டுச் சொல்லத் தக்க அளவினால் வளர்ச்சி அடைந்தது.

	2016	2015
பெண் ஊழியர்கள் மொத்த எண்ணிக்கை	346	312
பிரசவ விடுமுறை பெற்றுக் கொண்டோர்	16	8
பிரசவ விடுமுறையின் பின் வேலைக்கு வருகை தந்தோர் எண்ணிக்கை	13	4
வேலைக்கு வருவோர் % (பிரசவ விடுமுறையின் பின்னர் வேலைக்கு வருகை தந்தோர் / பிரசவ விடுமுறையில் சென்றோர் எண்ணிக்கை)	81%	50%

சமூகத் தொடர்பு மூலதனம்

எமது தரப்பினரின் தேவைகளை உணர்ந்து கொள்ளல் மற்றும் அவற்றுக்கு செயல் ரீதியாக துலங்களை வெளிப்படுத்துதல் எமது பெறுமானங்களை உருவாக்கிக் கொள்வதற்கு தேவைப்படுவதுடன் எமது தரப்பினருடன் தொடர்புகளை அதிகப்படுத்திக் கொள்வதற்காக மற்றும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சந்தர்ப்பங்களை தொடர்ச்சியாக தேடுகிறோம்.

	2016	2015	வருடாந்த %
ஈடுபடுத்தல்			
மொத்த கொடுக்கல் வாங்கல் அடிப்படை	198,824	138,895	43
மக்கள் தொடர்பு			
எமது வினியோகத்தர்களுடன் பங்காற்றல்			

பெறுமதி சேர் சேவைகள்

- புத்தாக்க அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் சேவைகளை இலக்காகக் கொண்ட கலாசாரம்
- மக்கள் பங்குபற்றலினுள் தொடர்ச்சியான முதலீடு

பிரயோகம்

	2016	2015	வருடாந்த %
பெற்றுக் கொடுக்கப்பட்ட கடன் எண்ணிக்கை	33,725	19,033	77
உருவாக்கப்பட்ட புதிய வைப்புக்கள்	45,170	31,576	43

கம்பனியின் சமூக தொடர்பு மூலதனத்தின் அடிப்படை அம்சமாவது

வாடிக்கையாளர் பங்களிப்பு

G4-PR5

வாடிக்கையாளர் கள ஆய்வு, நேருக்கு நேர் மத்தியஸ்தம் வகித்தல், வாடிக்கையாளர் அவசர தொலைபேசி சேவை மற்றும் நிறுவன வலைத் தளம் மற்றும் முகப்புப் புத்தகம் மற்றும் லின்க்டின் உட்பட சமூக வலைத் தளங்கள் உட்பட பல்வேறு வகையான அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் தொடர்பாடல் செய்வதன் மூலம் வாடிக்கையாளர்களுடன் உயர் மட்டத்திலான தொடர்புகளைப் பேணி வருகிறோம். இவ்வாறான பங்களிப்பு பொறிமுறையின் மூலம் பெற்றுக்கொள்கின்ற துலங்கல்களை எமது சந்தைப்படுத்தல், வாடிக்கையாளர் சேவை மற்றும் உற்பத்தி அபிவிருத்தி மூலோபயங்களுக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகிறது.

சமூக ஊடகங்களின் பங்களிப்பு

வணிகப் பெயரை பிரபல்யப் படுத்தும் நோக்கில் புதிய முகப்புப் புத்தக பக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து வருடத்தினுள் MBSL மற்றும் அதன் சமூக வலைத் தளங்களின் நிலைப்பு உறுதிப்படுத்தப்பட்டது. அந்தப் பக்கத்தினுள் உள்ள வழங்குதல்கள், உற்பத்தி விடயங்கள் மற்றும் எதிர் காலத்திலும் நிகழ்காலத்திலும் உள்ள வாடிக்கையாளர்களுடன் தொடர்புடைய ஏனைய தகவல்கள் உள்ளன. எமது முகப்புப் புத்தக தளத்தின் வாசகர்களுக்கு அவர்கள் பெருமளவில் பங்களிப்புச் செய்த வினா விடைப் போட்டி ஒன்றையும் நாம் ஏற்பாடு செய்திருந்தோம். 2016 இறுதி ஆகும் போது எமது பக்கத்திற்காக விருப்புக்களின் எண்ணிக்கை 6100 ஐத் தாண்டி இருந்தது.

வாடிக்கையாளர் விபரங்கள்

வணிக மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியின் பல்வேறு சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு உதவுவதை இலக்காகக் கொண்ட மொத்த செலவில் ஒரு பகுதியின் மூலம் தீவு முழுவதும் தனி நபர், நிறுவன மற்றும் சிறு மற்றும் மத்திய தர அளவு கடன் வாடிக்கையாளர்கள் 69,347 பேருக்கு நாங்கள் சேவையை வழங்கி உள்ளோம். 2016 ல் சேவை வழங்கப்பட்ட கடன் வாடிக்கையாளர்களில் 36% அதிகரிப்புக்கு உள்ளாக்கி எமது கொடுக்கல் வாங்கல் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கைக்கு 33,681 பேரை நாம் இணைத்துக் கொண்டோம். அவ்வாறே, MBSL கவர்ச்சிகரமான நிலையான மற்றும் சேமிப்பு வைப்பு உற்பத்திகள் தொகுதி ஒன்றினால் 130000 க்கு மேற்பட்ட வைப்பு வாடிக்ககையாளர்களுக்கு சேவை வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள் அவர்களின் தொழில் தெளிவின் அடிப்படையில் அதாவது விவசாயம், மீன் பிடி, பால் உற்பத்தி மற்றும் சிறு கைத் தொழில் என்ற அடிப்படையில் வேறுபடுகிறது.

சங்க அங்கத்துவங்கள்

G4-16

- இலங்கை வங்கியலாளர் சங்கம்
- இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம்
- இலங்கை மத்திய வங்கி
- கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
- இலங்கை பிணைப் பத்திரங்கள் மற்றும் செலாவணி ஆணைக் குழு
- இலங்கை குத்தகை சங்கம்
- இலங்கை வணிகர் சம்மேளனம்
- இலங்கை கடன் தகவல்கள் பணியகம்
- கம்பனி பதிவாளர் திணைக்களம்
- அரச முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தர நிர்ணய சபை

கடன் வழங்கிய வாடிக்கையாளர்கள்



நிலையான வைப்பு வாடிக்கையாளர்கள்



கடன் கொத்தினை மாகாண அடிப்படையில் பிரித்து காட்டுதல்



முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு
சமூக மற்றும் தொடர்பு மூலதனம்

மொத்த வைப்புக்களை மாகாண அடிப்படையில் பிரித்துக் காட்டுதல்



வாடிக்கையாளர்கள்



மாகாணங்கள்	வாடிக்கையாளர் சேவை நிலையங்கள்
தெற்கு	6
கிழக்கு	4
வட மத்திய	5
மேல்	20
ஊவா	2
வடமேல்	4
மத்திய	4
சப்ரகமுவ	2
வடக்கு	2

வாடிக்கையாளர் பிரவேசிக்கும் தகைமை

சில வருடங்களுக்கு முன்னர் ஆக்கிரமிப்பு பாணியிலான கிளை பரப்பலுடன், 2015 ஆம் ஆண்டில் ஒன்றிணைக்கப்பட்தன் பின்னர் தீவின் 9 மாகாணங்களிலும் பிரதான அலுவலகங்கள் உட்பட சேவை நிலையங்கள் 49 ஐ தற்போது MBSL நிறுவனம் நடாத்தி வருகிறது. எமது வாடிக்கையாளர்கள் அண்ணளவாக தீவு முழுவதும் 600 கிளைகளுடன் கூடிய எமது நிர்வாக கம்பனியானின் பரந்த வலையமைப்பின் கீழ் கடன்களை மீளச் செலுத்துதல், காசு மற்றும் காசோலைகளை வைப்புச் செய்தல், மற்றும் ஸ்லிப் கணக்குகள் போன்ற எமது வரையறுக்கப்பட்ட சேவைகள் பலவற்றை பெற்றுக் கொள்வதற்கு முடியுமாகவுள்ளது. எமது வாடிக்கையாளர்கள் 2017 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும் மத்திய வங்கித் தொகுதியை நடைமுறைக்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து, கொமர்ஷல் வங்கியின் பரந்த டெலர் இயந்திரங்களின் உதவியுடன் பணப் பரிமாற்றல்களைச் செய்ய முடியும். சுய சேவைப் பகுதியை ஸ்திரப்படுத்துவதற்காக வாடிக்கையாளர் உள்வாங்கல் மற்றும் இலகு தன்மையை அதிகரிக்க நாங்கள் எதிர்பார்க்கினறோம்.

வாடிக்கையாளர் கல்வி மற்றும் நிதிப் பாய்ச்சல்

G4-SO1,G4-SO2,G4-SO4,

நிதிப் பாய்ச்சல் தொடர்பில் தேசிய சமூக பொருளாதார இலக்குகள், வலய அபிவிருத்தி மற்றும் மகளிர் வலுவூட்டல், என்பவற்றுடன் இயைபாகச் சென்று எமது கட்டமைப்பில் பயிற்சி வேலைத் திட்டங்கள் மூலம் எமது நுண் நிதி வாடிக்கையாளர்களிடையே நிதி ஒழுக்கத்தையும், பயிற்சியையும் வலுப்படுத்துவதன் மூலம் MBSL தொடர்ச்சியாக முதலீடு செய்கின்றது. “சயத் சவிய” வேலைத் திட்டம் அத்தியாவசிய அங்கமாக முன்னெடுத்துச்சென்று, தீவு முழுவதும் இந்த வேலைத் திட்டத்தின் மூலம் சேமிப்பு, முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் நிதி முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய பல விடயங்கள் தொடர்பில் MBSL ஊழியர்கள் மற்றும் வெளிவாரியான நிபுணத்துவம்மிக்கவர்கள் மூலம் உரைகளும், கருத்தரங்குகளும் நிகழ்த்தப் பட்டன. வருடத்தினுள் எதிர்கால பெண் முயற்சியாளர்கள் மற்றும் MBSL இன் நுண் நிதி வாடிக்கையாளர்கள் 110 பேரின் பங்களிப்புடன் மொனராகலையில் அவ்வாறான நிகழ்வு ஒன்றை நிகழ்த்தி கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து நாம் செயற்பட்டோம்.

பொறுப்பான கடன் வழங்கும் முறைகள் / பயிற்சிகள்

G4-SO8, G4-PR2,G4- PR3, G4- PR4, G4-PR6,G4-PR9

எமது உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கு உரிய நியமங்கள்மற்றும் நிபந்தனைகள் சகல வாடிக்கையாளர்களுக்கும் தெளிவாக விளங்க வைக்கப் படுகின்றது என்பதற்கு நாம் உத்தரவாதம் அளிக்கின்றோம். கடன் மற்றும் வைப்புக்களின் மீதான வட்டி வீதங்கள், நாணய மாற்று விகிதங்கள் மற்றும் ஏனைய நியமங்கள் போன்ற உரிய தகவல்கள் சகல வாடிக்கையாளர்களுக்கும் நாம் தெளிவாக தொடர்பாடல் செய்கிறோம். CBSL தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்களுக்கு இயைபுடையதான தெளிவான உற்பத்தி சகல வாடிக்கையாளர்களுக்கும் பெற்றுக் கொளவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்பு முகாமையாளர்கள் உற்பத்திகளின் இயல்பு, செலவினக் கட்டமைப்பு, நன்மைகள், மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஏதேனும் தகவல்கள் இருப்பின் எதிர்கால மற்றும் நிகழ்கால வாடிக்கையாளர்களுக்கு தெளிவுபடுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளார்கள். வருடத்தினுள் உற்பத்தி மற்றும் சேவைகளுக்கான விதிமுறைகள் மற்றும் ஏனைய வழி காட்டல்களுக்கு அமைவாக அமையாத சந்தர்ப்பங்கள் அமையவில்லை.

எமது கம்பனி, கம்பனியின் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் செம்மை உரிய விதிமுறைகளின் தேவைப்பாடுகள் மற்றும் வணிகப் பெயர் வழிகாட்டியின் அடிப்படையில் உள்ளது என்பதை உத்தரவாதப்படுத்துவதற்கு நாம் கட்டமைக்கப்பட்ட அனுமதிக்கும் செயற்றிட்டம் ஒன்றை பின்பற்றுகிறோம். வருடத்தினுள் சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களுக்கு உரிய விதிமுறைகள், தொண்டர் கோவை அல்லது ஏனைய வழிகாட்டிகளுக்கு இயைபில்லாத சந்தரப்புங்கள் எவையும் இல்லை.

வாடிக்கையாளர் இரகசியத் தன்மை.

G4-PR07, GR-PR08

நிதி நிறுவனம் ஒன்று எமது வாடிக்கையாளர்களின் நிதி மற்றும் தனிப்பட்ட தகவல்களை வழங்கும் போது எமக்கு பாரிய பொறுப்பு ஒன்று உள்ளது என்பதை நாம் தெளிவாக உணரந்துகொண்டுள்ளோம். 2016 ஆம் ஆண்டில் எமது தரவுத் தளங்களில் தீச் சுவர் மற்றும் அறிக்கையிடும் திறன் வலுப்படுத்தப்படுவதற்கு நாம் முதலீடு செய்ததுடன், தகவல் தொடர்பாடல் கொள்கை CBSL அடிப்படை ரேகை பாதுகாப்பு நியமங்களுக்கு ஏற்புடையதாக மாற்றப்பட்டது. கம்பனியினுள் தகவல் தொடர்பாடல் பாதுகாப்பு கவுன்சில் ஒன்றும் நடைமுறையில் உள்ளதுடன், அதன் மூலம் தகவல்கள் பாதுகாக்கப்படுவதின் வளர்ச்சிகள் முறையாக கலந்தாலோசிக்கப்படுகிறது. வருடத்தினுள் வாடிக்கையாளர் இரகசியத் தன்மைக்கு உரிய விதிமுறைகள், தொண்டர்க் கோவை மற்றும் ஏனைய வழிகாட்டிகளுக்கு இயைபில்லாத சந்தர்ப்பங்கள் பதிவு செய்யப்படவில்லை.

வாடிக்கையாளர் முறைப்பாடுகள்

G4-SO11

சகல வாடிக்கையாளர் முறைப்பாடுகளையும் முறையாக தீர்த்து வைப்பதற்காக முறைப்பாட்டு தீர்வளிக்கும் நடைமுறை ஒன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது. வாடிக்கையாளர்களுக்கு அழைப்பு நிலையங்கள் மூலம் அல்லது சகல கிளைகளிலும் உள்ள ஆலோசனைப் பெட்டி மூலம் தமது முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. கிடைக்கப் பெறும் சகல முறைப்பாடுகளும் அறிக்கையிடப்படுவதுடன், துலங்கல்களுக்காக வாடிக்கையாளர் சேவைப் பிரிவுக்கு அனுப்பப்படும். செயற்பாடு மற்றும் தரத்தை அதிகரித்துக் கொள்வதற்காக துறைகளை இனம் கண்டு கொள்வதற்காக முறைப்பாட்டுத் தரவுகள் பிற்காலத்தில் பகுப்பாய்வு செய்யப்படும்.

MBSL இன் தொடர்பாடல் நிலையம் மற்றும் வாடிக்கையாளர் சேவை நிலையம் என்பன வாடிக்கையாளர்களின் சகல முறைப்பாடுகள் தொடர்பிலும் தேடிப்பார்ப்பதுடன், சேவைகளின் தரத்தினனை மேம்படுத்துவதற்காக இவை பிற்காலத்தில் பகுப்பாய்வு செய்யப்படும். கம்பனி அதன் சேவை வழங்கும் அளவை அதிகரிப்பதில் கவனம் செலுத்தியுள்ளமையால் கடந்த சில ஆண்டுகளில் வாடிக்கையாளர் முறைப்பாடுகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

வியாபார பங்காளர்கள்.

G4-12, G4-13,G4-EC9, G4-HR6

MBSL மூலப் பொருள் வினியோகத்தர்களில் இருந்து பயன்பாட்டு சேவைகள் வழங்குனர்கள் மற்றும் சொத்துக்களை வினியோகிப்பவர்கள் வரையான பரப்பினுள் பல்வேறு தரப்பினரின் சேவைகளைப் பெற்றுக் கொள்கின்றோம். கம்பனியின் கேள்வி மனுச் செலவில் அண்ணளவாக 99மூ உள்நாட்டு வழங்குனர்களாகும்.

இலஞ்சம் மற்றும் ஊழல் சந்தரப்பங்கள் தரப்படுத்துதல் மற்றும் தெளிவான செயற்பாட்டின் மூலம் குறைத்துக் கொள்ளப்படும் என பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ள விலை மனு கையேடு உத்தரவாதம் அளிக்கிறது. கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்கள் வினைத் திறன் மிக்க முறையில் செயற்படுத்தப்படுவதற்கு விஷேட விலை மனுக் குழு ஒன்றும் செயற்பாட்டில் உள்ளது. பகிரங்க டென்டர் வருடாந்தம் கோரப்படுவதுடன், விநியோகத்தர்கள் தெரிவு செய்யப்படும் செயன் முறையின் நேர்மையை உறுதிப்படுத்தி முற்று முழுதாக சுயாதீனமான தரப்பினரால் மேற்கொள்ளப்படுகிறது. தெரிவு செய்யப் பட்ட விநியோகத்தர்கள் மத்திய தரவு அடிப்படையில் பதிவு செய்யப்படுவார்கள்.

நிறுவனத்தின் தேவைகளின் அடிப்படையில் பொது ஒப்பந்தப் பணி

நிறுவனத்தின் தேவைகளின் அடிப்படையில் பொது ஒப்பந்தப் பணி

விநியோகஸ்தர்களை பதிவு செய்தல்

கொள்வனவின் அளவு அடிப்படையிலான அனுமதி மற்றும் அதிகாரம் வழங்குதல்

மக்கள் தொடர்புகள்

G4-S01

பல வருடங்களாக நாம் போசித்துள்ள மக்கள் தொடர்புகள் எமக்கு செயற்படுவதற்காக பலத்தை அளிப்பதுடன், நாம் இயங்குகின்ற மக்களுக்கு நிலையான பெறுமானத்தை அளிப்பதற்கும் எமக்கு சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. பணிப்பாளர் சபை கம்பனி மூலம் மேற் கொள்ளப்படும் சகல மக்கள் பங்களிப்பு வேலைத் திட்டங்கள் அதன் நிலையான இலக்குகளுக்கு பரந்த அளவில் பொருந்துகின்றது என்பதை உறுதிப்படுத்தும் கடப்பாட்டைக் கொண்டுள்ளது. இங்கு செயற்றிட்டத்தை தெரிவு செய்தல், வினைத் திறன் மிக்க முறையில் செயற்படுத்துதல் மற்றும் செயல் அடைவை ஒழுங்கமைத்தல் போன்ற பொறுப்புக்கள் நிறுவன முகாமைத்துவ சபையின் பொறுப்பாகும். வருடத்தினுள் கல்வி, முயற்சியாண்மை அபிவிருத்தி போன்ற இரு விசேட துறைகள் தொடர்பில் எமது நிறுவன சமூகப்பொறுப்புக்களில் கவனம் செலுத்தப்பட்டதுடன், செயற்பாடு மற்றும் உபாய மார்க்க முறைகளில் மக்களுடன் பங்களிப்புச் செய்வதற்கு நாம் முயற்சிக்கினறோம்.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு
சமூக இடைத் தொடர்பு மூலதனம்.

முயற்சியாண்மை அபிவிருத்தி

எமது நுண் நிதி வேலைத் திட்டமான "சியத சவிய" நட்ட அபாயம் காரணமாக நிதி தொடர்பான ஏனைய இடங்களை நாடுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ள கிராமிய முயற்சியாளர்களுக்கு நிதி உதவியை வழங்குவது எமது நிலையான வேலைத் திட்டத்தின் கீழ் எமது வணிகத்தின் நோக்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் விவசாயம், சிறு வியாபார முயற்சிகள் மற்றும் பால் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்ற நபர்களுக்கு பிணையற்ற கடன்களை நாம் வழங்குகிறோம்.

நாட்டின் வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணத்தில் பெண்கள் மற்றும் முயற்சியளர்கள் உட்பட நிச்சயமற்ற குழுக்களுக்கு அடிப்படையாக நன்மை கிடைக்கும் வகையில் இந்த வேலைத் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில், அதன் ஆரம்பத்திலிருந்து நிதி உதவி, தொழில்நுட்ப மற்றும் வேறு வகையான ஆலோசனைகள் மூலம் அண்ணளவாக முயற்சியாளர்கள் 25,000 பேரின் வாழ்வாதாரத்திற்கு நாம் உதவி அளித்துள்ளோம். சியத் சவிய வேலைத்திட்டப் பாடசாலைகள் மூலம் இந்த மக்களுக்கு நேரடியாக நன்மைகள் வழங்கப்பட்டுள்ள.

பெண்கள் வலுவூட்டல்

குறைந்த வரப்பிரசாதங்களை கொண்ட குடும்பங்களுக்கு மேலதிக வருமான மார்க்கங்களை உருவாக்கல்

குடும்பங்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்தல்.

கல்வி

MBSL இலங்கைப் பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம் உட்பட பல்கலைக் கழகங்கள், தொழில்சார் கணகீட்டு நிறுவனங்கள் சிலவற்றின் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அனுசரனையாளர்களாவதுடன், அதன் மூலம் வதிவிடப் பயிற்சி சந்தர்ப்பங்கள் மற்றும் நிலையங்களுக்குள் மாணவர்களுக்கு செயன்முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் பெற்றுக் கொடுக்கப்படும். வருடத்தினுள் இளம் மாணவர்களின் திறன் மட்டம் மற்றும் தொழில் செய்யும் திறனை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு, நேரடியாககப் பங்களிப்புச் செய்து, இவ்வாறான வதிவிடப் பயிற்சி சந்தர்ப்பங்கள் 32 ஐ நாம் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

2016 ஆம் ஆண்டில் MBSL பிள்ளைகளின் எழுத்தறிவு வீதத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பங்களிப்புச் செய்து வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் வகையில் தர்மபுரம் உழவனூர் சிறுவர் சங்கத்திற்கு ஒரு தொகை நூல்கள் பரிசளிக்கப்பட்டன. ரூ. 0.025 மில்லியன் மொத்த முதலீடான இதனால் 50 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நேரடி நன்மை கிடைக்கப்பெற்றது. கிராமியப் பாடசாலைகளைத் தெரிவு செய்து உதவியுடன் தொடர்ச்சியான வேலைத் திட்டமாக இதைக் கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வருடத்தினுள் அரனாயக்க வெள்ளத்துடன் தொடர்பான நிர்வாக காரியாலயத்திற்கு உதவுவதற்காக 0.44 மில்லியன் ரூபாய்கள் பெறுமதி வாயந்த 05 கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு
இயற்கை மூலதனம்

நிதிச் சேவை வழங்குனராக எமது கடன்படுனர்கள் தமது வணிகம் மற்றும் செயற்பாடுகள் மூலம் நடக்கக்கூடிய மறைப் பாங்கான சுற்றாடல் பாதிப்புக்கள் தொடர்பில் தெளிவைப் சான்றுப்படுத்தி, சுற்றாடல் சார்பான வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதில் எமது இயலுமையை நாம் இனம் காண்கின்றோம். கம்பனி அதன் இயற்கை வளங்களைப் பிரயோகித்தல் மற்றும் கழிவுகள் மற்றும் ஏனைய ஒதுக்கப்படும் பொருட்களை அகற்றுதலை தொடர்ச்சியாக ஒழுங்கமைப்பதன் மூலம் இதன் நடவடிக்கைகளினால் நேரடியாக சூழலுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதைக் குறைக்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

G4-EN06

உள்ளீடு (ரூ.மி.)	2016	2015	வருட %
யேதவுமி			
காகிதம்	3.77	3.60	5
நீர்	1.41	1.83	(22)
சக்தி வளம்	32.34	31.10	4

பெறுமதியை உருவாக்கும் முறை

- காகித மீள் சுழற்சி
- சக்தி வள வினைத் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த முயற்சிகள்
- நீர் பாதுகாப்பில் ஊழியர் பங்களிப்பு
- பாரிய கடன்களுக்கு சுற்றாடல் நிவாரண நியதிகள்

உற்பத்தி மற்றும் பிரயோகம்	
மீள் சுழற்சி செய்யப்பட்ட ஒதுக்கப்படும் காகிதம் பிரதான காரியபலயம்	கி.கி 720
குறைக்கப்பட்ட நீர் செலவுகள்	22%
குறைக்கப்பட்ட காகிதாதிகள் பாவணை	15%

முகாமைத்துவ அணுகுமுறை

நிதிச் சேவைகளை வழங்குவோராக கம்பனியின் சுற்றாடல் தாக்கம் சக்தி வலு, நீர் மற்றும் காகிதங்கள் மற்றும் பிரயோகம் போன்ற இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதில் கட்டுப்படுத்தல்கள் மேற் கொள்ப்பட்டுள்ளன. உரிய சகல சுற்றாடல் குறி காட்டிகளையும் நிலையான அடிப்படையில் கடுமையாகப் பின்பற்றப்படுவதாக கம்பனியின் சுற்றாடல் முகாமைத்துவ வேலைத் திட்டத்தின் மூலம் உத்தரவாதப்படுத்தப் படுவதுடன், அவற்றில் மேலும் விருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளை இனங்கண்டு கொள்வதற்கு உதவி அளிக்கப்படுகிறது.



கடன் வழங்கும் முறைகள்

G4-14,G4-32, G4-33, G4-EN27, G4-EN32, G4-EN33, G4-HR1, G4-FS7, G4-FS8

வசதிகளுக்காக சுற்றாடல் நிவாரண நியதிகளை உருவாக்கிக் கொண்டு, நல்ல சுற்றாடல் வணிகங்களை பரப்புவதற்கு நாம் முயற்சிக்கின்றோம். அதன் அடிப்படையில் வசதிகளுக்காக கடன் உருவாக்கத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் ஏனைய உரிய சுற்றாடல் சட்டங்களுக்கு வாடிக்கையாளர்களின் இயைபாக்கம் தொடர்பான மதிப்பீடு உள்ளடக்கப்படும். வணிகத்தினால் இடம் பெறக் கூடிய மறைப்பாங்கான தாக்கங்கள் மதிப்பீடு செய்யப்படும். கம்பனி கடன் வழங்கும்போது மற்றும் புதிய உற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் போது முன் எச்சரிக்கை அடிப்படையைப் பின்பற்றுகிறது.

கம்பனி காபன் வெளியேற்றம் மற்றும் உயிர்ச் சுவட்டு எரிபொருட்கள் தொடர்பில் நம்பிக்கையைக் குறைக்கும் நோக்கில் விஷேட குத்தகை உற்பத்திகள் மூலம் கலப்பு மற்றும் இலத்திரனியல் வாகனப் பயன் பாட்டை ஊக்குவித்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் கம்பனி கலப்பு மற்றும் இலத்திரனியல் வாகனங்களுக்காக முறையே 13.56 மில்லியன் மற்றும் 6.85 மில்லியன்களை வழங்கியுள்ளது.

கலப்பு வாகனங்கள்	ரூ.மில்
2016 டிசம்பர் இறுதிக்கு கடன் கொத்து (அண்ணளவாக)	95.80
2016 ஆம் ஆண்டில் செலவுகள்	13.56
இலத்திரனியல் வாகனங்கள்	
2016 டிசம்பர் இறுதிக்கு கடன் கொத்து (அண்ணளவாக)	28.78
2016 ஆம் ஆண்டில் செலவுகள்	6.85

இயைபாக்கம் மற்றும் முதலீடுகள்

G4-EN-29

சகல சுற்றாடல் சட்டங்களுக்கும் இயைபாக்கத்தை உறுதிப்படுத்தும் பொறுப்பு இயைபாக்க துறைக்கு பொறுப்பாவதுடன், மாதாந்த இயைபாக்க அறிக்கைகள் ஒருங்கிணைந்த நட்ட அபாய முகாமைத்துவ குழு ஊடாக பணிப்பாளர் சபைக்கு அளிக்கப்படும். வருடத்தினுள் சுற்றாடல் சட்டங்களுக்கு இயைபாக்கமடையாத சந்தர்ப்பங்கள் இல்லை.

முகாமைத்துவப் பிரயோகம். மூலப் பொருட்கள்

G4-EN1

கம்பனியின் அடிப்படை மூலப் பொருள் காகிதம் என்பதும் அது அதன் தினசரி நடவடிக்கைகளுள் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பிரயோகங்களை முகாமை செய்வதற்கான எமது அணுகுமுறையை குறைத்தல் மீளப் பயன்படுத்துதல் மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படும் மூலோபாயங்களின் அடிப்படையில் அமையும். (3R -Reduce, Reuse and Re-cycle) செயற்பாட்டு தன்னியக்கமாக்கல் மூலமும் காகிதப் பாவணையைக் குறைப்பது ஊக்குவிக்கப் பட்டுள்ளது. உதாரணமாக தன்னியக்கமாக்கப்பட்ட ஊழியர் வருகை முறை அறிமுகப் படுத்தப்பட்டமையால் விடுமுறைகள் டிஜிடல் முறையில் விண்ணப்பித்தல் போன்ற நிர்வாகச் செயற்பாடுகளை மேற் கொள்வதற்கு ஊழியர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு
இயற்கை மூலதனம்

வருடாந்த அறிக்கைகள் விஷேட கேள்வி உள்ள சந்தர்ப்பங்கள் தவிர்ந்த சந்தர்ப்பங்களில் மட்டும் வன் பிரதிகளாக வழங்கப்படும். அவ்வாறே எமது அனவசியமான அச்சிடல்கள் மற்றும் நிழ்ற் பிரதி எடுத்தல்களை செயற் பாட்டு ரிதியாகவே மேற் கொள்வதில் பின்னிற்கின்றோம்.

நவீன வங்கியியல் தொகுதி ஒன்றை செயற்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களுடன் தொடர்பாடல்களை மேற் கொள்வதற்காக டிஜிடல் சந்தர்ப்பங்களும் சுய சேவை பகுதிகளை உருவாக்குவதன் மூலமும் கம்பனியின் காகிதப் பாவணையைக் குறைப்பதற்கு காரணமாக அமையும் என எதிர் பார்க்கிறோம். 2016 ஆம் ஆண்டில் கம்பனியின் மொத்தக் காகித அலகுகள் 291,761 வரை சுமார் 17% ஆல் குறைவடைந்துள்ளது.

அதன் மூலம் ஊழியர்களின் காகிதப் பாவனையைக் குறைப்பதை முன் கொண்டு செல்லும் எமது முயற்சி உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

காகித பாவணை



காகிதங்களுக்கு மேலதிகமாக கம்பனியின் ஏனைய மூலப் பொருட்களுக்கு கோப்புக்கள், டோனர்கள் மற்றும் சிபன் போன்றவை உள்ளடக்கப் படுவதுடன், அந்த மூலப் பொருட்கள் பயன்பாடு கீழ் வருமாறு அமைந்திருந்தது.

	2016	2015	வருடாந்த %
பிரயோகம் (அலகு)			
காகிதம்	291,761	349,887	(17)
கோப்புக்கள்	15,568	12,601	24
டோனர்	407	389	5
ரிபன்	430	370	16
ஏனையவை	7,794	6,377	22
மொத்தம்	315,960	369,624	

சக்தி வலு
G4-EN3, G4-EN5, G4-EN6, G4-EN30

சக்தி வலு மூலம் தேசிய முறைமையில் இருந்து பெற்றுக் கொள்ளப் படும் மின்சாரம் மற்றும் கம்பனிக்கு உரித்தான வாகனங்களுக்குப் பயன் படுத்துகின்ற எரிபொருட்களை உள்ளடக்கியதாகும். கம்பனியின் சக்தி வலு தடத்தை வினைத்திறனாக ஈர்த்துக் கொள்வதற்கும் மற்றும் துறைகளை இனம் கண்டு கொள்வதற்கும் கம்பனியின் சக்தி வலு பயன்பாட்டிற்கு பிரதான அலுவலகம் மற்றும் கிளைக் காரியாலயங்களில் பரிநோதனைகள் மேற் கொள்ளப்படும். கம்பனியின் மினசாரப் பாவனை வருடத்தினுள் 12% ஆல் கூடியுள்ளது. பொதுவான மற்றும் முறையான முறையில் கம்பனியின் எரிபொருள் பயன்பாட்டு பொறிமுறையை நாம் உருவாக்கி செயற்படுத்தி இருக்கின்றோம். வருடத்தினுள் கம்பனியின் எரிபொருள் செலவினம் ஒப்பீட்டு ரீதியாக 38% ஆல் அதிகரித்துள்ளது. அதற்குகப் பிரதான காரணம் வியாபார விரிவாக்கல் நடவடிக்கைகள் மற்றும் மீள அறவிட்டுக் கொள்ளத் தக்க பெருக்கத் தக்க முயற்சிகள் காரணமாக அமைந்தன.

மூலம்	அலகுப் பயன்பாடு - 2016	அலகுப் பயன்பாடு - 2015
மின்சாரம் - அலகு	1,269,818	1,138,679
பெற்றோல் - லீட்டர்	11,158	ஏற்புடையதாகாது
டீசல் -லீட்டர்	17,281	ஏற்புடையதாகாது
ஊழியர் ஒருவருக்கான மின் பவணை - அலகு	1,385	1,315
ஊழியர் ஒருவருக்கான எரிபொருள் பாவணை - லீட்டர்	31	ஏற்புடையதாகாது

தொ. இ - தொடர்பு இல்லை

கீழே விபரிக்கப்படுகின்றவாறு கம்பனியின் சக்தி வலு வினைத்திறனை விருத்தி செய்து கொள்வதற்காக நிலையான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

- சக்தி வலு வினைத் திறன் வெளிச்சத் தொகுதிகள்
- அலுவலக நேரத்தின் பின் தானியங்கி முறையில் வளி சீராக்கிகள் செயல் இழக்கச் செய்யப்படல்
- மின் பாதுகாப்புக்கு ஆளணியினரின் பங்குபற்றல்
- இரட்டை வெளிச்ச பேனல்களின் பயன்பாடு
- சேர்வரை மறுசீரமைப்பு செய்வதன் மூலம் நிலத்தில் இட வசதிகள் மற்றும் மின்சாரத்தை சேமித்தல்

நீர்

G4-EN8, G4-EN9, G4-EN10

கம்பனியின் செயற்பாடு நீரின் மீது மேற்கொள்ளப் படுவதில்லை ஆயினும், ஊழியர்களின் பயன்பாட்டுக்கு மாத்திரம் நீர் பயன்படுத்தப்படுகிறது. ஊழியர்கள் கண்காட்சிகள், போஸ்டர்கள், நேரத்திற்கான விளம்பரங்கள் மூலம் குறைந்த நீர்ப் பாவனையினுள் ஈடுபடுத்தப் படுகிறார்கள். வருடத்தினுள் கம்பனியின் மொத்த நீர்ப் பாவணை 17,616 அலகுகளாக இருந்ததுடன், நீர் பாவணையின் வினைத் திறனை அதிகரிப்பதற்கான எமது முயற்சிகளை உறுதிப்படுத்தி ஊழியர் ஒருவருக்கான நீரப் பயன்பாடு 8% ஆல் விழ்ச்சி அடைந்துள்ளது.

நீர்ப் பயன்பாடு



கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் வெளியீட்டு முகாமை

G4-EN2, G4-EN23

கம்பனியின் நடவடிக்கைகள் காரணமாக ஏற்படுகின்ற பிரதான வகையிலான கழிவுகளாவது காகிதங்களும் இலத்திரனியல் கழிவுகளுமாகும். காகித கழிவுகள் பிரதான காரியாலயத்தில் ஒன்று சேர்க்கப்படுவதுடன், அவை மீள் சுழற்சிக்கு அனுப்பப்படுகின்றன. கலந்துரையாடப்படும் ஆண்டினுள் கம்பனி 720 கிலோ கிராம் காகிதங்களை மீள் சுழற்சிக்கு உட் படுத்தியதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இது இரண்டு மடங்கை அண்மித்ததாகும். இலத்திரனியல் கழிவுகள் பொறுப்புடன் அகற்றப்படுவதுடன், மீளப் பயன்படுத்தக் கூடிய கணினி வன் பொருட்கள் கல்வித் துறையினுள் கம்பனியின் நிறுவனப் பொறுப்பான குடிமக்கள் வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆரம்பப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகிறது.

	அளவு.	செலவு (ரூ. மி.)
கணினி உதிரிப் பாகங்கள்	112	3.35
அலுவலக உபகரணங்கள்	தொ.இ	0.59

தொ.இ - தொடர்பு இல்லை

காலநிலை மாற்ற தாக்கங்கள்

G4-EC2

கம்பனி அதன் நடவடிக்கைகளின் மீது காலநிலைத் தாக்கங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றி கணக்கீடுகள் மேற்கொள்ளவில்லை. ஆனாலும், நிதிச் சேவை நிறுவனம் ஒன்றாக காலநிலை மாற்றத்தின் தாக்கங்களான சீரற்ற காலநிலை மற்றும் வரட்சிகளினால் பாதிப்புக்கு உள்ளாகும் விவசாயம், மீன் பிடி போன்ற துறைகளில் கம்பனியின் கடன் கொத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்த முடியும்.

நவீன மயப்படுத்திய நிதித் தீர்வுகளை விநியோகிப்போரான எமது நோக்கினை நோக்கி எம்மை முன்கொண்டு செல்லும்

வலுவான நிறுவன நிர்வாக வழங்குகள் மற்றும் வலுவான நட்ட அபாய முகாமைத்துவ வேலைத் திட்டம் எமது பெறுமதிகளை உருவாக்கி, உறுதிப்படுத்துவதுடன், வியாபார பழக்க வழங்ககங்களை உயர் தரத்தில் புத்துயிர்ப்புடன் தார்மீக் அடிப்படையில் மற்றும் ஊடுபுகும் தன்மையில் எமது நிறுவனத்தை நாம் முகாமை செய்கிறோம் என்று உறுதி கூறுகிறோம்.

முகாமைத்துவம்

பணிப்பாளர் சபை

நிறுவன முகாமைத்துவம்

நிறுவன நல்லாட்சி

கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பான பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

கணக்காய்வு குழு அறிக்கை

சம்பளம் மற்றும் கொடுப்பனவு குழு அறிக்கை

தொடர்புடைய தரப்பு கொடுக்கல் வாங்கல் கலந்துரையாடல் குழு அறிக்கை

ஒருங்கிணைந்த முகாமைத்துவக் குழு அறிக்கை

அபாய முகாமைத்துவம்

பணிப்பாளர் சபை

1. கலாநிதி. எஸ். லொக்கு ஹேவா அவர்கள - தலைவர்
2. சீ.என் விஜேவர்தன அவர்கள் - பணிப்பாளர்
3. டி. எம். குணசேகர அவர்கள் - பணிப்பாளர்
4. டப். பீ. ஆர். பீ. எச். பொன்சேக்கா அவர்கள் - பணிப்பாளர்
5. கே. பீ. எஸ். பண்டார அவர்கள - பணிப்பாளர்
6. என். பெரேரா அவர்கள் - பணிப்பாளர்
7. எஸ். என. தயாரத்ன அவர்கள் - பணிப்பாளர்
8. எஸ். பீ. அர்ஷகுலரத்ன அவர்கள் - பணிப்பாளர்
9. எச். ஜே. டி. பொன்சேக்கா அவர்கள் - பணிப்பாளர

பணிப்பாளர் சபை

கலாநிதி. எஸ். லொக்குஹேவா அவர்கள்
தலைவர்
தன்னாட்சியான நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

கலாநிதி லொக்கு ஹேவா அவர்கள் தற்போது தனரொசோ ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனி மற்றும் யுனிவேர்ஸல் கன்ஸல்டன்ஸி சேர்விஸஸ் (தனியார்) கம்பனியில் தலைவர் ∴ முகாமைத்துவப் பணிப்பாளர் ஆவார். இந்தப் பதவிகளை 2009 ஆம் ஆண்டில் இருந்து வகித்து வருகிறார். அவர் அசையாத சொத்து அபிவிருத்தி, சூரிய சக்தி வலு உற்பத்திகள், இத்தாலியன் கொபி ஷொப், ஆலோசனை சேவைகள் போன்ற பல்வேறு வியாபார முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். ஏற்றுக் கொள்ளப்பட்ட கம்பனிகளில் சிரேஷ்ட மற்றும் மத்திய தரங்களில் முகாமைத்துவப் பதவிகளில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தையும், தகவல் தொழில் நுட்பம், அசையாத சொத்துக்கள், தங்க வணிகம், மருந்து, சூரிய சக்தி வலு, வளி சீராக்கி மற்றும் விருந்தோம்பல் வணிகங்களில் 10 வருடங்களுக்கும் மேற்பட்ட கால அனுபவமும் அவரிடம் உள்ளது. அவ்வாறே அவர் 05 வருட காலம் ஈ ஏ பி குழுமத்தின் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருந்தார்.

2011 ஆம் ஆண்டில் கலாநிதி லொக்கு ஹேவா அவர்கள் முகாமைத்துவப் பணிப்பாளராக / பிரதம நிறைவேற்று அதிகாரியாக சேவையாற்றிய கம்பனிக்கு மலேசியாவின் முன்னால் பிரதமர் மஹதிர் முஹம்மத் அவர்கள் முன்வைத்த சிறந்த சொத்து அபிவிருத்தி கம்பனிக்கான நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாஸ்டர்ஸ் க்ளாஸ் விருது வழங்கல் நிகழ்வில் அவர் சிறந்த கிளை முகாமையாளராக விருது பெற்றுள்ளார். மத்திய முகாமையாளராக அவரது தொழில் வாழ்வினுள் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் அவர் சிறந்த கிளை முகாமையாளராக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். கலாநிதி லொக்கு ஹேவா அவர்கள் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் MBSL காப்புறுதிக் கம்பனயின் (MBSLI) தலைவராக நியமிக்கப்பட்டார். கலாநிதி லொக்கு ஹேவா அவர்கள் கிரேக்கத்தின் திறந்த சர்வதேச பல்கலைக் கழகத்தின் வியாபார முகாமைத்துவம் தொடர்பாக கலாநிதிப் பட்டம் (Phd) பெற்றவராவார்.

சீ. என். விஜேவர்தன அவர்கள்
தன்னாட்சியற்ற நிறைவேற்றல்லாத பணிப்பளார்

திரு. விஜேவர்தன அவர்கள் நிறைவேற்றல்லாத பணிப்பாளராக இலங்கை வங்கிக்கு நியமிக்கப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் MBSL காப்புறுதிக் கம்பனியின் (MBSLI) நிறைவேற்றல்லாத பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தொழில் ரீதியாக பொறியியலாளரான திரு. விஜேவர்தன அவர்கள் ஐக்கிய இராட்சியத்தின் ஹல் பல்கலைக் கழகத்தில் டிஜிடல் இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் தொடர்பில் கௌரவ பட்டத்தை டீ.ளுஉ பெற்றுள்ளார். அவரது தொழில் அனுபவம் IBM உலக பொருளாதார கூட்டினுள் உள்ள தொழில் அனுபவத்தையும் உள்ளடக்கியதாகும். அந்த நிறுவனத்தில் அவர் இலங்கை செயற்பாட்டு தொகுதிகளில் பொறியியல் மற்றும் விற்பனை முகாமையாளராகவும், பிற்காலத்தில் இந்த நாட்டின் பொது முகாமையாளராகவும் கடமையாற்றினார். அவ்வாறே அவர் ஹொங்கொங் இல் உள்ள IBM இல் ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கான அலுவலகத்தில் பணியாற்றியதுடன், சகல IBM's AS/400 இன் ஆசிய பசுபின் பிராந்தியத்தின் மக்கள் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரியாக கடமையாற்றினார். திரு. விஜேவர்தன அவர்கள் IBM இன் இலங்கை குழுவை வழி நடாத்தியதுடன் சிங்கப்பூருக்கு வெளியே IBM ASEAN நடவடிக்கைகளுக்காக AS/400 மக்கள் சந்தைப்படுத்தல் வேலைத் திட்டத்தினை முகாமை செய்தார். திரு. விஜேவர்தன அவர்கள் அவுஸ்த்திரேலியாவின் சிட்னியை அடிப்படையாகக் கொண்ட லெக்ஸ் மார்க் இன்டர்நெஷனல் இல் ஏசிய பசிபிக் நடவடிக்கையிலும் சேவையாற்றியுள்ளார். லெக்ஸ் மார்க்கில் அவர் வலய முகாமையாளராக கடமையாற்றியதுடன், அதில் அவர் பாக்கிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், இலங்கை, மியன்மார், மாலைதீவு, மற்றும் நியுசிலாந்தில் லெக்ஸ் மார்க் உற்பத்திகளை வினியோகித்தல் மற்றும் சேவை பரப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவர் பல்வேறு கலாசாரங்கள் மற்றும் உப கலாசாரங்களில் வினைத் திறன் மிக்க வழி நடவடிக்கைகளை நிலை நிறுத்துவதில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒருவராவர்.

திரு. டீ. எம். குணசேகர அவர்கள்
தன்னாட்சியற்ற நிறைவேற்றல்லாத பணிப்பாளர்

திரு. குணசேகர அவர்கள் இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியாவதுடன், 2013 ஆம் ஆண்டு பெபரவரி மாதம் மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் பினான்ஸ் பிஎல்சி இற்கு நியமிக்கப்பட்டார். 2016 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் வகையில் பணிப்பாளர் சபையின் தன்னாட்சியற்ற நிறைவேற்றல்லாத பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப் பட்டார்.

திரு. குணசேகர அவர்கள் நிறுவன மற்றும் கரை கடந்த வங்கியியல், விற்பனை மற்றும் விற்பனை ஊடக முகாமைத்துவம் மற்றும் சர்வதேச வங்கியியல் நடவடிக்கைகளில் 23 வருடங்களாக பல துறைகளில் வங்கியியல் அனுபவத்தைக் கொண்டுள்ள வங்கியியலாளராவார். பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன் இவ்வாறான துறைகளில் நிறுவன முகாமைத்துவப் பதவிகள் பலவற்றை அவர் வகித்துள்ளார். அவருக்கு கடன் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பில் பரந்த அனுபவம் உள்ளது.

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் அரச நிதி மற்றும் வரியிடல் தொடர்பில் விஷேட பட்டதாரியான அவர் ஜப்பானின் வெளிநாட்டு தொழில் நுட்ப புலமைப் பரிசில் மற்றும் சங்கமான (AOTS) மூலம் நடாத்தப்படும் இலங்கையின் நிறுவன முகாமைத்துவம் தொடர்பான வேலைத் திட்டம் (LKCM 2) மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பென்சில்வேனியாவின் வார்டன் பல்கலைக் கழகத்தின் மூலம் நடாத்தப்பட்ட இலங்கை நிறுவன முகாமைத்துவம் தொடர்பான உயர் முகாமைத்துவ வேலைத் திட்டத்தை (AMP63) சிறப்பாக நிறைவு செய்துள்ளார். அவர் இலங்கை வங்கியியலாளர் நிறுவனத்தின் உதவி உறுப்பினராவார்.

அவர் நிறைவேற்று தரமல்லாத பெயரிடப்பட்ட பணிப்பாளராக இலங்கை வங்கி (ஐக்கிய இராட்சியம்) உட்பட இலங்கை வங்கியின் நிர்வாக கம்பனிகள் மற்றும் அண்மிய கம்பனிகள் சிலவற்றின் பணிப்பாளர் சபைகளில் கடமையாற்றியுள்ளார். அவ்வாறே அவர் இலங்கை வங்கி முகாமைத்துவம் மற்றும் உதவி சேவைகள் தனியார் நிறுவனம், சீ பேன்க் ஹொலி டே ஹொம்ஸ் தனியார் கம்பனி, இலங்கை வங்கிச் சங்கத்தின் (உத்தர) கம்பனி மற்றும் அலங்கை நிதி குறைகேள் (உத்தர) கம்பனி ஆகிய வற்றுக்காக 2016 / 2017 ஆம் ஆண்டுகளுக்காக சபைகளின் தலைமையை ஏற்றுள்ளார். அவர் இலங்கை வங்கியியலாளர் சங்கத்தின் (IBSL) நிர்வாகக் குழுவின் உறுப்பினர் என்பதுடன், தொழின் முறை வங்கியியலாளர் சங்கத்தின் (APB இலங்கை) உறுப்பினருமாவார்.

அவர் 2016/ 2017 ஆம் ஆண்டுக்காக ஆசியா பசிபிக் கிராமிய மற்றும் விவசாய கடன் சங்கத்தின் (APRACA) உப தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் துபாயின் உலக நிலைத்திருக்கும் காங்கிரஸின் மூலம் 2016இல் 100 க்ளோபல் நிலைத்திருக்கும் தலைவர்கள் (CEO) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இந்த வழங்கலானது மிகச் சிறந்த சிரேஷ்ட தலைவராக புகழ் மிக்க தொழில் மற்றும் நிறுவனங்களை இனம் காணலாகும்.

பணிப்பாளர் சபை

திரு. டப். பீ. ஆர். பீ. எச். பொன்சேக்கா அவர்கள்
தன்னாட்சியற்ற நிறைவேற்றல்லாத பணிப்பாளர்

திரு. பொன்சேக்கா அவர்கள் இலங்கை வங்கியினால் நியமிக்கப்பட்ட தன்னாட்சியற்ற நிறைவேற்றல்லாத பணிப்பாளராவார். அவர் முகாமைத்துவப் பயிலுனராக 1990 ல் இலங்கை வங்கியில் இணைந்துள்ளார். தற்போது இலங்கை வங்கியின் பிரதம நிதி அதிகாரி பதவியை வகிக்கின்றார். திரு. பொன்சேக்கா அவர்கள் கிளை நடவடிக்கைகள் மூலம் வங்கி நடவடிக்கைகளை ஆரம்பித்ததுடன், வணிக வங்கியியலின் சகல பிரிவுகளிலும் 27 வருடங்கள் அனுபவம் வாய்ந்தவர் ஆவார். அவர் நிதி முகாமைத்துவம் மற்றும் மூலோபாயங்கள் தொடர்பில் நிபுணத்துவம் மிக்கவர் என்பதுடன், இலங்கை வங்கியினுள் வினைத் திறன் மிக்க, நிறுவன திட்டமிடல் செயற்பாடு, வரவு செலவுத் திட்ட செயற்பாடுகள் போன்ற நடவடிக்கைகளை செயற்படுத்தியுள்ளார். அவர் இலங்கை வங்கியின் வரவு செலவுத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டமிடல், வாடிக்கையாளர் வங்கியியல் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் உட்பட சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகள் பலவற்றை வகித்துள்ளார்.

அவர் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ட்ரான்சிஷனல் தனியார் கம்பனியின் பணிப்பாளர் சபையின் நிறைவேற்றல்லாத தலைவராக கடமையாற்றுகிறார். திரு பொன்சேகா அவர்கள் டல்கா சிகியுரிடீஸ் தனியார் கம்பனியில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ப்ரொபர்டி டிவலொப்மன்ட் பிஎல்சி மற்றும் MBSL காப்புறுதிக் கம்பனியின் பணிப்பாளராகவும் சேவையாற்றுகிறார். அவர் லங்கா க்ளியர் தனியார் கம்பனியின் மாற்றுப் பணிப்பாளராவதுடன், ப்ரொபர்ட்டி டிவடழப்மன்ட் பீஎல்சி, மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி மற்றும் லங்கா க்ளியர் தனியர் நிறுவனம் ஆகியவற்றின் கணக்காய்வுக் குழுக்களின் தலைவராகவும் செயற்படுகிறார்.

அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் வியாபார முகாமைத்துவம் தொடர்பான விஷேட பட்டத்தையும், முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் கற்கை நிறுவகத்தின் முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் டிப்ளோமா, அவுஸ்த்திரேலியாவின் தெற்கு குவின்ஸ்லாந்து பல்கலைக் கழகத்தின் வியாபார முகாமைத்துவம் தொடர்பான முதுகலைப் பட்டம் என்பவற்றைப் பெற்றுள்ளார். அவர் இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தின் சிறப்பு உறுப்பினர் என்பதுடன், இலங்கை வங்கியியலாளர் சங்கத்தின் உறுப்பினருமாவார்.

திரு. கே. பீ. எஸ். பண்டார அவர்கள்
தன்னாட்சியற்ற நிறைவேற்றல்லாத பணிப்பாளர்

திரு. பண்டார அவர்கள் இலங்கை வங்கியில் இணைந்து சேவையாற்றியதுடன் தற்போது பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப் படுத்தல் முறைமை முகாமைத்துவம்) பதவியை வகிக்கின்றார். சர்வதேச வங்கியியல் நடவடிக்கைகள், திறைசேறி முகாமைத்துவம், நிறுவனக் கடன் வழங்கல், அபிவிருத்தி வங்கியியல் மற்றும் இலத்திரனியல் வங்கியியல் முறைமைகள் போன்றன உட்பட வங்கியியல் துறையின் பிரதான துறைகள் சிலவற்றில் சேவையாற்றிய பரந்த அனுபவத்தை உடையவராவார். அவ்வாறே அவர் 2011 - 2012 ஆம் ஆண்டு காலத்தினுள் இலங்கை வங்கியின் (ஐக்கிய இராட்சியம்) பிரதான நிறைவேற்று அதிகாரியாக லன்டனில் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். அவர் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிறைவேற்றல்லாத பணிப்பாளராக MBSL காப்புறுதிக் கம்பனியின் (MBSLI) பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் இலங்கை வங்கியியலாளர் நிறுவனத்தின் கடன் மற்றும் முதலீட்டு முகாமைத்தவம் தொடர்பான துறையில் வளவாளராகச் செயற்பட்டு வருகிறார். வங்கிக்கு இணைவதற்கு முன்னர், களனி பல்கலைக் கழகத்தின் உதவி விரிவுரையாளராக பணியாற்றி இருப்பதுடன், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையிலும் சேவையாற்றி உள்ளார். அவர் இலங்கை வங்கியியலாளர் சங்கத்தின் நிர்வாகக் குழுவிலும், இலங்கை தொழின் முறை வங்கியியலாளர் சங்கத்தின் தலைவராகவும் சேவையாற்றுகிறார்.

திரு. பண்டார அவர்கள் இலங்கை களனிப் பல்கலைக் கழகத்தின் பௌதீகவியல் பட்டதாரி என்பதுடன், இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் கற்றைக நிறுவனத்தில் திறமைச் சித்தியுடனான வியாபார முகாமைத்துவ முதுகலைப் பட்டம் ஒன்றையும் பெற்றுள்ளார். அவர் இலங்கை வங்கியியலாளர் நிறுவனத்தின் உயர் தர உறுப்பினர் என்பதுடன், 1998 ஆம் ஆண்டில் சிறந்த மாணவர் என்ற பட்டத்துடன், அந்த நிறுவனத்தில் இருந்து வங்கி முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் படிப்பு டிப்ளோமா ஒன்றைப் பெற்றுள்ளார்.

திரு. என். பெரேரா அவர்கள்
தன்னாட்சியற்ற நிறைவேற்றல்லாத பணிப்பாளர்

சட்டத்தரணி ஒருவரான திரு. பெரேரா அவர்கள் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரான ஜனாதிபரி சட்டத்தரனி ஆனந்த விஜேசேகர அவர்களின் குழுவில் தமது சட்டத்தரணித் தொழிலை ஆரம்பித்ததுடன், அவர் சிரேஷ்ட குற்றவியல் சட்டத்தரணியாவார். அவர் தீவு முழுவதும் உள்ள மஜிஸ்ரேட் மற்றும் மாவட்ட நீதி மன்றங்களில் விஷேடமாக வாதாடி பிரயாணம் செய்த அனுபவத்தை உடையவராவார். புலமைச் சொத்துக்கள், இலஞ்ச மற்றும் ஊழல், கடன்களை மீளப் பெற்றுக் கொள்ளல், அவதூறு, தொழிலாளர் விவகாரங்கள், மற்றும் ஏனைய ஏமாற்று தொடர்பான குற்றவியல் வழங்குகள், வன்முறைகள், பெண்கள் துஷ்பிரயோகம் மற்றும் கொலை போன்ற வழக்குகளில் வாதாடி இருக்கின்றார். அவ்வாறே நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் உணவுச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகள் தொடர்பில் தமது சட்டத்தரணியாக அவர் சிறப்பாக தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

இலங்கை சட்ட வைத்திய சபையின் உறுப்பினரான அவர் கடந்த 15 வருடங்களில் இலங்கை சட்டத்தரனிகள் சங்கத்தின் கௌரவத்திற்குரிய உறுப்பினரான இவர், 05 வருட காலமாக கொழும்பு சட்டச் சங்கத்தின் குழு உறுப்பினராகவும் இருந்தார். திரு. பெரேரா அவர்கள் தற்போது இலங்கை கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவனத்தில் (இதற்கு முன்னர் CISIR) தலைவராகவும், 2016 ஆம் ஆண்டு நவம்பர் மதத்தில் இருந்து MBSL காப்புறுதிக் கம்பனியின் (MBSLI) பணிப்பாளர் சபையின் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் ஒருவராகவும் செயற்படுகிறார். ஸ்ரீ லங்கா டைகொண்டோ சம்மேளனத்தின் சட்ட ஆலோசகராகவும், 2006 ஆம் ஆண்டில் ஐக்கிய இராட்சியத்தில் பழமைவாதக் (கொன்சவேர்டிவ்) கட்சி செயற்பாட்டில் இலங்கைப் பிரதிநிதிகள் மூவரில் ஒருவராகவும் செயற்பட்ட ஒருவராவார்.

திரு. எஸ். என். தயாரத்ன அவர்கள்
தன்னாட்சி மிக்க நிறைவேற்றல்லாத பணிப்பாளர்.

சட்டத்தரனியான திரு. தயாரத்ன அவர்கள் 1979 ஆம் ஆண்டில் சட்டத் துறையில் பிரவேசித்ததுடன், ஆரம்ப மற்றும் மேன்முறையீட்டு நீதி மன்றங்களில் தொழிலாளர், சிறுபான்மை மற்றும் சிவில் விடயங்கள் தொடர்பில் தீவிர தொழில் வாண்மையாளராக 38 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் 1977 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் பட்டம் பெற்றுள்ளார். அவர் 06 ஆண்டுகளுக்கு கேகாலை வீட்டுக் கூலிச் சங்கத்தின் தலைவராக செவையாற்றி உள்ளதுடன், 03 பஸ் சங்ககங்கள் அதாவது மாவனல்லை, கேகாலை மற்றும் றம்புக்கன பஸ் சங்கங்கள் சப்ரகமுவ பஸ் கம்பனியாக ஒருங்கிணைக்கப்படும் வரை கம்பனி செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். அவர் தற்போது ஹோட்டல் அன்கிரி தனியார் கம்பனி மற்றும் ஏ. எம். அபேரத்ன மற்றும் புத்திரர்கள் தனியார் கம்பனியில் செயலாளராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

திரு. எஸ். பீ. அர்ஷகுலரத்ன அவர்கள்
தன்னாட்சி மிக்க நிறைவேற்றல்லாத பணிப்பாளர்

திரு. அர்ஷகுலரத்ன அவர்கள் இலங்கை கனிய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் வழங்குனரான கே. டி. பீ. அரஷகுலரத்ன என்ட் சன்ஸ் இன் பங்காளராவார். அவர் சீத்தாவக்கபுர நகர சபையின் முன்னால் உப தலைவராவார். திரு. அர்ஷகுலரத்ன அவர்களுக்கு கடன் நிர்வாகம், சர்வதேச வர்த்தகம், வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் நடவடிக்கைகள் போன்ற துறைகள் தொடர்பில் சில வருட வங்கியியல் அனுபவம் உள்ளது.

திரு. ஜே. டீ. பொன்சேகா அவர்கள்
தன்னாட்சி மிக்க நிறைவேற்றல்லாத பணிப்பாளர்

திரு. பொன்சேக்கா அவர்கள் சிரேஷ்ட சட்டத்தரணி என்பதுடன், 1984 ஆம் ஆண்டில் சட்டத் துறையில் பிரவேசித்ததுடன், தற்போதும் வழங்கு தொடர்பான விவகாரங்களில் ஈடுபட்டுள்ளார். அவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1968 இல் கலைமானி பட்டம் பெற்றுள்ளார். அவர் இலங்கை வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சி, கொமர்ஷல் வங்கி பீஎல்சி ஆகியவற்றில் சுற்று சட்டத்தரணியாகப் பணியாற்றுகிறார்.

நிறுவன முகாமைத்துவம்

1. திரு. டி. முத்துகல - பிரதம நிறைவேற்று அதிகாரி **2. திரு. டீ. தலுவத்த** - பிரத செயற்பாட்டு அதிகாரி **3. திருமதி. எஸ். அமரதுங்க** - சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் **4. திரு. எல். களுஆரச்சி** - பிரதிப் பொது முகாமையாளர் - வலய இலக்கம் 03, **5. திரு. எஸ். உடுவாவெல** - பிரதிப் பொது முகாமையாளர் - வலய இலக்கம் 02, **6. திரு. ஜே. கம்லத் அவர்கள்** - பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும்

உற்பத்தி அபிவிருத்தி **7. திருமதி. கே. ஜயதிலக** - பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம் / கம்பனிச் செயலாளர் **8. திரு. எல் பீரிஸ்** - பிரதிப் பொது முகாமையாளர் - உதவிச் சேவைகள் மற்றும் தங்கக் கடன், **09. திரு. கே. ஜயசுந்தர** - உதவிப் பொது முகாமையாளர் - அறவிடல்கள், **10. திரு. எஸ். பெர்னாண்டோ** - உதவிப் பொது முகாமையாளர் - உள்ளக கணக்காய்வு, **11. திரு. சீ. விதானாரச்சி** - உதவிப் பொது முகாமையாளர் - தகவல் தொழில் நுட்பம், **12. திரு. டீ. குணவர்தன** - உதவிப் பொது முகாமையாளர் - மனித வளம், **13. திரு. பீ. கந்தன ஆரச்சி** - நிதித்துறை தலைவர்

நிறுவன முகாமைத்துவம்

திரு. டீ .முத்துகல

பிரதம நிறைவேற்று அதிகாரி

திரு. முதுகல அவர்கள் அரசுக்குச் சொந்தமான மிகப் பெரிய வங்கியான இலங்கை வங்கியில் குறிப்பாக வணிக வங்கியியலில் அண்ணளவாக 40 வருட அனுபவத்தைக் கொண்ட தொழின்முறை வங்கியியலாளர் ஆவார். அவருக்கு வங்கியியல், நடவடிக்கைகள், தகவல் முறைமை, கணக்காய்வு போன்றே வெளிநாட்டு கிளை நடவடிக்கைகள் தொடர்பான திறமைகளுடன் கலந்த அனுபவம் உள்ளது. உதவிப் பொது முகாமையாளர் ஒருவராக அவர் வங்கியின் தகவல் தொடர்பர்ல் பாதுகாப்பு கொள்கையை செயற்படுத்துவதில் அவர் முக்கிய பங்காற்றியுள்ளார். பிற் காலத்தில் பிரதிப் பொது முகாமையாள் - உதவிச் சேவைகள் ஆக, அவர் வங்கியின் கேள்வி மனுக் கோரல் நடைமுறைகள், வணிக நடவடிக்கைகளை மீளமைத்தல், மற்றும் 2012 ஆம் ஆண்டு ஜுலை மாதம் தொடக்கம் 2013 ஜுலை மாதம் வரை மத்திய அலுவலகத்தின் நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவம் வழங்கியுள்ளார்.

திரு. முத்துகல அவர்கள் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தில் (ACMA) உறுப்பினராவதுடன், தகவல் தொழில் நுட்ப முறைமை ஆய்வு மற்றும் கட்டுப்பாட்டு சங்கத்தில் ISACA (USA) இல் சான்றிதழ் பெற்ற தகவல் முறைமை ஆய்வாளராவார். (CISA)

திரு. டீ. தலுவத்த

பிரதம செயற்பாட்டு அதிகாரி

அனுபவம் வாயந்த வங்கியியல் மற்றும் நிதி தொழில் வாண்மையாளர் என்பதுடன், திரு. டீ. தலுவத்த அவர்களுக்கு முதலீட்டு வங்கியியல் மற்றும் நிறுவன நிதியியல் தொடர்பில் 28 வருட நிறுவன முகாமைத்துவ அனுபவம் உள்ளது. அவர் இதற்கு முன்னர் ஹட்டன் நஷனல் வங்கியில் பிரதிப் பொது முகாமையாளர் - நிறுவன நிதியியல் பதவியை வகித்ததோடு, ஜோர்ஜ் ஸ்டுவர்ட் அன்ட் கம்பனி லிமிடட் இல் குழும இணை முகாமைத்துவப் பணிப்பாளராவார். கம்பனியின் பிரதம செயற்பாட்டுஅதிகாரியாக அவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் MCSL நிதிச சேவைகள் தனியார் கம்பனியில் பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பணியாற்றினார்.

அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் உயர் உறுப்பினர் என்பதுடன், ஐக்கிய இராட்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தின் உயர் உறுப்பினர் என்பதுடன், ஐக்கிய இராட்சியத்தின் தகவல் தொழில் நுட்பத்திற்கான பட்டய நிறுவனத்தின் உறுப்பினரும் ஆவார். அவர் 03 வருட காலத்திற்காக இலங்கை வீட்டுச் சங்கத்தின் உப தலைவராக செயற்பட்டிருப்பதுடன் இலங்கை வணிகச் சம்மேளனத்தின் செயற் குழுவில் FHA பிரதிநிதியாகவும் செயற்பாட்டுள்ளார்.

திருமதி. எஸ். அமரதுங்க

சிரேஷ்ட பொது முகாமையாளர்

திருமதி அமரதுங்க அவர்கள் ஜயவர்தன புர பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் கற்கை நிறுவனத்தில் வணிக நிர்வாகம் தொடர்பில் சிறப்புச் சித்தியுடனான முதுகலைப் பட்டத்தை பெற்றிருப்பதுடன், PIM மூலம் நவீன வங்கியியல் தொடர்பில் பட்டப் பின் டிப்ளோமா சான்றிதழ் ஒன்றையும் பெற்றுள்ளார். அதே போன்று இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியல் விஷேட பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திருமதி. அமரதுங்க அவர்கள் சுமார் 27 வருட அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன், திறைசேரி வணிக நிதியியல், மூலோபாய திட்டமிடல் மற்றும் நட்ட அபாய முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாட்டுப் பிரிவு ஆகிய கம்பனியின் பல்வேறு பல துறைகளில் தலைவராக செயற்பட்டுள்ளார்.

அவ்வாறே அவருக்கு கடன் முகாமைத்துவம், மீள அறவிடல், மீதிப் புள்ளி அட்டை செயலடைவு முகாமைத்துவ முறைமை, ஒருங்கிணைப்பு மற்றும் கையகப்படுத்தல் செயற்பாடுகள் மீள் ஒழுங்கமைத்தல், நிதி மற்றும் செலவின கணக்கீடு, மற்றும் மனித வளத்தினுள் பரந்த அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் கடன் முகாமைத்துவம், நட்ட அபாய முகாமைத்துவம், அறவீட்டுக் கடன் நிர்வாகம், நட்ட அபாய முகாமைத்துவம், இணக்கப்பாட்டுப் பிரிவு போன்றே கம்பனியின் மூலோபாய திட்டமிடல் செயற்பாட்டுக்கு மேலதிகமாக மீள அறவிடும் பிரிவு, மனித வளப் பிரிவின் பணிகள் என்பவற்றையும் அவதானித்துக் கொள்கிறார்.

திரு. எல். களுஆரச்சி

பிரதிப் பொது முகாமையாளர் - வலயம் 03

நிதித் துறையில் 31 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட, திரு. எல். களுஆரச்சி அவர்களுக்கு கடன், குத்தகை, மற்றும் கடன் அபாய முகாமைத்துவம் தொடர்பில் பல்வேறு திறன்கள் காணப் படுகின்றன. குத்தகை முகாமையாளராக 1994 ஆம் ஆண்டில் வர்தக வங்கியியலுக்குள் பிரவேசித்த அவர், பிரதிப் பொது முகாமையாளர் - குத்தகை, பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதிப் பொது முகாமையாளர் - மீள அறவிடல்கள், பிரதிப் பொது முகாமையாளர் - உதவிச் சேவைகள் உட்பட கம்பனியின் பல சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ள அவர், தற்போது பிரதிப் பொது முகாமையாளர் - வலயம் 03 பதவியை வகிக்கின்றார். அவர் களனிப் பல்கலைக் கழகத்தின் வணிகவியல் விஷேட பட்டத்தைப் பெற்றுள்ள பட்டதாரியாவார்.

திரு. எஸ். உடுவெல

பிரதிப் பொது முகாமையாளர் - வலயம் 02

திரு. உடுவெல அவர்களுக்கு விஷேடமாக கடன் மற்றும் கிளை நடவடிக்கைகள் உட்பட வங்கியியல் துறையில் 35 வருடங்களுக்கு மேலதிகமான அனுபவம் உள்ளது. அவருக்கு இலங்கையின் 03 பிரதான வணிக வங்கிகளில் பரந்த அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன், நேபாளத்தில் உள்ள இலங்கை மேர்ச்சன்ட் வங்கியின் வெளிநாட்டு நியமனத்தின் மீது அதன் கடன் முகாமையாளராக இணைந்து சேவையாற்றி உள்ளார்.

தற்போது அவர் பிரதிப் பொது முகாமையாளர் - வலயம் 02 ஆக செயலாற்றுவதுடன், பிரதிப் பொது முகாமையாளர் - வலயம் 02 பதிவியைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் குத்தகைப் பிரிவு, கிளை நடவடிக்கைகள் பிரிவு போன்றே நுண்பாக நிதிப் பிரிவிலும் பிரதிப் பொது முகாமையாளராகக் கடமையாற்றினார்.

திரு. ஜே. கம்லத்

பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி

விற்பனை மற்றும் வினியோகம், முறைமை முகாமைத்துவம், உற்பத்தி மற்றும் வணிகப் பெயர் முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் போன்ற பல்வேறு அலுவல்களில் அனுபவத்துடன் திறமையான சந்தைப்படுத்தல் தொழில் வாண்மையாளரான திரு. கம்லத் அவர்கள் முன்னணி இலத்திரனியல் தொடர்பாடல் துறைக் கம்பனிகளில் சிரேஷ்ட சந்தைப்படுத்தல் பதவிகளை வகித்துள்ளார். திரு. கம்லத் அவர்கள் கொழும்பு பல்கலைக் கழகத்தின் வியாபரக் கற்கைகள் தொடர்பான கலைமாணிப் பட்டத்தை பெற்றிருப்பதுடன், ஐக்கிய இராச்சியத்தின் சந்தைப்படுத்தல் தொடர்பான பட்டய நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் தொடர்பான தொழில் வாண்மை பட்டப் பின் டிப்ளோமாதாரி ஆவார்.

செல்வி. கே. ஜயதிலக

பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம் / கம்பனி செயலாளர்

செல்வி. ஜயதிலக அவர்கள் சட்டத்தரனியாக 26 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில் வாண்மையாளர் என்பதுடன், உயர் நீதி மன்ற சட்டத்தரணி என்பதுடன், பிரசித்திபெற்ற நொத்தாரிசுமாவார். அவர் சதம்டன் பல்கலைக் கழகத்தில் (ஐக்கிய இராச்சியம்) சட்டம் தொடர்பான (வணிகவியல் சட்டங்கள்) கலைமாணிப் பட்டத்தையும், ஆங்கில மொழி மூலம் பொருளியல் மற்றும் அரசியல் விஞ்ஞானம் தொடர்பில் கொழும்பு பல்கலைக் கழகத்தில் இரண்டாம் நிலை கௌரவ (உயர் துறையில் சித்தி) பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். செல்வி. ஜயதிலக அவர்கள் கம்பனிப் பதிவாளராக செய்யும் செயற்படுவதற்கு மேலதிகமாக சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் செயற்பாட்டு சட்ட ஆலோசகராகவும் அரசம மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளிலும் சேவையாற்றி உள்ளார். அவ்வாறே அவர் உலக வங்கியில் குறுகிய காலம் ஆலோசகராகவும் சேவையாற்றி உள்ளார்.

திருஇ. எல். பீரிஸ்

பிரதிப் பொது முகாமையாளர் - உதவிச் சேவைகள் மற்றும் தங்கக் கடன்

திரு. பீரிஸ் அவர்கள் வங்கியியல் துறையில் 32 வருட கால அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன், அதற்கு நிறுவன முகாமை, தடுப்பு தொடர்பான பல்வேறு துறைகளில் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவ தரத்திலான பதவிகளை உள்ளடக்கியதாகும். அவ ரது அனுபவத்தினுள் சவுதி ப்ரிட்ஸ் வங்கியின் சர்வதேச வங்கியியல் (வணிக நிதியியல்) ரியாத், சவுதி அரேபியா, சவுதி அரேபிய (HSBC) குழுமத்தில் 06 ஆண்டுகள் மற்றும் இலங்கையில் (எமிரேட்ஸ் சர்வதேச வங்கியின் கொழும்புக் கிளை, ஹட்டன் நஷ னல் வங்கி, செலான வங்கி, செலின்கோ சேமிப்பு வங்கி, MBSL சேமிப்பு வங்கி மற்றும் மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி) 26 ஆண்டு அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவரது ஆற்றல் மற்றும் திறமை மட்டம் சர்வதேச வணிகம், வங்கியியல் நடவடிக்கைகள், கிளை வங்கியியல் மற்றும் நிர்வாகம், வியாபார அபிவிருத்தி மற்றும் சேவைத் தரம் என்பவற்றில் பரந்துள்ளது. அவர் ஸ்பைனில் உள்ள திரித்துவக் கல்லூரியில் வங்கியியல் மற்றும் நிதி மற்றும் நிர்வாகம் தொடர்பான கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

திரு. கே. ஜயசுந்தர்

உதவிப் பொது முகாமையாளர். - அறிவீடுகள்.

திரு. ஜயசுந்தர அவர்களுக்கு நிதிச் சேவைகளில் பல்வேறு துறைகளில் பல்வேறு விடய மூலாதாரங்கள் தொடர்பில் பரந்த அறிவுள்ளதுடன், இதற்கு முன்னர் நடவடிக்கைகள் மற்றும் கடன் பிரிவின் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளை வகித்துள்ளார். அவர் இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் கற்கை நிறுவனம் வழங்கும் வியாபார நிர்வாகம் தொடர்பான கலைமாணிப் பட்டம், வங்கியியல் மற்றும் நிதி, விவசாய பொருளாதாரம் என்பவற்றில் சிறப்பு விஞ்ஞானமாணிப் (கௌரவ) பட்டத்தைப் பெற்றுள்ளார்.

திரு. எஸ். பெர்னாண்டோ

உதவிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு

9 (3)	இந்த ஏற்பாடுகளின் ஊடாக உள்ளடக்கப்படும் தொடர்புடைய தரப்பினருடனான பரிமாற்றல்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு இருக்கும் அ) வசதிகளை வழங்குதல், ஆ) வைப்புக்கள், கடன் பெறுதல்கள் மற்றும் முதலீடு போன்ற வழிகளில் நிதிக் கம்பனிக்கு பொறுப்புக்களை உருவாக்குதல். இ) நிதிக் கம்பனிக்கு நிதி அல்லது நிதியல்லாத சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல் அல்லது நிதிக் கம்பனியிடமிருந்து அவ்வாறான சேவைகளைப் பெற்றுக்கொள்ளல். ஈ) அறிக்கைப்படுத்தல் வழிகளை உருவாக்குதல் அல்லது பேணி வரல் மற்றும் நிதிக் கம்பனி மற்றும் ஏதேனுமொரு தொடர்புடைய தரப்பினரிடையே தகவல்கள் செல்லுதல் அதாவது அந்த தொடர்புடைய தரப்புக்கு அனுகூலங்கள் கிடைக்க முடியுமான உரிமைகள் சம்பந்தமாக இரகசியமான அல்லது ஏனைய விதத்திலான உணர்வுபூர்வமான தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கு வழியமைத்தல்.	இயைபுடையது
9 (4)	நிதிக் கம்பனியின் ஏனைய சமமான ஒரு தரப்புக்கு இணங்க முடியுமான வகையில் “மிகச் சிறப்பாகக் கவனித்தல்” ஒரு தரப்புக்கு ஏற்படும் விதத்தில் தொடர்புடைய ஒரு தரப்புடன் பரிமாற்றல்களில் நிதிக் கம்பனி ஈடுபடுவதில்லையென நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தல் வேண்டும். இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக “மிகச் சிறப்பாகக் கவனித்தல்” என்பதிலிருந்து கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றது. : அ) பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் பிரகாரம் நிதிக் கம்பனியின் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மூலதனத்தின் தூரநோக்குடனான வீதத்தைத் தாண்டி தொடர்புடைய தரப்புக்கு “மொத்தத் தேறிய வசதிகள்” வழங்குதல். “மொத்தத் தேறிய வசதிகள்” கணக்கிடப்படுவது மொத்த வசதிகளில் நிதிக் கம்பனியின் பங்கு மூலதனம் மற்றும் ஐந்து (5) வருடங்கள் அல்லது அதனிலும் காலம் முதிர்ச்சியடைவதற்கு நிலவும் கடன் கருவிகளில் அவ்வாறான தொடர்புடைய தரப்பொன்றினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த முறிகள் மற்றும் முதலீடுகளைக் கழிப்பதன் ஊடாகவாகும். ஆ) நிதிக் கம்பனியின் மிகவும் சிறப்பான கடன் வழங்கும் வீதத்தினை விடவும் கீழான வட்டி வீதத்தை அறவிடல் அல்லது தொடர்பில்லாத சமமாக நோக்க முடியுமான இணைத் தரப்பினருடன் சமமாக நோக்க முடியுமான கொடுக்கல் வாங்கலுக்காக செலுத்திய வட்டியையும் தாண்டியவட்டி வீதமொன்றைச் செலுத்தல். இ) தொடர்பில்லாத் தரப்பினருடன் இணையான வணிக நடவடிக்கையினுள் வழங்கப்படும் விதிமுறைகளின் வரையறையைத் தாண்டிய நன்மை பயக்கும் விதிமுறைகள், வியாபார நட்ட மேவுகை மற்றும் கூஅல்லது கட்டணம் / தரகு பதிவழித்தல் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்களைப் பெற்றுக் கொடுத்தல். ஈ) முறையான மதிப்பீட்டு நடைமுறையொன்று இல்லாமல் தொடர்புடைய தரப்பொன்றுக்கு சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல் அல்லது அவ்வாறான தரப்பொன்றிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளல். உ) கம்பனி மற்றும் தொடர்புடைய தரப்புக்கிடையே அறிக்கைப்படுத்தும் வழி, தகவல்களை சீராகப் பேணிவரல், இது சட்ட ரீதியான அலுவல்கள் மற்றும் நடவடிக்கைகளின் செயற்திறனுக்குத் தேவையான விடயங்கள் தவிர அவ்வாறான தொடர்புடைய தரப்பொன்றுக்கு அனுகூலங்கள் கிடைக்க முடியுமான உரிமைகள், இரகசியமான அல்லது வேறு விதமான உணர்வுபூர்வமான தகவல் பரிமாற்றத்திற்கு வழி வகுக்க முடியும்.	இயைபுடையது. தயவுசெய்து ஆண்டறிக்கையின் பக்கம் 206 முதல் 209 வரை ‘நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்’ இன் கீழ் இலக்கம் 41 இனைப் பார்க்கவும்.

பிரிவு	நிர்வாக தேவைப்பாடு	2016 இல் இயைபு மட்டம்
10.	**வெளிப்படுத்தல்கள்**	இயைபுடையது
10 (1)	பணிப்பாளர் சபையினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரிகளின் தேவைகளுக்கு மற்றும் உரிய கணக்கீட்டுத் தரங்களுக்கமைய தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.	
10 (2)	பணிப்பாளர் சபை குறைந்தது கீழ் குறிப்பிடப்படும் வெளிப்படுத்தல்களை ஆண்டறிக்கையில் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.	
10 (2) (அ)	வருடாந்தம் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் விசேட வெளிப்படுத்தல்கள் உட்பட உரிய கணக்கீட்டுத் தரங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தும் கூற்று.	இயைபுடையது தயவுசெய்து ஆண்டறிக்கையில் 136 ஆம் பக்கத்தில் 'நிதி அறிக்கைப்படுத்தல் சம்பந்தமாக பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்' சம்பந்தமான அறிக்கையைப் பார்க்கவும்.
10 (2) (ஆ)	நிதி அறிக்கைப்படுத்தல் முறையானது நிதி அறிக்கைப்படுத்தலின் நம்பகத் தன்மை சம்பந்தமாக நியாயமான உறுதிப்படுத்தலுக்காக உருவாக்கப்பட்டிருத்தல் மற்றும் உரிய கணக்கீட்டு தரங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு இணங்க நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தும் நிதிக் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை சம்பந்தமான பணிப்பாளர் சபையின் அறிக்கையாகும்.	இயைபுடையது தயவுசெய்து பணிப்பாளர் சபையின் குறிப்பிட்ட அறிக்கைக்காக ஆண்டறிக்கையின் பக்கம் 134, 135 ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.
10 (2) (இ)	தயாரிக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஏதேனும் நிதிக் கூற்று தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் பயன் (விளைவு) சம்பந்தமாக வெளிவாரியான கணக்காய்வாளரின் உறுதிப்படுத்தல்.	இயைபுடையது தயவுசெய்து ஆண்டறிக்கையின் 135 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.
10 (2) (ஈ)	நிதிக் கம்பனியுடனான கொடுக்கல் வாங்கல் உட்பட பணிப்பாளர்கள் தொடர்பான விபரம்	இயைபுடையது விபரங்களுக்காக தயவுசெய்து ஆண்டறிக்கையின் 207 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.
10 (2) (உ)	நிதிக் கம்பனியினால் பணிப்பாளர்களுக்குச் செலுத்திய கட்டணம் கூ ஊதியத்தின் கூட்டுத்தொகை	இயைபுடையது விபரங்களுக்காக தயவசெய்து ஆண்டறிக்கையின் 110 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.
10 (2) (ஊ)	தொடர்புடைய தரப்புக்களின் ஒவ்வொரு பிரிவு சம்பந்தமாகவும் நிலுவையாக காணப்படும் இந்த க் கட்டளையின் 9 (4) அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த தேறிய வசதிகள் மற்றும் நிதிக் கம்பனியின் மூலதன நிதியத்தின் சத வீதமாக தொடர்புடைய தரப்புக்களின் ஒவ்வொரு பிரிவு சம்பந்தமாகவும் நிலுவையாகக் காணப்படும் மொத்த தேறிய வசதிகள்.	இயைபுடையது தயவுசெய்து ஆண்டறிக்கையின் 206 முதல் 209 ஆம் பக்கம் வரையிலான 'நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்' இன் கீழ் இலக்கம் 41 இனைப் பார்க்கவும்.
10 (2) (எ)	ஆண்டினுள் நிதிக் கம்பனியினால் அதன் பிரதான முகாமைத்துவ பணியாட் தொகுதிக்கு செலுத்திய ஊதியங்களின் கூட்டப்பட்ட பெறுமதி மற்றும் நிதிக் கம்பனியினால் பிரதான முகாமைத்துவ பணியாட் தொகுதியுடன் மேற்கொள்ளப்பட்ட பரிமாற்றல்களின் கூட்டப்பட்ட பெறுமதி, செலுத்திய ஊதியங்கள், வழங்கப்பட்ட வசதிகள் மற்றும் நிதிக் கம்பனிக்குள் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் அல்லது முதலீடு போன்ற விரிவான வகைப்படுத்தலுக்கமைய குறிப்பிடப்பட்டுள்ளது.	இயைபுடையது தயவுசெய்து ஆண்டறிக்கையின் 206 முதல் 209 ஆம் பக்கம் வரையிலான 'நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்' இன் கீழ் இலக்கம் 41 இனைப் பார்க்கவும்.

நிறுவன நல்லாளுகை

பிரிவு	நிர்வாக தேவைப்பாடு	2016 இல் இயைபு மட்டம்
10 (2) (ஏ)	தூர நோக்குடனான தேவைகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக நிர்வாகத்துடனான இணக்கப்பாட்டின் விபரம் மற்றும் இணங்கம் ஏற்படாத சந்தர்ப்பங்களை சீர் செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	இயைபுடையது. விபரங்கள் மற்றும் இயைபடையாத சந்தர்ப்பங்களை சீர் செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தயவுசெய்து ஆண்டறிக்கையின் 111 மற்றும் 136 ஆம் பக்கங்களில் முறையே குறிப்பிடப்பட்டுள்ள 'கம்பனி நடவடிக்கைகள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை' மற்றும் 'நிதி அறிக்கைப்படுத்தலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்' சம்பந்தமான அறிக்கையைப் பார்க்கவும்.
10 (2) (அ)	2000 இன் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகை சட்டம் மற்றும் வருடாந்த நிறுவன நல்லாளுகை அறிக்கையில் நாணய சபையினால் வெளியிடப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஆணைகளுடன் இணக்கப்பாடு சம்பந்தமாக வெளிவாரியான கணக்காய்வாளரின் உறுதிப்படுத்தல்.	நிறுவன நல்லாளுகை அறிவுறுத்தல்களில் இணக்கப்பாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் (SLSRS 4750) வெளியிடப்பட்ட தொடர்புடைய 4750 சேவைகள் சம்பந்தமாக இலங்கை தரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை வெளிவாரியான கணக்காய்வாளர்கள் பயன்படுத்தியுள்ளனர். பணிப்பாளர் சபைக்கு அறிக்கைப்படுத்தப்பட்ட அவர்களது அறிக்கையின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் கண்டுபிடிப்புக்கள் மேலே வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுடன் நேரொத்ததாக இருப்பதுடன், பணிப்பாளர் சபையினால் மேலே அறிக்கைப்படுத்தப்பட்ட விடயங்களுடன் சில முக்கிய நேரொத்திராத சந்தர்ப்பங்கள் இனங்காணப்படவில்லை.

2016 நிதியாண்டில் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக் கூட்டங்களின் வருகை பற்றிய விபரம்

பணிப்பாளரின் பெயர்	பணிப்பாளரின் நிலை	பணிப்பாளர் சபை	கணக்காய்வுக் குழு	ஊதியக் குழு	ஒன்றிணைந்த ஆப-த்து முகாமைத்துவக் குழு	தொடர்புடைய தரப்பு கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு
				நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை		
		23	03	01	03	01
திரு.ஈ.எம்.ஆர்.பெரேரா (தலைவர்) 2016.07.26 ஆம் திகதி முதல் இராஜினாமா செய்துள்ளார்	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	10	தொகூஇ	தொகூஇ	தொகூஇ	தொகூஇ
திருமதி எஸ்.பீ.வெல்லப்பிலி 2016.05.17 ஆம் திகதி முதல் இராஜினாமா செய்துள்ளார்	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	04	தொகூஇ	தொகூஇ	தொகூஇ	தொகூஇ
திரு. ஆர்.ரீ.விஜேசிங்க 2016.06.28 ஆம் திகதி முதல் இராஜினாமா செய்துள்ளார்	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	06	தொகூஇ	தொகூஇ	தொகூஇ	தொகூஇ
திரு.சீ.என்.விஜேவர்தன	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	21	தொகூஇ	01	03	01
திரு. ஏ.எஸ்.பத்மபெரும 2016.07.26 ஆம் திகதி முதல் இராஜினாமா செய்துள்ளார்	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	09	தொகூஇ	தொகூஇ	தொகூஇ	தொகூஇ
திரு. எச்.ஜீ.ஏ.குணவர்தன 2016.07.26 ஆம் திகதி முதல் இராஜினாமா செய்துள்ளார்	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	09	தொகூஇ	தொகூஇ	தொகூஇ	தொகூஇ
கலாநிதி எஸ்.லொக்குஹேவா (தலைவர்)	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	13	தொகூஇ	01	தொகூஇ	தொகூஇ
திரு.டீ.எம்.குணசேக்கர	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	12	தொகூஇ	00	தொகூஇ	தொகூஇ
திரு. டப்ளியூ.பீ.ஆர்.பீ.எச். பொன்சேக்கா	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	10	03	தொகூஇ	தொகூஇ	01
திரு.கே.பீ.எஸ்.பண்டார	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	10	02	தொகூஇ	02	00
திரு.என்.பெரேரா	சுயாதீனமற்ற நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	11	03	00	தொகூஇ	தொகூஇ
திரு.எஸ்.என்.தயாரத்ன	சுயாதீனமான நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	13	03	01	தொகூஇ	01
திரு.எஸ்.பீ.அர்ஷகுலரத்ன	சுயாதீனமான நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	12	03	00	தொகூஇ	00
திரு.எச்.ஜே.டீ.பொன்சேக்கா	சுயாதீனமான நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்	12	00	01	02	01

கம்பனியின் நடவடிக்கைகள் சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

1. பொதுவான விடயங்கள்

மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா என்ட் பினேன்ஸ் பீஎல்சீ இன் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுடன் பணிப்பாளர் சபையின் நடவடிக்கைகள் சம்பந்தமான அறிக்கையை பணிப்பாளர்கள் பங்குரிமையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றார்கள்.

மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா என்ட் பினேன்ஸ் பீஎல்சீ, கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் (45 ஆவது உறுப்புரை) கீழ் 1982 மார்ச் 04 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட பொதுக் கம்பனியாகும். இந்தக் கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்பட்டதுடன் 1991 முதல் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளது. கம்பனி 2011 இன் 42 ஆம் இலக்க நிதி வர்த்தக சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் பெற்ற நிதிக் கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 2000 இன் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தின் கீழ் நிதிக் குத்தகைக் கம்பனியாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக் கூற்று இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் மற்றும் ஏனைய ஏற்புடையதாகும் ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைப் போன்றே கம்பனியின் தலைமை அலுவலகமும் கொழும்பு 03, சென்ட் கைகல் வீதி, இலக்கம் 28 இலங்கை வங்கியின் மேர்ச்சன்ட் கோபுரத்தில் அமைந்துள்ளது.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள், கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட விதிமுறைகள், நிறுவன நிர்வாகம் சம்பந்தமாக பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் தேவையான தகவல்கள் இந்த அறிக்கையின் ஊடாக வழங்கப்படுகின்றது. இந்த அறிக்கை 2017 மே 17 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 168 ஆம் உறுப்புரைக்கமைய கீழ் குறிப்பிடப்படும் தகவல்கள் ஆண்டறிக்கையின் ஊடாக வெளிப்படுத்தப்படுதல் அவசியமாக இருப்பதுடன், மீளாய்வாண்டு (அதாவது 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்காக) தொடர்பாக இதன் கீழ் வெளிப்படுத்தப்படுகின்றது.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் வெளிப்படுத்த வேண்டிய தகவல்கள்		குறிப்பு (2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் உறுப்புரை)	கம்பனியின் இயைபு மட்டம்
i	கணக்கீட்டுக் கால எல்லைக்குள் சில மாற்றங்களுடன் குழுமம் மற்றும் கம்பனியின் வர்த்தகத்தின் தன்மை மற்றும் கம்பனிக்கு சார்பான வர்த்தகங்கள்.	168 (1) (அ) உறுப்புரை	146 பக்கத்தைப் பார்க்கவும்
ii	கணக்கீட்டுக் கால எல்லைக்காக குழுமம் மற்றும் கம்பனியின் கைச்சாத்திடப்பட்ட நிதிக் கூற்றை பூரணப்படுத்தியிருத்தல்.	168 (1) (ஆ) உறுப்புரை	140 பக்கத்தைப் பார்க்கவும்
iii	கை குழுமம் மற்றும் கம்பனியின் நிதிக் கூற்று சம்பந்தமாக கணக்காய்வாளர்களின் அறிக்கை	168 (1) (இ) உறுப்புரை	137 பக்கத்தைப் பார்க்கவும்
iv	கணக்கீட்டுக் கொள்கை மற்றும் அதன் சில மாற்றங்கள் (குழுமம் உட்பட)	168 (1) (ஈ) உறுப்புரை	146 பக்கத்தைப் பார்க்கவும்
v	கணக்கீட்டுக் கால எல்லைக்குள் உரிமை ஆவணத்தினுள் மேற்கொள்ளப்பட்ட உள்ளடக்கங்களின் விபரம்	168 (1) (உ) உறுப்புரை	206 முதல் 209 பக்கங்களை பார்க்கவும்
vi	கம்பனியின் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கு செலுத்திய கட்டணம் மற்றும் ஏனைய அனுகூலங்கள்	168 (1) (ஊ) உறுப்புரை	110 பக்கத்தை பார்க்கவும்
vii	கணக்கீட்டு கால எல்லைக்குள் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகள் பற்றிய விபரம்	168 (1) (எ) உறுப்புரை	111 பக்கத்தை பார்க்கவும்
viii	கணக்கீட்டு காலப் பகுதியின் இறுதியில் கம்பனியினது பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் கணக்கீட்டுக் காலப் பகுதியில் பதவி இராஜினாமா செய்த பணிப்பாளர்களின் பெயர்கள்	168 (1) (ஏ) உறுப்புரை	109 முதல் 110 பக்கத்தை பார்க்கவும்
ix	கணக்காய்வுக் கட்டணமாக கணக்காய்வாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை பற்றிய வெளிப்படுத்தல் மற்றும் கணக்கீட்டுக் கால எல்லைக்குள் நிறைவேற்றப்பட்டஏனைய சேவைகளுக்கான கட்டணமாக கணக்காய்வாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை சம்பந்தமான வேறான வெளிப்படுத்தல்	168 (1) (ஐ) உறுப்புரை	111 பக்கத்தை பார்க்கவும்
x	கம்பனி மற்றும் கூஅல்லது அதன் துணை நிறுவனங்களுடன் கணக்காய்வாளர்களின் தொடர்புகள் சம்பந்தமான விபரம் (கணக்காய்வாளர் தவிர) அல்லது கணக்காய்வாளருக்கு கம்பனி மற்றும் கூஅல்லது அதன் துணை நிறுவனங்களுடனான உரிமைகள்	168 (1) (ஒ) உறுப்புரை	111 பக்கத்தை பார்க்கவும்
xi	இந்த அறிக்கையின் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்ளல்கூ பணிப்பாளர் சபைக்காக 02 பணிப்பாளர்கள் மற்றும் கம்பனிச் செயலாளரின் கையொப்பம்.	168 (1) (ஓ) உறுப்புரை	112 பக்கத்தை பார்க்கவும்

2.தூர நோக்கு , செயற்பணி மற்றும் நிறுவன நடத்தை

கம்பனியின் தூர நோக்கு, செயற்பணி மற்றும் பண்பாடுகள் இந்த அறிக்கையின் 3 ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. பிரதான வர்த்தக அலுவல்கள்

கம்பனியானது 2000 இன் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக் கம்பனியாக இருப்பதுடன் 2001 இன் 43 ஆம் இலக்க நிதி வர்த்தகச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட நிதிக் கம்பனியாகும். அத்துடன், கம்பனியானது (i) ஒரு பக்க வழங்குனர் (ii) எழுத்துறுதிப் பாதுகாவலர் மற்றும் (iii) முதலீட்டு முகாமையாளர் போன்ற வகைப்படுத்தல்களின் கீழ் இலங்கை பிணைப் பத்திரங்கள் மற்றும் செலாவணி ஆணைக் குழுவினால் சந்தை இடைத் தரகராகவும் செயற்படுகின்றது. MBSL இற்கு துணைக் கம்பனியொன்று மற்றும் அண்மிய கம்பனியொன்று உள்ளடக்கப்படுவதுடன் அவையாவன, MBSL காப்புறுதிக் கம்பனி மற்றும் லங்கா சிக்கியுரீட்டீஸ் (தனியார்) கம்பனி என்பனவாகும். அவை கூட்டாக குழுமத்திற்குள் அடங்கும்.

குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு, நிறுவன மற்றும் வாடிக்கையாளர் கடன், நிறுவன ரீதியலான ஆலோசனை, மூலதனச் சந்தை நடவடிக்கைகள், சிறிய மற்றும் நடுத்தரப் பிரிவுகளுக்குப் போன்றே கம்பனியின் விவசாயப் பிரிவுகளுக்கு கடன் வழங்குதல், வைப்பை பயன்படுத்தல் மற்றும் ஏனைய ஏற்புடைய நிதிச் சேவைகளை வழங்குதல் கம்பனியின் பிரதான அலுவல்களாகும்.

துணை மற்றும் அண்மிய கம்பனியின் பிரதான அலுவல்கள் இங்கு 146 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுக் குறிப்புக்களில் 2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. செயற்பாட்டு நடவடிக்கைகள் மீளாய்வு

2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டில் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாக மீளாய்வு மற்றும் அந்த செயற்பாடுகளின் பெறுபேறுகள் பக்கம் 6 முதல் 7 வரை தலைவரின் மீளாய்வு, பக்கம் 8 முதல் 9 வரை பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மீளாய்வு மற்றும் 36 ஆம் பக்கம் முதல் 59 ஆம் பக்கம் வரை முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு அடங்கும்.

5. எதிர்கால நோக்கு

கம்பனியின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் மேம்பாடுகள் சம்பந்தமான பகுப்பாய்வு 7 ஆம் பக்கத்தில் தலைவரின் மீளாய்வு மற்றும் 9 ஆம் பக்கத்தில் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மீளாய்வின் ஊடாக முன்வைக்கப்படுகின்றது.

6. கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள்

2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனியின் நிதிப் பொறுப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரால் முறையாக கையொப்பமிடப்பட்ட மற்றும் குழுமத்தின் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக் கூற்று 140 ஆம் பக்கம் முதல் 238 பக்கம் வரை குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதனை பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையின் இணைந்த பகுதியாக கவனத்திற்கொள்ள வேண்டும்.

7. நிதி அறிக்கைப்படுத்தலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

குழுமத்தின் மற்றும் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக உண்மையான மற்றும் நியாயமான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படும் வகையில் தயாரிக்கும் பொறுப்பு பணிப்பாளர்களுடையதாகும். 140 ஆவது பக்கம் முதல் 238 ஆவது பக்கம் வரை குறிப்பிடப்பட்டுள்ள இலாப நட்டக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, பங்குகளின் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்புக்கள், 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரங்கள் சட்டத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை கணக்கீட்டுத் தரங்கள், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் சபை நம்புகின்றது. அத்துடன், இந்த நிதிக் கூற்றுக்கள் 2000 இன் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம், 2011 இன் 43 ஆம் இலக்க நிதி வர்த்தகச் சட்டம், 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மற்றும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் மற்றும் கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட விதிமுறைகளில் உள்ளடக்கப்பட்ட தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது. 36 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி அறிக்கைப்படுத்தலுக்காக பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் அத்தியாவசியப் பகுதியாக விளங்குகின்றது.

8. கணக்காய்வாளர்களின் அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (4) ஆவது சட்டத்தில் ஏற்பாடுகளின் பிரகாரம் மர்ச்சன்ட் பேன்க் ஒப் லங்கா என்ட் பினேன்ஸ் பீஎல்சீ இன் கணக்காய்வாளர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாவார். 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தயாரிக்கப்பட்ட அறிக்கை 137 ஆம் பக்கத்தில் காணப்படுகின்றது.

9. ஆண்டின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் மாற்றங்கள்

மீளாய்வாண்டினுள் கணக்கீட்டுக் கொள்கைகளில் எந்த விதமான மாற்றங்களும் ஏற்படாதிருந்ததுடன் அவை இலங்கை கணக்கீட்டுத் தரம் டுமுயுளு 01 – நிதிக் கூற்றுக்களை முன்வைப்பதற்கு இணங்க கடந்த நிதியாண்டில் பயன்படுத்தியவற்றுடன் நேரொத்ததாக இருந்ததுடன், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 168 LKAS (1) (ஈ) உறுப்புரைக்கு இணங்கியதாக இருந்தது. கணக்குக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் 146 முதல் 238 ஆம் பக்கம் வரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் நடவடிக்கைகள் சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் அறிக்கை

10. வருமானம்

2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் வருமானம் ரூபா 4,888 மில்லியனாகும். (2015 இல் ரூபா 4217 மில்லியனாகும்) வருமானம் பற்றிய பகுப்பாய்வு 156 ஆம் பக்கத்தில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

11. நிதிசார் இலாபம் மற்றும் ஒதுக்கீடு

கம்பனி மற்றும் குழுமத்தின் செயற்திறன் சம்பந்தமான விபரம் மற்றும் இலாபம் பற்றிய ஒதுக்கீடு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக	கம்பனி		குழுமம்	
	2016 ரூ.மி.	2015 ரூ.மி.	2016 ரூ.மி.	2015 ரூ.மி.
வரிக்கு முந்திய இலாபம்	239.87	(35.43)	246.80	56.00
வரிச் செலவு	(154.25)	(42.88)	(165.66)	(52.72)
வரிக்கு பிந்திய இலாபம்	85.62	(78.31)	81.14	3.28
முன்னைய ஆண்டின் முன்கொண்டு சென்ற இலாபம்	747.41	842.94	746.02	742.99
ஒதுக்கீடு செய்ய முடியுமான இலாபம்	833.03	764.63	827.16	746.27
மிகை இலாப வரி	-	(38.75)	-	(38.75)
	833.03	725.88	827.16	707.52
ஒதுக்கீடுகள்				
ஏனைய விபரமான வருமானம்	37.26	21.53	39.53	19.63
இருப்புக்களுக்கான மாற்றல்கள்	(17.12)	-	(17.12)	-
மொத்த ஒதுக்கீடுகள்	20.14	21.53	22.41	19.63
கட்டுப்பாட்டுக்கு உட்படாத உரிமைகள்	-	-	36.71	18.87
ஒதுக்கீடு செய்யப்படாத இலாபம் (முன்கொண்டு சென்ற)	853.17	747.41	886.28	746.02

12. இருப்புக்கள்

கம்பனியின் மற்றும் குழுமத்தின் இருப்புக்கள் பற்றிய பொழிப்பு:

திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக	கம்பனி		குழுமம்	
	2016 ரூ.மி.	2015 ரூ.மி.	2016 ரூ.மி.	2015 ரூ.மி.
சட்ட ரீதியிலான இருப்புக்கள்	157.67	140.54	157.67	140.54
விற்பனைக்கான இருப்பு	(21.80)	(4.35)	(36.20)	(8.92)
நிறுத்திவைக்க-ப்பட்ட ஈட்டல்கள்	853.17	747.41	886.28	746.02

இருப்புக்களின் மாற்றங்கள் சம்பந்தமான தகவல்கள் 144 ஆம் பக்கத்தில் பங்குகளின் மாற்றங்கள் சம்பந்தமான கூற்றில் மற்றும் 205 மற்றும் 206 ஆம் பக்கங்களில் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 39 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

13. வரி விதிப்புக்கள்

கம்பனி 28% (2015 - 28 %) வருமான வரியைச் செலுத்தும் பொறுப்பைக் கொண்டிருப்பதுடன் நிதிச் சேவைகளின் மீதான பெறுமதி சேர் வரி வீதம் 11% - 15% ஆகும்

14. சட்ட ரீதியான செலுத்துகைகள்

பணிப்பாளர் சபை அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய ஏற்புடைத்தாகும் அனைத்து ஒழுங்கு விதிகளுக்கமைய மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய செலுத்துகைகளை கம்பனி செலுத்தியுள்ளதை உறுதிசெய்கின்றது.

15. சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்

குழுமம் மற்றும் கம்பனிக்கு சொத்துக்கள், உபகரணங்கள் மற்றும் புலப்படாச் சொத்துக்களை சுவீகரத்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த மூலதனச் செலவாக முறையே ரூபா 175 மில்லியன் மற்றும் ரூபா 167 மில்லியன் செலவாகியது. கம்பனியின் சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் பற்றிய விபரம் பக்கம் 191 முதல் 194 வரை நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் இலக்கம் 27 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

16. அறுதிச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி

கம்பனியின் அனைத்து அறுதிக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொழிற் தகைமையைக் கொண்ட சுயாதீன மதிப்பீட்டாளர்களினால் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டது. வெளியிடப்பட்ட பெறுமதிகள் குறிப்பிட்ட அந்த சொத்துக்களின் தற்போதைய சந்தைப் பெறுமதியை தாண்டவில்லையென்பது பணிப்பாளர்களின் கருத்தாகும். கம்பனிக்கு முழுமையான உரிமையைக் கொண்ட அறுதிச் சொத்துக்கள் பற்றிய விபரம் 193 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுக்களில் 27 ஆம் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

17. பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரம் வெளியிடல்

கம்பனியினால் பங்குகள் அல்லது கடன் பத்திரங்கள் எதனையும் நிதியாண்டில் வெளியிடப்படவில்லை.

18. வெளியிடப்பட்ட மூலதனம் மற்றும் கடனீட்டுப் பத்திரம்

2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கம்பனியின் வெளியிடப்பட்ட மூலதனம் பொதுவான வாக்குரிமையைக்கொண்ட 165இ874இ541 பங்குகளைக் கொண்ட ரூபா 2இ124.46 மில்லியனாகும். வெளியிடப்பட்ட மூலதனம் சம்பந்தமாக 205 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுக்களில் 38 ஆம் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் வெளியிடப்பட்ட கடன் பத்திரங்கள் பற்றிய விபரம் 198 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுக்களில் 32.1 ஆம் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

19. மூலதனத்தின் அளவு

திரவத்தன்மை ஆபத்தை குறைத்துக்கொள்வதற்கு மற்றும் வைப்பாளர்களை பாதுகாத்துக் கொள்வதற்கு மத்திய மூலதனம் மற்றும் குறைநிரப்பு மூலதனம் சம்பந்தமாக சட்ட ரீதியிலான தேவைகளை பேணி வருவதனை கம்பனி உறுதிப்படுத்துகின்றது. அதனூடாக பொதுவாக கம்பனியின் மற்றும் இத்துறையின் பேண்தகு தன்மை உறுதிப்படுத்தப்படுகின்றது. 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கம்பனியின் மத்திய மூலதனம் மற்றும் ஆபத்து அடிப்படையில் எடை வைக்கப்பட்ட மொத்த மூலதன அளவு முறையே 10.66% மற்றும் 10.69% ஆக இருந்தது. முகக் குறைந்த மூலதனத் தேவை சம்பந்தமான தகவல்கள் 238 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

20. பங்குகள் பற்றிய தகவல்கள்

ஒரு பங்கு மற்றும் அதன் ஈட்டல், இலாபப் பங்கு, தேறிய சொத்துக்கள் மற்றும் சந்தைப் பெறுமதி 11 ஆம் பக்கத்தில் நிதி தொடர்பான முக்கிய தகவல்களாக முன்வைக்கப்பட்டுள்ளது. பங்குகள் மற்றும் குறிப்பிட்ட வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கம்பனியின் பங்குகளின் அசைவு சம்பந்தமான விபரங்கள் 39 – 41 வரையிலான பக்கங்களில் நிதி மூலதன பிரிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

21. கவனத்திற்கொள்ள வேண்டிய பங்குரிமை அதிகளவு பங்குகளின் உரிமையாளர்கள் 20 பேர் சம்பந்தமான விபரம்

அதிகளவு பங்குகளுக்கு உரிமைகோரும் 20 பேர்களின் பங்குகளின் அளவு சத வீதமாக மற்றும் பொது மக்களுக்குரிய பங்குகளின் சதவீதம் சம்பந்தமான விபரம் நிதி மூலதனப் பிரிவில் பக்கம் 40 முதல் 41 வரை உள்ளடக்கப்பட்டுள்ளது.

22. பணிப்பாளர் சபை

2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கம்பனியின் பணிப்பாளர் சபையினைச் சேர்ந்த பணிப்பாளர்களின் பெயர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஆண்டில் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டங்களுக்கான வெர்களது வருகை ஆண்டறிக்கையின் 105 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணிப்பாளரின் பெயர்	நிறைவேற்று/ நிறைவேற்று அல்லாத	சுயாதீனமான/ சுயாதீனமல்லாத நிலைமை
கலாநிதி எஸ்.லொக்குஹேவா	தலைவர் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்	சுயாதீனமல்லாத
திரு. சீ.என்.விஜேவர்தன	நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்	சுயாதீனமல்லாத
திரு.டீ.எம்.குணசேக்கர	நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்	சுயாதீனமல்லாத
திரு. டப்.பீ.ஆர்.பீ.எச்.பொன்சேக்கா	நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்	சுயாதீனமல்லாத
திரு.கே.பீ.எஸ்.பண்டார	நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்	சுயாதீனமல்லாத
திரு.என்பெரேரா	நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்	சுயாதீனமல்லாத
திரு.எஸ்.என்.தயாரத்ன	நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்	சுயாதீனமான
திரு.எஸ்.பீ.அர்ஷகுலரத்ன	நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்	சுயாதீனமான
திரு. எச்.ஜே.டீ.பொன்சேக்கா	நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்	சுயாதீனமான

கம்பனியின் நடவடிக்கைகள் சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் அறிக்கை

மீளாய்வாண்டினுள் நியமனங்கள்

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வர்த்தக சட்டத்தின் 12 (6) உறுப்புரையின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் வெளியிடப்பட்ட கட்டளையின் பிரகாரம் திரு. ஈ.எம். ரொனால்ட் சீ பெரேரா அவர்களினால் விடுக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் திரு. ஈ.எம்.ரொனால்ட் சீ பெரேரா, திருமதி எஸ். பீ.வெல்லப்பிலி, திரு.ஆர்.ரீ.விஜேசிங்க, திரு. சீ.என்.விஜேவர்தன, திரு.ஏ.எஸ்.பத்மபெரும மற்றும் எச்.பீ.ஏ.குணவர்தன ஆகியோர் 2016.03.02 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் MBSL இன் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

கலாநிதி எஸ்.லொக்குஹேவா, திரு.டீ.எம்.குணசேக்கர, திரு. டப்.பீ.ஆர்.பீ.எச்.பொன்சேக்கா, திரு.கே.பீ.எஸ்.பண்டார, என். பெரேரா, திரு.எஸ்.என்.தயாரத்ன, திரு.எஸ்.பீ.அர்ஷகுலரத்ன, திரு. எச்.ஜே.டீ.பொன்சேக்கா ஆகியோர் 2016.07.26 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் MBSL இன் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

மீளாய்வாண்டினுள் இராஜினாமா

கம்பனிச் சட்டக் கோவையின் 84(b) சட்டத்தின் பிரகாரம் திரு. ஆர்.பீ.கே.கால்லகே, திரு.டீ.எம்.குணசேக்கர, திரு.எஸ்.எஸ். கமகே, திரு.ஏ.எச்.சமரசுந்தர, திரு.எஸ்.எல.ரஹ்மான், திரு. எல். சீ. த சில்வா, பீ.ஜே.சின்னய்யா மற்றும் திரு. டப்.பீ.ஆர்.பீ.எச். பொன்சேக்கா (திரு.டீ.எம்.குணசேக்கர அவர்களுக்கான பதிலீட்டுப் பணிப்பாளர்) ஆகியோரின் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாகின.

திருமதி எஸ்.பீ.வெல்லப்பிலி 2016.05.17 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் MBSL பணிப்பாளர் சபையிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

திரு.ஆர்.ரீ.விஜேசிங்க 2016.06.28 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது அவர் பணிப்பாளராக நியமனம் பெறுவதற்கு முன் வராமை காரணமாக 2016.06.28 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் MBSL இன் அவரது பணிப்பாளர் பதவி முடிவுறுத்தப்பட்டது.

திரு. ஈ.எம்.ரொனால்ட் சீ பெரேரா, திரு.ஏ.எஸ்.பத்மபெரும, எச். பீ.ஏ.குணவர்தன ஆகியோர் 2016.07.26 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் MBSL பணிப்பாளர் சபையிலிருந்து இராஜினாமா செய்துள்ளனர்.

2017 ஜனவரி 01 ஆம் திகதியின் பின்னரான நியமனங்கள்

2017.04.20 ஆம் திகதி முதல் அருலுக்கு வரும் வகையில் திரு. கே.பீ.எஸ்.பண்டார - சுயாதீனமல்லாத கூநிறைவேற்று அல்லாத பணிப்பாளருக்கு பதிலீட்டுப் பணிப்பாளராக திரு ஆர்எர்.டீ.வீ. ஜயபாஹு அவர்கள் நியமிக்கப்பட்டார்.

2017.05.12 ஆம் திகதி முதல் அருலுக்கு வரும் வகையில் திரு.டீ.எம்.குணசேக்கர - சுயாதீனமல்லாத கூநிறைவேற்று அல்லாத பணிப்பாளருக்கு பதிலீட்டுப் பணிப்பாளராக திரு டீ.எம்.எல். பீ.தசநாயக்க அவர்கள் நியமிக்கப்பட்டார்.

2017 ஜனவரி 01 ஆம் திகதியின் பின்னர் இராஜினாமா செய்தல்

எதுவும் இல்லை

தெரிவு செய்துகொள்வதற்கான பரிந்துரைகள்

சங்கத்தின் சட்டக் கோவையின் 93 ஆவது சட்டத்தின் பிரகாரம், கலாநிதி எஸ்.லொக்குஹேவா, திரு.டீ.எம்.குணசேக்கர, திரு. டப். பீ.ஆர்.பீ.எச்.பொன்சேக்கா, திரு.கே.பீ.எஸ்.பண்டார, என்.பெரேரா, திரு.எஸ்.என்.தயாரத்ன, திரு.எஸ்.பீ.அர்ஷகுலரத்ன மற்றும் திரு. எச்.ஜே.டீ.பொன்சேக்கா ஆகியோர் ஓய்வு பெற்றதுடன், பணிப்பாளர் சபையின் ஏகமனதான சிபாரிசிற்கமைய எதிர்வரும் வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்காக முன்வருவதற்கு இடமுண்டு.

திரு.சீ.என்.விஜேவர்தன அவர்கள் சங்கத்தின் சட்டக் கோவையின் 87 ஆவது சட்டத்துடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 86 ஆவது சட்டத்திற்கமைய ஓய்வு பெற்றதுடன் பணிப்பாளர் சபையின் ஏகமனதான சிபாரிசிற்கமைய எதிர்வரும் வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்காக முன்வருவதற்கு இடமுண்டு.

23. பணிப்பாளர் சபைக் கூட்டம்

பணிப்பாளர் சபைக் கூட்டம் மற்றும் கணக்காய்வுக் குழு, ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழு, ஊதியக் குழு மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பரிமாற்றல் மீளாய்வுக் குழு போன்ற சபை உப குழுக்களின் கூட்டங்கள் உட்பட்ட பணிப்பாளர்களின் கூட்டங்களுக்கு அவர்களது பங்கேற்பு சம்பந்தமான விபரம் 105 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

24. உரிமைகள் தொடர்பான பதிவேடு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கம்பனி உரிமைகள் பதிவேட்டை பேணி வருகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 192(2) உறுப்புரைகளின் கீழ் காணப்படும் விதிமுறைகளுக்கமைய வங்கியின் பணிப்பாளர்கள் ஒப்பந்தம் மற்றும் உத்தேச ஒப்பந்தம் சம்பந்தமாக அவர்களது தொடர்பை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த தொடர்புகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அந்தத் தகவல்கள் ஆண்டறிக்கையின் 206 ஆம் பக்கம் முதல் 209 ஆம் பக்கம் வரை தொடர்புடைய தரப்பினருக்கான பக்கங்களில் நிதிக் கூற்றுக்களின் 41 ஆவது குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

25. பணிப்பாளர்களின் ஊதியம்

ஆண்டினுள் செலுத்திய பணிப்பாளர்களுக்கான கட்டணம் மற்றும் ஊதியம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

	கம்பனி	குழுமம்
	ரூ.மி.	ரூ.மி.
பணிப்பாளர்களுக்கான கட்டணம், ஊதியம்	4.12	7.37

26. கம்பனியின் பங்குகளில் பணிப்பாளர்களின் உரிமை

திரு.சீ.என்.விஜேவர்தன அவர்களுக்குரிய 4,235 பங்குகளைத் தவிர 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கம்பனியின் எந்தவொரு பணிப்பாரும் பங்குகளுக்கான உரிமையைக் கொண்டிருக்கவில்லை.

27. பிரேரிக்கப்பட்ட அல்லது பிரேரிக்கப்படாத ஒப்பந்தங்கள் சம்பந்தமாக பணிப்பாளர்களின் உரிமை

நேரடியான மற்றும் மறைமுகமான இரு முறைகளிலும் பிரேரிக்கப்பட்ட அல்லது பிரேரிக்கப்படாத ஒப்பந்தங்கள் சம்பந்தமாக பணிப்பாளர்களின் உரிமைகள் 206 ஆம் பக்கம் முதல் 209 ஆம் பக்கம் வரை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

28. தொடர்புடைய தரப்புடனான கொடுக்கல் வாங்கல்கள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பயன்படுத்திய இலங்கை கணக்கீட்டுத் தரம் LKAS 24 - தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர் மற்றும் உரிய கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் அனைத்தையும் பணிப்பாளர்கள் வெளியிட்டுள்ளனர். நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இந்த விடயம் பயன்படுத்திக்கொள்ளப்படும். அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் 41 ஆவது குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது பணிப்பாளர்களின் ஆண்டறிக்கையின் அத்தியாவசியப் பகுதியாகும்.

29. கணக்காய்வாளர்களை நியமித்தல்

ஓய்வு பெறும் கணக்காய்வாளர்கள் மேற்கொண்ட பணியை தொடர்ந்து மேற்கொள்வதற்கு பிரதம கணக்காய்வாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கணக்காய்வாளர்களை மீண்டும் நியமனம் செய்வதற்கு மற்றும் அவர்களுக்குரிய கணக்காய்வுக் கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு அதிகாரத்தை ஒப்படைப்பதற்கான பிரேரணை எதிர்வரும் பொதுக் கூட்டத்தில் முன்மொழியப்படவுள்ளது.

30. கணக்காய்வாளர்களின் ஊதியம் மற்றும்கூகுழுமத்துடனான தொடர்பு

2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வுக் கட்டணமாக கணக்காய்வாளர் நாயகத்திற்கு ரூபா 1,917,685 செலுத்தப்பட்டது. அது தவிர, அதிகாரம் பெற்ற கணக்காய்வுக்குட்படாத சேவைகளுக்காக கம்பனியால் ரூபா 625,000 செலுத்தப்பட்டது.

கம்பனியின் சுயாதீனத் தன்மை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் ஏதேனுமொரு தொடர்பு அல்லது ஆர்வம் கணக்காய்வாளர்களுக்கு இல்லையென்பது பணிப்பாளர்களுக்கு அறியக் கிடைத்த கூற்றுக்களுக்கமைய தெளிவாகின்றது.

31. சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் இணக்கப்பாடு

“கம்பனியானது சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக எந்தவிதமான அலுவலிலும் ஈடுபடவில்லை.

32. சூழல் பாதுகாப்பு

சூழலுடன் தொடர்புடைய சகல சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை கம்பனி கடைப்பிடிக்கின்றது. கம்பனி சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு அலுவலிலும் ஈடுபட மாட்டாது.

33. நிறுவன ரீதியிலான நன்கொடைகள்

ஆண்டின் பொதுக் கூட்டத்தின்போது அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட பிரேரணைக்கமைய கம்பனியானது ஆண்டினுள் ரூபா 197”286 (2015: ரூபா 230,737) அன்புளிப்புச் செய்துள்ளது. இந்தத் தொகையினுள் கம்பனியின் நிறுவன ரீதியிலான சமூகப் பொறுப்புக்கள் (CSR) நிகழ்ச்சித் திட்டங்களின் பங்களிப்பு உள்ளடக்கப்படவில்லை. கம்பனியின் (CSR) நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த ஆண்டறிக்கையின் 52 ஆம் பக்கம் முதல் 56 ஆம் பக்கம் வரையிலான சமூகத் தொடர்புகள் அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது.

34. அறிக்கைப்படுத்தும் காலத்தின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றின் உரிய திகதிக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள ஏதேனும் நிகழ்வுகள் 213 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுக்களுக்கான 43 குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

35. முடிவுறுத்தப்படாத சட்ட நடவடிக்கைகள்

பணிப்பாளர் சபையின் கருத்துக்கு மற்றும் கம்பனியின் சட்த்தரணிகளின் ஆலோசனைகளுக்கமைய முடிவுறுத்தப்படாத சட்ட நடவடிக்கைகள் காரணமாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள வங்கியின் எதிர் காலச் செயற்பாடுகளுக்கு கணிசமான தாக்கம் ஏற்படாது. வங்கிக்கு எதிராக நிலவும் சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமான விபரம் நிதிக் கூற்றின் 218 ஆம் இலக்க நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 47 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

36. நிலைபேறான இருப்பு

நியாயமான முறையிலான ஒரு காலப் பகுதிக்கு செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியமான அளவு வளங்கள் இந்தக் கம்பனியிடம் காணப்படுவதாக பணிப்பாளர்கள் திருப்தியடைகின்றார்கள். அதற்கமைய, 214 ஆம் பக்கத்தின் நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்கள் 44 இல் கலந்துரையாடியதன் பிரகாரம் துணைக் கம்பனியான MBSL காப்புறுதிக் கம்பனியின் (MBSLI) தொடர்ந்தேர்ச்சியான நிலைத்திருப்பு சம்பந்தமான சிக்கல்கள் நிலவிய போதிலும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கம்போது அவர்கள் தொடர்ந்தேர்ச்சியான நிலைத்திருப்பு அனும் அடிப்படையைப் பயன்படுத்தியுள்ளனர்.

37. ஆபத்து முகாமைத்துவம் மற்றும் உள்ளக நிர்வாக முறைகள்

ஆபத்து முகாமைத்துவம்

கம்பனி முகங்கொடுக்கவிருக்கும் ஆபத்துக்களை இனங்கண்டுகொள்வதற்கான, மதிப்பீடு செய்வதற்காக மற்றும் முகாமைப்படுத்துவதற்காக இற்றைப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படும் செயற்பாடொன்று கம்பனியிடம் உண்டு. பணிப்பாளர்கள், சபையின் ஒருங்கிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழுவின் ஊடாக இந்தச் செயற்பாடுகள் முறையான கால அட்டவணையின் கீழ் மீளாய்வுக்குட்படுத்தப்புட்.ஆபத்தை முகாமைப்படுத்தும்போது கம்பனி எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பான விபரம் 122 – 131 வரை ஆபத்து முகாமைத்துவ அறிக்கையில் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

38. நிறுவன நல்லாளுகை

பணிப்பாளர்களின் கூற்றுக்கள்

பணிப்பாளர் சபை கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை முன்வைக்கின்றது.

அ) கம்பனி தனது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்புடைத்தாகும் சகல சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதாக மற்றும் ஏற்புடைத்தாகும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக எந்தவொரு நடவடிக்கையையம் மேற்கொள்வதில்லை.

ஆ) பணிப்பாளர்கள் கம்பனி தொடர்பான சகல ஒப்பந்தங்களின் சகல முக்கிய விடயங்களையும் தெளிவுபடுத்தியுள்ளதாக,

இ) கம்பனியின் பங்குரிமையாளர்களுக்கு ஆரம்ப வழங்கல்களின் விதிமுறைகளுக்கமைய சமமாக கருதிச் செயற்படுவதற்கு பணிப்பாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக,

(ஈ) தேவையான எடுகோள்கள் மற்றும் தகைமைகளின் உதவியுடன் வணிகம் தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் செயற்படுத்தப்படுவதாக மற்றும் பணிப்பாளர் சபை கம்பனியின் நிர்வாக/ வணிகத் திட்டமிடல்களை மீளாய்வுக்குட்படுத்தியுள்ளதாக மற்றும் நியாயமான ஒரு காலப் பகுதிக்கு செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் போதுமான அளவு வளங்கள் இந்தக் கம்பனியிடம் இருப்பதாக திருப்தியடைதல். அதற்கமைய, கம்பனியின், அதன் துணைக் கம்பனியின் மற்றும் அண்மிய கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் நிலையான இருப்பு எனும் எண்ணக் கருவின் அடிப்படையில் தயாரித்திருப்பதாக,

கம்பனியின் நடவடிக்கைகள் சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் அறிக்கை

(உ) நிதி, செயற்பாடுகள் மற்றும் இயைபு நிர்வாகம் மற்றும் ஆபத்து முகாமைத்துவம் உள்ளடக்கப்படும் உள்ளக நிர்வாகம் சம்பந்தமான மீளாய்வொன்றை பணிப்பாளர் சபை பேணி வருவதாக மற்றும் இவற்றின் உற்பத்தித் திறன் மற்றும் சிறப்பான இயைபு சம்பந்தமாக நியாயமான சான்றிதழைப் பெற்றிருப்பதாக,

இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனம் மற்றும் இலங்கை பிணைப் பத்திரங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுவுடன் இணைந்து வெளியிடப்பட்டுள்ள நிறுவன நல்லாளுகை சம்பந்தமான சிறப்பான நடைமுறைகள் அடங்கிய கோவையில் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நிறுவன நல்லாளுகை சம்பந்தமான விதிமுறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய கம்பனி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் 72 – 105 வரையிலான பக்கங்களில் நிறுவன நல்லாளுகை தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

39. மனித வளங்கள்

கம்பனி ஊழியர்களை மேம்படுத்துவதற்கு மற்றும் நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அவர்களது பங்களிப்பை உச்சளவில் பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான மனித வளங்கள்முகாமைத்துவக் கொள்கைகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்தக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் சகல ஊழியர்களையும் சமமாகக் கவனித்தலை உறுதிப்படுத்துவதுடன் அது உயர் ஊக்குவிப்புக்கு காரணமாக அமைகின்றது.

40. பொதுக் கூட்டம்

கம்பனியின் 35 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தை கொழும்பு 1, லோட்டஸ் வீதி, இலக்கம் 64 இல் அமைந்துள்ள கலதாரி ஹோட்டல் வரவேற்பு மண்டபத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

35 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் சம்பந்தமான அறிக்கை 278 ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

41. அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களை ஏற்றுக்கொள்ளல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 168 (1) (ம) உறுப்புரைக்கமைய பணிப்பாளர் சபை இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்கின்றது.

பணிப்பாளர் சபையின் சார்பில் இந்த ஆண்டறிக்கையில் கையொப்பமிட்டவர்கள்:

கலாநிதி எஸ்.லொக்குஹேவா
தலைவர்

சீ.என்.விஜேவர்தன
பணிப்பாளர்

கே.ஜயதிலக்க
கம்பனியின் செயலாளர்

2017 மே 17
கொழும்பு

கணக்காய்வு குழு அறிக்கை

மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா பினேன்ஸ் பீஎல்சீ (MBSL) இன் கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுக் குழு ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளும். கணக்காய்வுக் குழுவின் ஒழுங்கு விதிமுறைகளின் விடயப் பரப்பு புதிய ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைகள், தரங்கள் மற்றும் சட்டங்களின் ஏற்பாடுகள் உள்ளடக்கியவாறு முறையாக மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு இற்றைப்படுத்தப்படும்.

கணக்காய்வு குழுவில் அடங்குவோர்.

2016 மார்ச் மாதம் பணிப்பாளர் சபை மீண்டும் அமைக்கப்பட்டதன் பிரகாரம், கணக்காய்வுக் குழு கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது :

- ரனெல் ரீ விஜேசிங்க - தலைவர்
  நிறைவேற்று அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்
  (2016.04.29 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டதுடன் 2016.07.26 ஆம் திகதி இராஜினாமா செய்துள்ளார்)

  சீ.என்.விஜேவர்தன - அங்கத்தவர்
  நிறைவேற்று அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்
  (2016.04.29 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டதுடன் 2016.07.26 ஆம் திகதி இராஜினாமா செய்துள்ளார்)

  திரு.ஏ.எஸ்.பத்மபெரும
  நிறைவேற்று அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்
  (2016.04.29 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டதுடன் 2016.07.26 ஆம் திகதி இராஜினாமா செய்துள்ளார்)

  2016 ஜுலை மாதம் பணிப்பாளர் சபை மீண்டும் அமைக்கப்பட்டதன் பிரகாரம், கணக்காய்வுக் குழு கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது :

- டப்.பீ.ஆர்.பீ.எச்.பொன்சேக்கா - தலைவர்
  நிறைவேற்று அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்
  (2016.08.10 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்)

- திரு.கே.பீ.எஸ்.பண்டார - அங்கத்தவர்
  நிறைவேற்று அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்
  (2016.08.10 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டதுடன் 2016.12.23 ஆம் திகதி இராஜினாமா செய்துள்ளார்)

- திரு.என்.பெரேரா - அங்கத்தவர்நிறைவேற்று அல்லாத சுயாதீனமான பணிப்பாளர் (2016.08.10 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்)

- திரு.எஸ்.என்.தயாரத்ன - அங்கத்தவர்நிறைவேற்று அல்லாத சுயாதீனமான பணிப்பாளர் (2016.08.10 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்)

- திரு.எஸ்.பீ.அர்ஷகுலரத்ன - அங்கத்தவர் - நிறைவேற்று அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர் (2016.08.10 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்)

- எச்.ஜே.டீ.பொன்சேக்கா - அங்கத்தவர் நிறைவேற்று அல்லாத சுயாதீனமான பணிப்பாளர் (2016.12.23 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்)

குழுக் கூட்டம்

மீளாய்வாண்டில் 03 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் முறையாக பணிப்பாளர் சபையிடம் அறிக்கைப்படுத்தப்படுகின்றது.

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் நிதித் தலைமை அதிகாரியின் அழைப்பிற்கிணங்க கூட்டங்களில் கலந்து கொள்கின்றார். தெளிவுபடுத்திக் கொள்வாதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் குழுக் கூட்டங்களில் பிரிவுத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உதவிப் பொது முகாமையாளர் உள்ளக கணக்காய்வுக் குழுவின் செயலாளர் ஆவார்.

குழுவின் முக்கிய பொறுப்புக்கள்

பணிப்பாளர் சபையின் உப குழுவாக நடவடிக்கை மேற்கொள்ளும் MBSL இன் கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபைக்கு அதன் நிர்வாகப் பொறுப்புக்களை மேற்கொள்ளும்போது உதவி புரிவதுடன் நிதி அறிக்கைப்படுத்தும் செயற்பாடு சம்பந்தமாக சுயாதீனமான மீளாய்வொன்று மேற்கொள்ளப்படும். கீழ் குறிப்பிடப்படும் துறைகள் கணக்காய்வுக் குழுவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும்.

நிதி அறிக்கைப்படுத்தல்

அ) நிதிக் கூற்றுக்கள், அதன் ஆண்டறிக்கை, கணக்கின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியின் நிதித் தகவல்களை மீளாய்வுக்குட்படுத்தல்.

ஆ) நிதி அறிக்கைப்படுத்தலில் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உள்ளக கட்டுப்பாட்டு முறைகளில் அளவு மற்றும் விளைதிறனை மதிப்பீடு செய்தல் , மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்.

இணக்கப்பாடு

அ) கம்பனியினால் பயன்படுத்தப்பட்ட முறைகள் மற்றும் நடைமுறைகளின் உற்பத்தித் திறனை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் ஏற்புடைத்தாகும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடனான இணக்கப்பாட்டை ஒழுங்குமுறைப்படுத்தல்.

ஆ) அவ்வாறான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடனான இணக்கப்பாடு சம்பந்தமாக ஒழுங்குபடுத்தல் நிறுவனம் மற்றும் கூஅல்லது ஏதேனுமொரு கணக்காண்வாளரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் கண்டுபிடிப்புக்களை மீளாய்வுக்குட்படுத்தல்

கணக்காய்வு குழு அறிக்கை

இ) ஒழுங்குபடுத்தல் மற்றும் ஒழுங்கு விதிகள் தேவைகளுக்கு இணக்கம் ஏற்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் சம்பந்தமாக தொடர்ந்தும் கண்டறிதல்

உள்ளக கணக்காய்வு

அ) உள்ளகக் கணக்காய்வு அலுவல், கணக்காய்வு அறிக்கை மற்றும் சிபாரிசுகளின் அடிப்படையில் எதிர் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளல் சம்பந்தமான வினைத்திறனை மீளாய்வுக்குட்படுத்தல்.

ஆ) கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு அலுவலின் கணக்காய்வு விதிமுறைகள், கணக்காய்வு திட்டம், செயற்பாடுகள், கணக்காய்வு விடயப் பரப்பு, அறிக்கைப்படுத்தல் தேவைகளை மீளாய்வுக்குட்படுத்தல்.

இ) முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்களுடன் உள்ளக கணக்காய்வாளர்களின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் மீளாய்வுக்குட்படுத்தல்

ஈ) அவ்வாறான கண்டுபிடிப்புக்கள் மற்றும் விளைவுகளின் ஊடாக உற்பத்தித்திறனை மதிப்பீடு செய்தல்.

வெளிவாரியான கணக்காய்வு

அ) வெளிவாரியான கணக்காய்வாளர்களின் சுயாதீனத்தன்மை மற்றும் விடயம் சார்ந்த தன்மையைப் போன்றே கணக்காய்வுச் செயற்பாட்டின் உற்பத்தித் திறனை மதிப்பீடு செய்தல்.

ஆ) உள்ளகக் கணக்காய்வுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

இ) கண்டுபிடிப்புக்கள், அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசு மற்றும் முகாமைத்துவ விளைவைப் போன்றே சீர் செய்யும் திட்டங்களின் நிலைமையைக் காண்பித்து நிதிக் கூற்றுக்கள் மற்றும் முகாமைத்துவக் கடிதம் சம்பந்தமாக வெளிவாரியான கணக்காய்வு அறிக்கையை மீளாய்வுக்குட்படுத்தல்.

ஈ) குழு அல்லது கணக்காய்வாளர்கள் தனிப்பட்ட வகையில் கலந்துரையாட வேண்டிய ஏதேனுமொரு விடயம் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக குழுவானது வேறு வெளிவாரியான கணக்காய்வாளர்களைச் சந்திக்கும்.

ஆண்டினுள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அலுவல்களின் பொழிப்பு

மீளாய்வாண்டில் குழுவானது கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் அதன் அலுவலை மேற்கொண்டது.

நிதி சார்ந்த தகவல்கள்

அ) இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் மற்றும் ஏனைய ஏற்புடைத்தாகும் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் தேவைகளுக்கு இணங்க கம்பனியின் காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களை பொது மக்களிடம் பகிர்ந்தளிப்பதற்கு முன்னர் வெளிவாரியான கணக்கர்வாளர்களுடன் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது.

ஆ) நிதி அறிக்கைப்படுத்தலின் உண்மைத்தன்மையை உறதிப்படுத்துவதற்காக உள்ளக நிர்வாக அமைப்புக்களின் அளவு மற்றும் விளைதிறனை மதிப்பீடு செய்தல்.

இணக்கப்பாடு :

அ) நாட்டின் ஏற்புடைத்தாகும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடனான இணக்கப்பாட்டை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக கம்பனியின் அமைப்பு மற்றும் நடைமுறைகளின் விளைதிறனை மீளாய்வுக்குட்படுத்தல்.

ஆ) ஏற்புடைத்தாகும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடனான இணக்கப்பாட்டு நிலைமை சம்பந்தமாக முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் சட்ட ரீதியிலான செலுத்துகைகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வுக்குட்படுத்தி கலந்துரையாடப்பட்டது.

உள்ளக கணக்காய்வு

அ) உள்ளக நிர்வாக நடைமுறைகள், கணக்கீட்டு முறைகள் மற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டு நடைமுறைகளின் விளைதிறன் மீளர்ய்வுக்குட்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கு போதுமானளவு காலத்தை வழங்குதல்.

ஆ) கணக்காய்வு மற்றும் விசாரணைகளை உள்ளடக்கி உள்ளகக் கணக்காய்வாளரின் அறிக்கையை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளை தொடர்ச்சியாக செயற்படுத்தல் சம்பந்தமாக முகாமைத்துவத்துடன் கலந்துரையாடுதல்.

இ) உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுவதனை ஒழுங்குமுறைப்படுத்துவதாக மற்றும் அவர்களது மதிப்பிடலை தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வுக்குட்படுத்தல்.

ஈ) உள்ளகக் கணக்காய்வை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் அதனூடாக முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகளை செயற்படுத்துவதனை ஒழுங்குபடுத்தல்.

வெளிவாரியான கணக்காய்வு

அ) நாட்டின் அரசியல் யாப்புக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரியான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. 2016 ஆம் ஆண்டில்பட்டயக் கணக்காளர்களான M/s BDO Partners கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். கணக்காய்வை ஆரம்பிப்பதற்கு முன்னர் செயற்பாடு மற்றும் நடைமுறை பற்றிக் கலந்துரையாடுவதற்காக கணக்காய்வுக் குழு வெளிவாரியான கணக்காய்வாளர் BDO Partners ஐச் சந்தித்தார்.

ஆ) வெளிவாரியான கணக்காய்வாளரால் வெளியிடப்பட்ட முகாமைத்துவக் கடிதம் மற்றும் அதற்கு முகாமைத்துவத்தின் பதிலை குழு மீளாய்வுக்குட்படுத்தியது.

இ) 2016 ஆம் ஆண்டில் கணக்காய்வுடன் தொடர்பான கணக்காய்வாளரால் இனங்காணப்பட்ட இறுதிக் கணக்காய்வு விடயங்கள் சம்பந்தமாக மீளாய்வை மேற்கொண்டு அது சம்பந்தமாக கண்டறியப்பட்டது.

முடிவுரை

கம்பனியின் அலுவல்கள் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணங்க நிர்வகிக்கப்படுவதாக கம்பனியின் சொத்துக்கள் முறையாக கணக்கிடப்படுவதாக மற்றும் போதுமான அளவு பாதுகாக்கப்படுவதாக நியாயமான சான்றிதழை வழங்கும் உள்ளக நிர்வாகம் சம்பந்தமாக கணக்காய்வுக் குழு திருப்தியடைகின்றது.

கணக்காய்வுக் குழுவின் பொறுப்புக்கள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகள் சம்பந்தமான 2009 இன் 4 ஆம் இலக்க கட்டளை மற்றும் கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட விதிமுறைகளுடன் இயைந்து செல்வதா கணக்காய்வுக்குழு உறுதிப்படுத்துகின்றது.

டப்.பீ.ஆர்.பீ.எச்.பொன்சேக்கா

தலைவர் - கணக்காய்வுக் குழு

2017 மே மாதம் 17 ஆம் திகதி

ஊதியக் குழுவின் அறிக்கை

ஊதியக் குழு பணிப்பாளர் சபையின் உப குழுவாக இருப்பதுடன் கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

திரு. ருவன் கால்லகே- தலைவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுப் பணிப்பாளர்

(2016.03.02 ஆம் திகதி முதல் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகியுள்ளது)

திரு. சந்துன் கமகே - அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

(2016.03.02 ஆம் திகதி முதல் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகியுள்ளது)

2016.04.29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஊதியக் குழு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது :

திரு.அஜித் குணவர்தன - தலைவர / சுயாதீனமற்ற / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

(2016.07.26 ஆம் திகதி முதல் பணிப்பாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்)

திரு. ரநெல் ரீ விஜேசிங்க - அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

(2016.06.28 ஆம் திகதி முதல் பணிப்பாளர் பதவி முடிவுறுத்தப்பட்டுள்ளது)

திரு. சீ.என். விஜேவர்தன - அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

2016.08.10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஊதியக் குழு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது:

கலாநிதி எஸ்.லொக்குஹேவா - தலைவர் /

சுயாதீனமான / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

திரு. சீ.என். விஜேவர்தன - சுயாதீனமற்ற / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

திரு. டீ.எம்.குணசேக்கர - சுயாதீனமற்ற / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

திரு.எச்.ஜே.டீ.பொன்சேக்கா - சுயாதீனமான / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

திரு.எஸ்.என்தயாரத்ன - சுயாதீனமான / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

2016.12.23 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஊதியக் குழு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது :

கலாநிதி எஸ்.லொக்குஹேவா - தலைவர் / சுயாதீனமற்ற / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

திரு. சீ.என். விஜேவர்தன - சுயாதீனமற்ற / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

திரு. என். பெரேரா - சுயாதீனமற்ற / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

திரு.எச்.ஜே.டீ.பொன்சேக்கா - சுயாதீனமான / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

திரு.எஸ்.என்தயாரத்ன - சுயாதீனமான / நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

திரு. எஸ்.பீ.அர்ஷகுலரத்ன – சுயாதீனமான / நிறைவேற்று அல்லாத

ஊதியக் குழுவின் தலைவர் பணிப்பாளர் சபையின் தலைவராகவும் பணியாற்றுகின்றார். ஊதியக் குழு மீளாய்வாண்டின்போது ஒரு தடவை கூடியது.

மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா பினேன்ஸ் பீஎல்சீ (MBSL)இன் ஊதியக் குழு நிறைவேற்று (இருப்பின்) மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களைப் போன்றே பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு விரிவான ஊதியத் திட்டமொன்றை தீர்மானிப்பதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.

கம்பனியின் ஊதியக் கொள்கையானது கம்பனி எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்ற வகையில் நிபுணர்களைக் கொண்ட போட்டி அடிப்படையிலான சூழலில் தரமான முகாமைத்துவமொன்றை கவர்வதற்கு, ஊக்குவிப்பதற்கு மற்றும் தக்க வைத்துக்கொள்வதற்கு முயற்சி செய்கின்றது.

(MBSL) மற்றும் அதன் பங்குரிமையாளர்களின் நீண்ட கால நன்மையைக் கவனத்திற்கொள்வது தவிர ஊதியக் குழுவினால் பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியத்தை தீர்மானிக்கும்போது அரச தொழில் முயற்சிகளுடன் தொடர்பான சுற்றறிக்கைகள் (அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைகள்), குறிப்பிட்ட நிரல் அமைச்சினால் வெளியிடப்படும் கட்டளைகள் மற்றும் இலங்கை வங்கியின் இணக்கப்பாட்டுடன் இயைந்து செல்லல் வேண்டும்.

பணிப்பாளர்களுக்கு பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் உப குழுக் கூட்டங்களுக்கு வருகை தருவதற்குரிய செலவைப் பெற்றுக்கொள்வதற்குப் போன்றே பயணச் செலவு முற்பணத்தைப் பெற்று பின்னர் தீர்த்துக்கொள்ளும் உரிமையும் உண்டு. அத்துடன், பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு அவ்வப்போது தீர்மானிக்கும் பிரகாரம் குழு மட்டத்திலான பங்கேற்பு ஊடாக பெற்றுக்கொள்ளப்படும் மேலதிக சேவைகள் கூபொறுப்புக்களுக்காக மேலதிக கட்டணத்தைச் செலுத்துவதற்கான உரிமையும் உண்டு.

தலைவருக்கான ஊதியம் இணையான நிறுவனங்களினால் செலுத்தப்படும் போட்டி அடிப்படையிலான சந்தை வீதத்தை அடிப்படையாகக் கொண்டு அவரது தேர்ச்சி, கல்வித் தகைமை, திறமை மற்றும் தலைமைத்துவப் பண்புகள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு தீர்மானிக்கப்படும்.

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் ஊதியம் நிறுவனத்தின் ஊதிய கட்டமைப்புக்கு பொருந்தும் வகையில் ஊதியக் குழுகூ பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் இணையான நிறுவனங்களினால் செலுத்தப்படும் போட்டி அடிப்படையிலான சந்தை வீதம் மற்றும் ஏனைய ஏற்புடைத்தாகும் காரணிகளை கவனத்திற் கொண்டு அவரது துறையில் அனுபவம், கல்வித் தகைமை மற்றும் திறமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் ஊதியமானது பணம் மற்றும் பணமாக அல்லாத அனுகூலங்கள் போன்றவற்றைக் கொண்டிருப்பதுடன், வினைத்திறன் சம்பந்தமான அளவிடக்கூடிய தரங்களுடன் தொடர்புபடுத்தப்படும்.

ஊதியக் குழுவானது இறுதி அங்கீகாரத்திற்காக தனது சிபாரிசுகளை பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கும்.

பணிப்பாளர்களின் மொத்த வேதனம் நிதிக் கூற்றுக்களில் 161 ஆம் பக்கத்தில் 13 ஆம் இலக்க குறிப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.



கலாநிதி எஸ்.லொக்குஹேவா
தலைவர்- ஊதியக் குழு

2017 மே மாதம் 17 ஆம் திகதி
கொழும்பு

தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல் (பரிமாற்றல்கள்) மீளாய்வுக் குழு

குழுவின் நோக்கம்

குழுவின் நோக்கம், கோவையில் தெளிவாக விடுவிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் (பரிமாற்றல்கள்) தவிர உத்தேச சகல தொடர்புடைய தரப்பினருடனான பரிமாற்றல்கள் முதலில் மீளாய்வுக்குட்படுத்தப்படும். அதற்கமைய, கோவையில் 27 ஆவது விதிமுறையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிமாற்றல்கள் தவிர ஏனைய சகல தொடர்புடைய தரப்புக்களுடனான பரிமாற்றல்கள் மீளாய்வுக் குழுவினால் (RPTRC) பரிமாற்றலுக்கு உட்படுவதற்கு முன்னர் அல்லது அவ்வாறான மீளாய்வின் அடிப்படையில் பரிமாற்றலை நிபந்தனையாக பிரகடனப்படுத்தினால் பரிமாற்றல்கள் முடிவுறுத்தப்படுவதற்கு முன்னர் மீளாய்வுக்குட்படுத்துவது அவசியமாகும்.

குழுவில் அடங்குவோர்

தொடர்புடைய தரப்புக்களுடனான பரிமாற்றல்கள் மீளாய்வுக் குழுவை கம்பனியின் பணிப்பாளர் சபை நியமனம் செய்யும். 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அது கீழ் குறிப்பிடப்படும் பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது:

	பணிப்பாளர்களின் பெயர்	பணிப்பாளர்களின் தராதரம்	அங்கத்துவ நிலைமை
1	திரு.எஸ்.என்.தயாரத்ன	நிறைவேற்று தரம் அல்லாத சுயாதீனமான பணிப்பாளர்	தலைவர்
2	திரு. சீ.என்.விஜேவர்தன	நிறைவேற்று தரம் அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்	அங்கத்தவர்
3	திரு.டப்.பீ.ஆர்.பீ.எச். பொன்சேக்கா	நிறைவேற்று தரம் அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்	அங்கத்தவர்
4	திரு.கே.பீ.எஸ்.பண்டார	நிறைவேற்று தரம் அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்	அங்கத்தவர்
5	திரு.எச்.ஜே.டீ.பொன்சேக்கா	நிறைவேற்று தரம் அல்லாத சுயாதீனமான பணிப்பாளர்	அங்கத்தவர்
6	திரு. எஸ்.பீ.அர்ஷகுலரத்ன	நிறைவேற்று தரம் அல்லாத சுயாதீனமான பணிப்பாளர்	அங்கத்தவர்

குழுவின் விடயப்பரப்பு

- கம்பனியின் தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்களை மீளாய்வுக்குட்படுத்துவதற்கு மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்தல் மற்றும் தற்போது நிலவும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மீளாய்வுக்குட்படுத்தல்.

- 27 ஆவது விதிமுறையின் கீழ் கோவையில் தெளிவாக விடுவிக்கப்பட்ட பரிமாற்றல்கள் தவிர கம்பனியின் உத்தேச தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்களை முன்னரே மீளாய்வுக்குட்படுத்தல்.

- கம்பனி பிரவேசிக்கவிருக்கும் தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்களுக்கு பணிப்பாளர் சபையின் அல்லது பங்குரிமையாளர்களின் அங்கீகாரம் தேவையா என்பதனைத் தீர்மானித்தல்.

- தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்களுடன் தற்போது நிலவும் பரிமாற்றல்கள் சம்பந்தமாக சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் பின்பற்றப்படும் மீண்டும் மீண்டும் ஏற்படும் தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்கள் தொடர்பாக வழிகாட்டல்களை விதித்தல்.

- கம்பனியின் எந்தவொரு பணிப்பாளரும் அவர் தொடர்புடைய உத்தேச தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்கள் தொடர்பான தகவல்களை வெளியிடும் நோக்கில் குழு அவ்வாறான பணிப்பாளர் ஒருவரிடம் வேண்டிக்கொண்டாலே தவிர கலந்துகொள்ளாமையை உறுதிப்படுத்தல்.

- குறிப்பிட்ட சட்டங்கள் கூஒழுங்கு விதிகளின் தேவைக்கிணங்க அண்மையிலுள்ள சந்தை பற்றிய வெளிப்பாடு மற்றும் ஆண்டறிக்கையில் வெளிப்பாடுகள் காலத்திற்கேற்ப மற்றும் விபரமான வகையில் மேற்கொள்ளப்படுவதனை உறுதி செய்தல்.

கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

கம்பனியானது தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்கள் கொள்கையை (RPT) செயற்படுத்துகின்றது. அதற்கமைய "தொடர்புடைய தரப்பாக" கருத்திற்கொள்ள முடியுமான நபர்கள் / நிறுவனங்கள் சம்பந்தமான வகைப்படுத்தல் இனங்காணப்பட்டுள்ளது. கம்பனியானது "மிகவும் நன்மை பயக்கும்" விடயத்தை தரப்புக்கு வழங்கும் விதத்தில் தொடர்புடைய தரப்புடன் பரிமாற்றலில் ஈடுபடுவதில்லையென தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல் கொள்கை ஊடாக உறுதிப்படுத்துகின்றது.

தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல் கொள்கைக்கமைய, பணிப்பாளர்களிடமிருந்து அவர்களுடன் தொடர்பான தொடர்புடைய தரப்பை இனங்கண்டுகொள்ளும் நோக்கத்திற்காக சகல பணிப்பாளர்களிடமிருந்தும் சுய வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும்.

பிணைப்புடன் தொடர்பான உள்ளகக் கொள்கை வரை காணப்படும் வணிக நடத்தைக் கோவை மற்றும் கம்பனியின் ஒழுக்க விதிகள் தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்களை முகாமைப்படுத்திக்கொள்ளும்போது முக்கிய அலுவல்களை மேற்கொள்கின்றது.

குழுக் கூட்டங்கள்

குழுவானது ஆண்டின் கடைசிப் பகுதியில் அமைக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டினுள் ஒரு தடவை கூடியுள்ளது. கூட்ட நடப்பெண் 04 அங்கத்தவர்களாகும். சிரேஷ்ட முகாமைத்துவத்தின் தேவைக்கேற்ப கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. நிதிப் பிரிவு குழுவிடம் தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்கள் சம்பந்தமான விரிவான அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் உரிய தரப்புடன் சகல பரிமாற்றல்கள் பற்றிய விபரம் குழுவினால் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது.

முடிவுரை

தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்களுடன் தொடர்பான பட்டியலிடப்பட்ட விதிமுறைகளுடன் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்திக் கூறப்படும் பிரகடமாக பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படும் பிரகடனமொன்று இந்த ஆண்டறிக்கையின் 41 ஆவது குறிப்பில் காணப்படுகின்றது.

எஸ்.என்.தயாரத்ன
தலைவர் - தொடர்புடைய தரப்புடனான பரிமாற்றல்கள் மீளாய்வுக் குழு

2017 மே மாதம் 17 ஆம் திகதி
கொழும்பு

ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழு

மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா பினேன்ஸ் பீஎல்சீ (MBSL) இன் ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழு (IRMC) பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆபத்து முகாமைத்துவக் கொள்கைக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்கின்றது. கம்பனிக்குள் சிறப்பான ஆபத்து முகாமைத்துவத்தைப் பேணி வருவதற்காக ஆபத்து முகாமைத்துவக் கொள்கை முறையாக மீளாய்வுக்குட்படுத்தி இற்றைப்படுத்தப்படுகின்றது.

ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழுவில் அடங்குவோர்

பணிப்பாளர் சபை மட்டத்திலான அங்கத்தவர்கள்

திரு. சீ.என்.விஜேவர்தன - தலைவர் நிறைவேற்று தரமல்லாத சுயாதீன பணிப்பாளர்	**திரு.கே.பீ.எஸ்.பண்டார** - அங்கத்தவர் நிறைவேற்று தரமல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்
திரு.எச்.ஜே.டீ.பொன்சேக்கா - அங்கத்தவர் நிறைவேற்று தரமல்லாத சுயாதீன பணிப்பாளர்	திரு.ரீ.முத்துகல - அங்கத்தவர் பிரதம நிறைவேற்று அதிகாரி

ஏனைய அங்கத்தவர்கள்

திரு.டீ. தலுவத்த - அங்கத்தவர், பிரதான செயற்பாடுகள் அதிகாரி - பிரிவு வலயம் 1	**திருமதி எஸ்.அமரதுங்க** - அங்கத்தவர் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - இணக்கப்பாடு
எஸ்.உடுவாவல - அங்கத்தவர் பிரதிப் பொது முகாமையாளர் - பிரிவு வலயம் 1	**திரு.எல். களுஆரச்சி** - அங்கத்தவர் பிரதிப் பொது முகாமையாளர் - பிரிவு வலயம் 3
திருமதி கே.ஜயதிலக்க பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம் மற்றும் கம்பனிச் செயலாளர்	**திரு.எல். பீரிஸ்** - அங்கத்தவர் பிரதிப் பொது முகாமையாளர் - தங்கக் கடன் மற்றும் உதவிச் சேவைகள்
திரு.ஜே.கம்லத் - அங்கத்தவர் பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல், உற்பத்தி மேம்பாடு, வைப்புக்கள் மற்றும் சேமிப்புக்கள்	**திரு.பீ.ஐ.களுஆரச்சி** - அங்கத்தவர் நிதித் தலைவர்
திரு.சீ.வித்தானரச்சி - அங்கத்தவர் தலைவர் - தகவல் தொழில்நுட்பப் பிரிவு	**திரு.எஸ்.பெர்னாந்து** - அங்கத்தவர் உதவிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு
திரு.கே.ஜயசுந்தர - அங்கத்தவர் பிரதிப் பொது முகாமையாளர் - அறவீடுகள்	**திரு.ரீ.டீ.டீ.கே. குணவர்தன** - அங்கத்தவர் உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள்
திரு.எல்.குணவர்தன - அங்கத்தவர் பிரதம முகாமையாளர் (பதறில் கடமை) - நிறுவன ஆலோசனை மற்றும் மூலதனச் சந்தை	**எச்.என்.விஜேதுங்க** - அங்கத்தவர் முகாமையாளர் - ஆபத்து முகாமைத்துவம்

IRMC கூட்டங்கள்

மீளாய்வாண்டினுள் 03 ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. ஆபத்து முகாமைத்துவ அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆபத்துக்கள் சார்ந்த அறிக்கைகள் ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின்போது மீளாய்வுக்குட்படுத்தப்படுவதுடன் ஆபத்து முகாமைத்துவ அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கியினால் விபரிக்கப்பட்டுள்ள நிறுவனங்களை நிர்வகித்தல் பற்றிய கட்டளைகளின் பிரகாரம் சிபாரிசுகளுடன் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்படும்.

குழுவின் பிரதான பொறுப்புக்கள்

IRMC என்பது பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டிருக்கும் உப குழுவொன்றாக இருப்பதுடன், அது நிறைவேற்றுத் தரமல்லாத 03 பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் கடன்கள், சந்தை, திரவச் சொத்துக்கள், செயற்பாடுகள் மற்றும் மூலோபாய ரீதியிலான ஆபத்துக்கள் போன்ற ஆபத்துக்களை கண்காணிக்கும் பிரதான முகாமைத்துவப் பணியாட் தொகுதி உத்தியோகத்தர்களைக் கொண்டிருக்கும். MBSL கம்பனியின் செயலாளர் குழுவின் செயலாளராகப் பணியாற்றுவார்.

ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவ குழு பிரதான முகாமைத்துவ பணியாட் தொகுதியுடன் நெருங்கிய வகையில் செயற்படுவதுடன், குழுவிடம் ஒப்படைக்கப்படும் அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் வரையறைக்குள் பணிப்பாளர் சபைக்காக தீர்மானங்களை மேற்கொள்ளும். அது தவிர குழுவுக்கு கீழ் குறிப்பிடப்படும் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(I) பொருத்தமான ஆபத்துக் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்கள் ஊடாக மாதாந்த அடிப்படையில் கம்பனிக்குரிய ஆபத்தை மதிப்பீடு செய்தல், துணைக் கம்பனி மற்றும் சார்ந்த கம்பனிகள் தொடர்பில் நிதிக் கம்பனி மற்றும் குழுமத்தின் அடிப்படையில் ஆபத்துக்களை முகாமைப்படுத்தல்.

(II) விசேட ஆபத்துக்களை இனங்கண்டு கொள்வதற்கு மற்றும் குழுவினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் அளவு மற்றும் தர ரீதியிலான ஆபத்து வரையறைகள் பயன்படுத்திக்கொள்ளப்படும். மேலும் அவ்வாறான ஆபத்துக்களை முகாமைப்படுத்துவதற்கு கடன் குழு மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு போன்ற சகல முகாமைத்துவக் குழுக்களினதும் அளவு மற்றும் உற்பத்தித் திறனை மீளாய்வுக்குட்படுத்தல்.

(III) விசேட ஆபத்துக்கள் கம்பனியின் கொள்கைகள், கட்டுப்பாடு மற்றம் கண்காணிப்பு தேவைகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட மட்டத்தினைத் தாண்டியிருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த விசேட ஆபத்துக்களின் தாக்கத்தைக் குறைப்பதற்காக துரித நடவடிக்கை மேற்கொள்ளல்.

(IV) இற்றைப்படுத்தப்பட்ட (நாளதுவரையாக்கப்பட்ட) வணிகத் திட்டமிடல் உட்பட ஆபத்து முகாமைத்துவத்தின் சகல பிரிவுகளையும் மதிப்பீடு செய்வதற்காக குறைந்தது 04 மாதங்களுக்கொரு முறை கூடுதல்.

(V) விசேட ஆபத்துக்களை இனங்கண்டு கொள்வதற்கு தவறியதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் குழுவின் சிபாரிசின் பிரகாரம் மற்றும்/ அல்லது இலங்கை மத்திய வங்கியின் வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள் கண்காணிப்பு சம்பந்தமான திணைக்களத்தின் பணிப்பாளர் வழங்கியுள்ள ஆலோசனைப் பிரகாரம் துரித நடவடிக்கை எடுத்தல்.

(VI) பணிப்பாளர் சபையின் கருத்துக்கள், இணக்கப்பாடு மற்றும்/ அல்லது விசேட கட்டளைகளைக் கண்டுபிடித்து ஆபத்து முகாமைத்துவக் குழுவின், பணிப்பாளர் சபையின் அனைத்துக் கூட்டங்களினதும் பின்னர் ஒரு வாரத்திற்குள் ஆபத்து மதிப்பீட்டு அறிக்கையை பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்தல்.

(VII) சகல வணிகச் செயற்பாடுகள் துறைகள் தொடர்பான சட்டங்கள், ஒழுங்கு விதிகள், கட்டளைகள், பணிப்புரைகள், கட்டுப்பாட்டு அறிவுறுத்தல்கள்,உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு கம்பனியின் இணக்கப்பாட்டை மதிப்பீடு செய்வதற்காக இணக்கப்பாட்டுச் செயற்பாட்டை மேற்கொள்ளல். பிரதம முகாமைத்துவ பணியாட் தொகுதியலிருந்து தெரிவு செய்யப்பட்ட விசேட இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் இணக்கப்பாட்டு அலுவல்களை மேற்கொண்டு வருவதுடன் அவ்வப்போது குழுவுக்கு விடயங்கள் அறிக்கைப்படுத்தப்படுகின்றது.

முடிவுரை

MBSL இன் முக்கியமான ஆபத்துக்களை இனங்கண்டு கொள்ளல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமைப்படுத்தும் செயற்பாட்டை குழு மீளாய்வுக்குட்படுத்தியுள்ளதுடன் உரிய முன் ஆபத்து அளவுருக்குள் கம்பனியின் மொத்த வணிக மூலோபாயங்களைச் செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பை வழங்கியது.

சீ.என்.விஜேவர்தன

தலைவர் ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழு

2017 மே மாதம் 23 ஆம் திகதி

கொழும்பு

ஆபத்து முகாமைத்துவம்

G4-45-47

ஆபத்து முகாமைத்துவ மீளாய்வு

செயலூக்கத்துடன்கூடிய மற்றும் விளைதிறன்மிக்க ஆபத்து முகாமைத்துவம் நிலையான தன்மையை விரும்பும் தரப்பினரை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருக்கும். கம்பனியொன்று என்ற வகையில் எமது துறையில் மாற்றமடையும் நிலைமையுடன் நாம் இணங்கிச் செல்வதுடன்எமது ஆபத்து முகாமைத்துவ வரையறை மற்றும் பயன்படுத்தல்களை தொடர்ந்து மேற்கொள்ளுவதற்கான மற்றும் அதிகரிப்பதற்கான முக்கியத்துவத்தை நாம் இனங்கண்டுள்ளோம். ஆபத்து மறுசீரமைப்புக்கள், மூலோபாயங்களைத் தீர்மானிக்கும்போது மட்டுமன்றி எமது அன்றாட செயற்பாடுகளை முகாமைப்படுத்தும்போது முக்கிய விடயமாகும். ஆபத்து முகாமைத்துவத்திற்காக ஆபத்துக்களின் அளவு மற்றும் கட்டுப்படுத்துவதற்காக விபரமான கொள்கை சட்டகம், சிறப்பான நிர்வாக கட்டமைப்பு மற்றும் பொருத்தமான கருவிகள் மற்றும் அறிவின் ஊடாக கம்பனியின் ஆபத்து முகாமைத்துவத்திற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

2016 விசேட நிகழ்வுகள்

- ஆபத்து முகாமைத்துவக் கொள்கைகளை மீளாய்வுக்குட்படுத்தல்.
- திரவ நிலை ஆபத்து முகாமைத்துவக் கொள்கையை மீளாய்வுக்குட்படுத்தல்.
- 2016 CCD விதிமுறைகளுடன் இணங்கிச் செயற்படுவதற்கு AML கொள்கைளை மீளாய்வுக்குட்படுத்தல்
- 4.2% இனால் மொத்த கடன் வீதத்தை குறைத்தல்.
- ஒழுங்குபடுத்தல்(கட்டுப்படுத்தல்) தேவைகளுக்காக உயர் மட்டத்திலான திரவச் சொத்துக்கள் வீதத்தை பேணிவரல்.
- புதிய மத்திய வங்கியியல் கட்டமைப்புக்குள் முதலீடு செய்தல்.
- 2017 - 2019 மூலோபாயத் திட்டத்தை பணிப்பாளர் சபை அங்கீகரித்தல்.
- இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கட்டளைகள் மற்றும் SEC, CSE மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட ஏனைய ஒழுங்கு விதிகளுக்கு இணங்கிச் செயற்படல்.
- கம்பனியின் பெயரை விருத்தி செய்தல்.

ஆபத்துக் கட்டுப்பாடு

MBSL இன் பணிப்பாளர் சபையினால் கம்பனியின் ஆபத்து பகுதியை உரிய ஆரம்ப அளவில் பேணி வருவதனை உறுதிப்படுத்துவதற்காக உயர்ந்த பொறுப்பை வகிக்கின்றது. இந்த விதமாக பணிப்பாளர் சபை கம்பனியின் ஆபத்துப் பகுதியை தீர்மானித்தல், ஆபத்து சார்ந்த கொள்கைச் சட்டகத்தை தயாரித்தல், தொடர்ந்தேர்ச்சியான அடிப்படையில் கம்பனியின் ஆபத்துப் பகுதியை கட்டுப்படுத்துவதற்குப் போன்றே செயற்பாட்டு நிலையிலுள்ள ஆபத்து முகாமைத்துவ செயல்முறை மற்றும் நடைமுறையின் அளவு மற்றும் பயனை உறுதிப்படுத்துவதற்காக பொறுப்பைக் கொண்டுள்ளது. சில உப குழுக்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் பணிப்பாளர் சபைக்கு அலுவல் நடவடிக்கைகளின்போது உதவியாக இருப்பதுடன் அது கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.



ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழு (IRMC)

இக் குழு கம்பனியின் அனைத்து ஆபத்துடன் தொடர்புடைய பிரிவுகள் சம்பந்தமாக சுயாதீனமான பகுப்பாய்வை மேற்கொள்வதுடன் ஆபத்துக் கட்டுப்பாட்டு அமைப்பு, கொள்கை சட்டகம், ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் செயற்பாடுகளளை செயற்படுத்தும் அளவு மற்றும் விளைதிறனை உறுதிப்படுத்தும்போது முகாமைத்துவத்துடன் நெருங்கிச் செயற்படும்.இந்தக் குழு நிறைவேற்று தரமில்லாத 03 பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் கடன், சந்தை, திரவ நிலை, செயற்பாடு மற்றும் மூலோபாய ரீதியிலான ஆபத்துக்கள் போன்ற ஆபத்து வகைகளை கண்காணிக்கும் பிரதான முகாமைத்துவப் பணியாட் தொகுதி உத்தியோகத்தர் ஆகியோரைக் கொண்டுள்ளது. ஆண்டினுள் தாபித்தல் விதிமுறைகள் குழுவின் நடவடிக்கைகள் ஆண்டறிக்கையின் 120 ஆவது பக்கத்தில் ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவ குழு அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது நிதி சார்ந்த ஆபத்துக்களை இனங்காணல்,மதிப்பீடு செய்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றுக்காக கம்பனியின் உள்ளக நிதி நிர்வாகத்தை மீளாய்வுக்குட்படுத்தும். அத்துடன் குழுவானது உள்ளகக் கணக்காய்வின் சுயாதீனத்த தன்மையை மதிப்பீடு செய்வதுடன், வினைத்திறனை ஒழுங்குபடுத்துகின்றது. கணக்காய்வுக் குழு நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்களை மாத்திரம் கொண்டுள்ளதுடன் கணக்காய்வுக் குழு சம்பந்தமான விபரம் இந்த ஆண்டறிக்கையின் 114 ஆம் பக்கத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

கடன் குழு

முகாமைத்துவக் குழுவொன்றான கடன் குழுவானது கம்பனியின் கடன் ஆபத்துக்களை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆபத்து வரையறையினுள் கட்டுப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது. விசேட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட வரையறைக்குள் (BOD இனால் ஒப்படைக்கப்பட்ட) கடன்களை அங்கீகரிப்பதற்கு குழுவுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்துடன் BOD இன் கவனம் தேவைப்படும் விசேட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் சிபாரிசு செய்யப்படுகின்றன. குழுவானது பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் வழிநடாத்தும் நிறுவன முகாமைத்துவப் பணியாட் தொகுதியைக் கொண்டுள்ளது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு (ALCO)

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு பணிப்பாளர் சபைக்கான இறுதி ஆலோசனைப் பிரிவாகக் கருதப்படுவதுடன், பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவக் குழுவொன்றாகும். அது மூலதன ஆபத்துக்கள் உட்பட சந்தை ஆபத்துக்கள், திரவத் தன்மை ஆபத்து மற்றும் ஐந்தொகை அமைப்பை முகாமைப்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது. குழு பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் வழிநடாத்தும் நிறுவன முகாமைத்துவப் பணியாட் தொகுதியைக் கொண்டுள்ளதுடன், கம்பனியின் எதிர் கால மூலோபாய அறிவுறுத்தல்களுக்காக அத்தியாவசிய பங்களிப்பை வழங்குகின்றது.

முதலீட்டுக் குழு

முகாமைத்துவக் குழுவொன்றான முதலீட்டுக் குழுவானது கம்பனியின் முதலீட்டுத் தொகுதியை பேணி வருவதற்கான பொறுப்பைக் கொண்டிருப்பதுடன், முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளல், தக்கவைத்துக்கொள்ளல் மற்றும் விற்பனை செய்தலுடன் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும். குழுவை பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் வழிநடாத்துவதுடன், நிறுவன முகாமைத்துவ அலுவல்களை பணியாட் தொகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொள்வார்.

அறவீட்டுக் குழு

இக் குழு கம்பனியின் கடன்களை அறவிடல் மற்றும் அறவீட்டு மூலோபாங்களை செயற்படுத்துவதற்கு மற்றும் செயற்பாடற்ற கடன் நிலைமைகளை உரிய அளவுகளில் பேணி வருவதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. குழுவானது நிறுவன முகாமைத்துவப் பணியாட் தொகுதி உத்தியோகத்தரைக் கொண்டுள்ளதுடன், பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் வழிநடாத்துவார்.

தகவல் தொழில்நுட்ப செயற்பாட்டுக் குழு

தகவல் தொழில்நுட்ப செயற்பாட்டுக் குழுவை பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் வழிநடாத்துவதுடன், சகல பிரிவுகளையும் ஒரு உத்தியோகத்தர் வீதம் பிரதிநிதித்துவப்படுத்துவர். கம்பனியின் தகவல் தொழில்நுட்ப மூலோபாயங்கள் ஒவ்வொரு பிரிவின் விருத்தி மூலோபாயங்கள் மற்றும் வர்த்தகத் தேவைகளுடன் தொடர்புபடுத்தப்படுவதனை குழு உறுதிப்படுத்துகின்றது.

பிராந்தியத் தலைவர்கள் மற்றும் வலய முகாமையாளர்கள்

பாதுகாப்பின் முதல் வழியாக பிருாந்தியத் தலைவர்கள் அவர்களுக்குரிய பிரதேசங்களில் முகங்கொடுக்கும் ஆபத்துக்களை இனங்காணல் மற்றும் குறைப்பதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளனர். வலய முகாமையாளர்கள் வலயத்தினுள் காணப்படும் கிளைகள் முகங்கொடுக்கும் ஆபத்துக்களை இனங்கண்டு கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு உதவிப் பொது முகாமையாளர் - குழுமத்தின் உள்ளகக் கணக்காய்வாளரால் வழிநடாத்தப்படும். இந்தப் பிரிவு கம்பனியின் சகல கிளைகள் மற்றும் பிரிவுகளை கணக்காய்வுக்குட்படுத்துவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பதுடன், சபை கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கைப்படுத்தும்.

ஆபத்து முகாமைத்துவப் பிரிவு

ஆபத்து முகாமைத்துவப் பிரிவு இலாபம் மற்றும் இயலளவு இலக்குகளை நோக்கி சுயாதீனமாக நடவடிக்கை மேற்கொள்வதுடன், கம்பனியின் மொத்த ஆபத்துப் பகுதிகளை இனங்கண்டு கொள்ளல், பகுப்பாய்வுக்குட்படுத்தல், மதிப்பீடு செய்தல், குறைத்தல் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றுக்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. பிரிவின் பிரதான பொறுப்புக்களுக்குகீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் உள்ளடங்குகின்றது.

- காலத்துக்குக் காலம் கம்பனிக்கு ஏற்படும் சகல ஆபத்துக்கள் மற்றும் ஆபத்துக்களை குறைத்துக்கொள்வதற்காக உத்தேச மூலோபாயங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பணிப்பாளர் சபை மற்றும் ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
- ஆபத்து முகாமைத்துவக் கொள்கை மற்றும் நடைமுறைகளைத் தீர்மானித்தல்
- பல்வேறு வகையான ஆபத்துக்களை குறைப்பதற்காக விசேட நடவடிக்கைகள், செயற்பாடுகள், கிளைகள் அல்லது பிரிவுகளுக்கு உதவி புரிவதற்கான வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்கள், முன்மாதிரி மற்றும் அலுவல் திட்டமிடல்களை விருத்தி செய்தல்.
- முக்கிய ஆபத்துக்களை இனங்காணால் மற்றும் பகுப்பாய்வுக்குட்படுத்தல்.
- ஆபத்துக்களைக் குறைப்பதற்கான முறைகள் தேவையான அளவில் செயற்படுவதனை உறுதிப்படுத்தல்.

ஆபத்து முகாமைத்துவம்

- காலாண்டு ரீதியிலான ஆபத்து முகாமைத்துவ அறிக்கை பணிப்பாளர் சபை மற்றும் ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழுவுக்கு சமர்ப்பித்தல்.

ஆபத்து முகாமைத்துவத்திற்கான பிரவேசம்

MBSL இன் ஆபத்து முகாமைத்துவச் சட்டகம் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்று பெரும் பாதுகாப்பு முன்மாதிரியை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், கம்பனிக்கு அதன் ஆபத்தை தரப்படுத்தல் அடிப்படையில் கட்டுப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி அலுவல்களை தெளிவாக வேறுபடுத்திக் காட்டுவதனை உறுதிப்படுத்துகின்றது.

1 ஆவது பாதுகாப்பு

- பிராந்திய மற்றும் வலய மட்டத்தில் ஆபத்துக்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல், அறிக்கைப்படுத்தல் மற்றும் குறைத்தல் என்பவற்றுடன் தொடர்புடையதாகும்.
- இந்த பாதுகாப்பு வழியின் பொறுப்புக்கள் கிளைகள் மற்றும் பிரதேச தலைவர்கள் மற்றும் முகாமைத்துவ மட்டத்திலான ஆபத்துக்கள் சார்ந்த குழுக்களுடன்சம்பந்தப்பட்டதாகும்.

2 ஆவது பாதுகாப்பு

- ஆபத்து முகாமைத்துவப் பிரிவின் ஒருமுகப்படுத்தப்பட்ட நிர்வாகம் மற்றும் கம்பனி முகங்கொடுக்கும் ஒவ்வொரு ஆபத்து வகைகளுக்கான வேலைத் திட்டம் மற்றும் கொள்கைகளைக் கொண்டிருக்கும்.

3 ஆவது பாதுகாப்பு

- ஆபத்து முகாமைத்துவ செயற்பாடுகள் சம்பந்தமாக சுயாதீனமான சான்றிதழை வழங்கும் உள்ளக மற்றும் வெளிவாரியான கணக்காய்வு நடவடிக்கைகளை கொண்டிருக்கும்.

ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு



ஆபத்தை இனங்காணல் : ஆபத்தை இனங்கண்டு கொள்ளும் பல்வேறு முறைகளின் ஊடாக ஆண்டு அடிப்படையில் குறைந்தது வணிகப் பிரிவு மட்டங்களில் எதிர் கால ஆபத்துக்கள் இனங்காணப்படுகின்றது.

ஆபத்து பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு : அளவு மற்றும் தரமான பல கருவிகள் இனங்காணப்பட்ட ஆபத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்றது. இந்த முறைகளுக்கு ஏனைய விடயங்களிடையே பகுப்பாய்வு ரீதியிலான மீளாய்வு, அழுத்த ஆய்வு மற்றும் செயற்பாட்டு பகுப்பாய்வு, விசாரணைகள் மற்றும் உறுதிப்படுத்தல் என்பன உள்ளடக்கப்படுகின்றன. ஆபத்து பகுப்பாய்வு வணிக அலகுகள் மட்டத்தில் நடாத்தப்படுவதுடன்ஆபத்து முகாமைத்துவப் பிரிவு அதனை உறுதிப்படுத்தும்.

ஆபத்துக்களைக் குறைத்தல் : ஆபத்துக்களைக் குறைக்கும் மூலோபாய ரீதியிலான ஆபத்து பகுப்பாய்வுப் பயிற்சியின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட விளைவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். ஆபத்து முகாமைத்துவப் பிரிவினால் மூலோபாயங்கள் சகல வணிகப் பிரிவுகளுக்கும் சிபாரிசு செய்யப்படும். பிரதான 04 மூலோபாயங்கள் யாவையெனில், ஆய்வு, ஏற்றுக்கொள்ளல், பரிமாற்றல் மற்றும் தடுத்தல் என்பனவாகும்.

ஆபத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் அறிக்கைப்படுத்தல : கம்பனியின் மொத்த ஆபத்துப் பகுதியை விபரிக்கும் ஆபத்து மதிப்பீட்டு அறிக்கையொன்று ஆபத்து முகாமைத்துவப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு காலாண்டு அடிப்படையில் ஒன்றிணைந்த ஆபத்து முகாமைத்துவக் குழுவுக்கு அறிக்கைப்படுத்தும். அது தவிர ஆபத்து முகாமைத்துவப் பிரிவினால் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டிற்காக பல்வேறு ஆபத்து மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்படும். அத்துடன், இணக்கப்பாட்டு அறிக்கை மாதாந்த அடிப்படையில் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்படும்.

ஆபத்துக் கணிப்பீடு

MBSL இன் வணிக நடவடிக்கைகள் பல்வேறு ஆபத்துக்களுக்கு திறந்து விடப்பட்டிருப்பதுடன்அதில் கம்பனிக்கு நேரடியாக முகாமைப்படுத்த முடியுமான மற்றும் கம்பனியின் கட்டுப்பாட்டுக்கு வெளிவாரியான ஆபத்துக்களைக் கொண்டிருக்கின்றன. இந்த ஆபத்துக்கள் மூலதனத்தின் மீது எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு மாத்திரம் ஒழுங்குபடுத்த முடியும். கம்பனியின் முக்கிய ஆபத்துக்களை கீழ் குறிப்பிடப்படும் வகையில் வகைப்படுத்தலாம்.

ஆபத்துக்கள்

வங்கியினால் கட்டுப்படுத்தப்படும்

ஆபத்து வகை	நிதிசார் ஆபத்து				நிகழ்வு ஆபத்து
ஆபத்துக்கள்	கடன்கள், ஆபத்து	திரவநிலை நிதிய ஆபத்து	சந்தை, ஆபத்து	செயற்பாட்டு ஆபத்து	மூலோபாய ஆபத்துக்கள் இயைபு ஆபத்து கீர்த்தி நாம ஆபத்து

தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக வங்கியினால் கட்டுப்படுத்தப்படும் ஆபத்துக்கள்

ஆபத்து வகை	உலகளாவிய	பேரினப் பொருளாதார	கட்டுப்பாடு

கடன் ஆபத்து

ஒரு சேவை பெறுநர் அல்லது சந்தையில் சம தரப்பினர் MBSL இற்கு அவரது ஒப்பந்தப் பிணைப்பை நிறைவேற்ற தவறுவதனால் ஏற்படும் ஆபத்தை கடன் ஆபத்து எனலாம். கடன் ஆபத்து தட்டிக்கழித்தல் ஆபத்து மற்றும் குவிதல்(செறிவு) ஆபத்து தன்மையைக் கொண்டிருப்பதுடன் கம்பனியின் கடன் அமைப்பினால் ஏற்படுகின்றது.



கடன் ஆபத்து முகாமைத்துவம்

வணிக அலகுகள் கடன் ஆபத்தை முகாமைப்படுத்தும்போது முதலாவது பாதுகாப்பு எல்லையாக நடவடிக்கை மேற்கொள்வதுடன், கடன் குழுவின் சுயாதீனமான மீளாய்வைப் போன்றே ஆபத்து முகாமைத்துவப் பிரிவினால் செயற்படுத்தப்படும் செயற்பாடுகள், தரங்கள் மற்றும் திட்டம் ஊடாக உதவி செய்யப்படுகின்றது. கம்பனியின் கடன் ஆபத்து முகாமைத்துவத் திட்டம், பலமான அபத்துக் கொள்கைத் திட்டம், கடுமையான மற்றும் முறையாக விதிக்கப்பட்டுள்ள கடன் அளவுகோள்கள், தொடர்ச்சியான ஒழுங்குபடுத்தல் மற்றும் பொறுப்பு வாய்ந்த கடன் வழங்கும் கலாசாரத்தின் ஊடாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடன் வழங்க முன்னர்

- கடுமையான கடன் மதிப்பீட்டு அளவுகோள்
- நிச்சயிக்கப்பட்ட கடன் அளவுகோள்கள்
- பல்வேறு மட்டங்களிலான அங்கீகரிப்பதற்கான அதிகாரம்
- கடன் நிர்வாக பிரிவின் சுயாதீன மீளாய்வு

கடன் வழங்கிய பி-ன்னர்

- முன் ஆபத்து சமிக்ஞை சம்பந்தமான கவனத்துடன் பிரிவின் மற்றும் உற்பத்தியின் வெளிப்பாட்டை ஒழுங்குபடுத்தல்
- கிளை, வலயம், பிரிவு மற்றும் உற்பத்தி வெளிப்பாடு உட்பட பல்வேறு மட்டங்களில் செயற்பாடற்ற கடன்கள் தொடர்பான தொடர்ச்சியான ஒழுங்குபடுத்தல்கள்.
- முறையான அடிப்படையில் அழுத்தம் பற்றிய ஆய்வு, செயல்முறை பகுப்பாய்வு நடாத்துதல்.
- ஆபத்து முகாமைத்துவ பிரிவு, IRMC இற்கு உரிய காலத்திற்குரிய அறிக்கையை வழங்குதல்

ஆபத்து முகாமைத்துவம்

ஆண்டில் கம்பனியானது அதன் ஆபத்து முகாமைத்துவத்தை மேலும் பலப்படுத்துவதற்கு கீழ் குறிப்பிடப்படும் விடயங்களின் ஊடாக மூலோபாய ரீதியிலான கவனத்தைச் செலுத்தியது.

- கடனை அறவிட்டுக்கொள்வதற்கான இலக்குகள் மற்றும் கிளைகளுக்கான வீதங்களை அறிமுகஞ் செய்து சேர்ப்பதற்கான பொறிமுறையை மேம்படுத்தல்.
- கிளைகளின் முன்னெச்சரிக்கை முறை ஊடாக எதிர்கால செயற்பாடற்ற கடன்களை இனங்கண்டுகொள்வதற்கான பொறிமுறை.
- கிளைகள் மற்றும் மத்திய அறவீட்டு அலகிற்கிடையில் மிகவும் நன்மை பயக்கும் ஒருங்கிணைப்பு
- நெகிழ்வுமிக்க மீள அறவிட்டுக்கொள்ளுவதற்கான தீர்வினை மறுசீரமைத்து வழங்குவதன் ஊடாக வாடிக்கையாளர்களின் பங்கேற்பை அதிகரித்தல்.

2016 கடன் ஆபத்து வினைத்திறன்

செலுத்தாதிருத்தல் ஆபத்து

செலுத்தாரிருத்தல் ஆபத்து கடன் ஆபத்தில் பிரதான கூறாக இருப்பதுடன், கடன்காரர் அல்லது சம தரப்பினர் கடனை செலுத்தாதிருப்பதனால் ஏற்படும் ஆபத்துக்களை இது கொண்டிருக்கும். கம்பனியானது அதன் செலுத்தாதிருத்தல் ஆபத்துக் குறிகாட்டிகளில் கணிசமானளவு வளர்ச்சியைக் காண்பிப்பதுடன், ஆண்டினுள் மொத்த செயற்பாடற்ற கடன் மற்றும் தேறிய செயற்பாடற்ற கடன் வீதம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 4.2% மற்றும் 4.0% இனால் குறைவடைந்துள்ளது.

செறிவடைதல்(குவிதல்) ஆபத்து

சிறப்பு பிரிவொன்றுக்கு, உற்பத்தியொன்றுக்கு, வலயமொன்றுக்கு அல்லது வாடிக்கையாளர் ஒருவருக்குகூ கம்பனியொன்றுக்கு கடன் வழங்குவதன் ஊடாக செறிவடைதல் ஆபத்து ஏற்படுகின்றது. கம்பனியின் தனிநபர், பிரிவுகள் மற்றும் உற்பத்தி கடன் செறிவுகள் தொடர்ச்சியான அடிப்படையில் சீர்படுத்தப்படுவதுடன் ஆபத்திற்கமைய உரிய வரையறைக்குள் கட்டுப்படுத்தப்படுகின்றது.

தனிநபர் கடன்காரர்களுக்கு பாரிய அளவிலான கடனை வழங்குவதனால் செறிவடைதல் ஆபத்து ஏற்படுகின்றது. கம்பனி ஒப்பீட்டு ரீதியாக பல்வகைப்படுத்தப்பட்ட முதலீட்டு தொகுதியின் ஊடாக குறைந்த செறிவடைதல் ஆபத்தை பேணி வருகின்றது. 2016 இல் பாரிய தொகை கடன் பெற்ற 20 வாடிக்கையாளர்கள் கம்பனியின் மொத்த கடன் தொகுதியில் 5% வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துவர்.

2015



20 அதிக கடன் பெற்ற வாடிக்கையாளர்கள்
ஏனைய வாடிக்கையாளர்கள்

2016



20 அதிக கடன் பெற்ற வாடிக்கையாளர்கள்
ஏனைய வாடிக்கையாளர்கள்

பிரிவு செறிவடைதலுக்கமைய கம்பனியின் பாரிய வெளிப்பாடு விவசாயத்துறைக்குரியதாக இருப்பதுடன், அந்தத் துறை மொத்த கடன் தொகுதியில் சுமார் 61% இற்கு பங்களிப்பைச் செலுத்துகின்றது. அத்துடன், கம்பனியின் கடன் தொகுதி வலய ரீதியாக மேலும் சிறப்பான வகையில் பல்வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மேல் மாகாணத்திற்கு வெளியே கடன் மற்றும் முற்பணம் சுமார் 55% ஆக இருந்தது.

கைத்தொழில் துறைக்கமைய கடன் செறிவு - 2016



விவசாயம் மற்றும் மீன்பிடி
போக்குவரத்து, சுற்றுலாத் துறை
விரிவாக்கம், நிர்மாணம்
வணிக வியாபாரம்
நிதி மற்றும் வணிகச் சேவைகள்
ஏனைய சேவைகள்
ஏனைய வாடிக்கையாளர்கள்

மாகாண மட்டத்திலான செறிவடைதல் - 2016



உற்பத்தி செறிவுக்கமைய, கம்பனி ஏனைய உற்பத்திகளில் தொடர்ச்சியான மூலோபாய ரீதியிலான விரிவாக்கத்தை மேற்கொண்டதனால் கம்பனியின் குத்தகைக் கடன் தொகுதியில் வீழ்ச்சி ஏற்பட்டாலும் தொடர்ந்தும் குத்தகைக் கம்பனியின் கடன் தொகுதி உயர்ந்தளவில் காணப்பட்டது.

உற்பத்தி செறிவு - 2016



உற்பத்தி செறிவு - 2015



கம்பனியின் மூலதன அளவு நிலைமை சம்பந்தமாக சொத்தின் தரம் வீழ்ச்சியடைவதனால் ஏற்படக்கூடிய தாக்கத்தை இனங்கண்டு கொள்வதற்காக அழுத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

விபரம்	2016 டிச.31 திகதியன்று CAR	அழுத்த மட்டம் 5%	20%	50%
கடன் ஆபத்து				
ஆரம்ப மூலதனம்	10.66%	10.64%	10.60%	10.51%
மொத்த மூலதனம்	10.69%	10.67%	10.63%	10.54%

சந்தை ஆபத்து

சந்தை ஆபத்து என்பது சந்தையில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக ஏற்படும் MBSL இன் திறந்த இருப்புநிலைப் குறிப்புப் பத்திரம் மற்றும் மூடிய இருப்புநிலைப் குறிப்புப் பத்திரத்தில் நட்ட ஆபத்து என பொருள் கூறப்படுகின்றது. MBSL இன் சந்தை ஆபத்தானது வட்டி வீதம், பங்குச் சந்தை, பொருட்கள் சந்தை மற்றும் பரிமாற்றல் வீதம் என்பவற்றின் தீமை பயக்கும் அசைவுகள் காரணமாக ஏற்படுகின்றது.



சந்தை ஆபத்து முகாமைத்துவம்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு மற்றும் முதலீட்டுக் குழு வட்டி வீதம் மற்றும் பங்குகள் ஆபத்து ஒழுங்குபடுத்தல் உள்ளடக்கப்பட்ட கம்பனியின் சந்தை ஆபத்துக் கட்டுப்பாடு தொடர்பான நிறைவேற்றுப் பொறுப்பை வகிக்கும். கம்பனியின் ஆபத்து முகாமைத்துவக் கொள்கையை விபரிக்கும் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை சட்டகம், நடைமுறை சம்பந்தமான அறிவுறுத்தல்கள், இனங்காணல், மதிப்பீடு மற்றும் ஒழுங்குபடுத்தலுக்காக கருவிகள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் சந்தை ஆபத்துடன் தொடர்பான சகல பிரிவுகள் தொடர்பாகவும் அறிக்கைப்படுத்தப்படும்.

வட்டி வீத ஆபத்து

கம்பனி அதன் கடன் வழங்கும் நடவடிக்கை, வைப்புக்கள் மற்றும் நிதி முதலீடு ஊடாக வட்டி வீத ஆபத்துக்கு திறந்துவிடப்பட்டுள்ளது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு (ALCO) கம்பனியின் சொத்துக்கள், பொறுப்புக்கள் முதிர்ச்சி தொடர்பான பொருத்தப்பாடின்மையுடன் சந்தை வட்டி வீதத்தினுள் மாற்றங்கள் முறையாக ஒழுங்குபடுத்தப்படுவதுடன் வெளிப்படுத்தல்கள் IRMC ஊடாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கைப்படுத்தப்படுகின்றது. அது தவிர கம்பனி அதன் மூலதன நிலைமையின் அடிப்படையில் வட்டி வீத மாற்றத்தில் ஏற்பட முடியுமான தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக முறையான அழுத்தப் பகுப்பாய்வை மேற்கொள்ளும்.

ஆபத்து முகாமைத்துவம்

பங்குகள் தொடர்பான ஆபத்து

முதலீட்டுக் குழு சகல விற்பனை செய்யும் மற்றும் கொள்வனவு செய்யும் தீர்மானங்கள் உட்பட கம்பனியின் பங்குத் தொகுதியை கட்டுப்படுத்துவதற்கான மொத்தப் பொறுப்பையும் ஏற்கும். அதற்கமைய, குழு முறையாக பங்குச் சந்தையின் மாற்றங்கள், தொகுதியினுள் செறிவு ஆபத்து மற்றும் விரிவான பொருளாதார அபிவிருத்திகளை ஒழுங்குபடுத்தும். தீமை பயக்கும் பங்கு விலை மாற்றங்களின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக ஆபத்துப் பெறுமதி (VAR) மற்றும் அழுத்தப் பரிசோதனை பயன்படுத்தப்படுகின்றது. தொகுதியின் வினைத்திறன் மற்றும் செறிவு குறைந்தது காலாண்டு அடிப்படையில் IRMC இனால் மீளாய்வுக்குட்படுத்தப்படும்.

சந்தை ஆபத்து வினைத்திறன் - 2016

பங்குகள் தொடர்பான ஆபத்து

பொதுவாக கம்பனியின் பங்குகள் மீதான முதலீட்டுக்காக 2016 டிசம்பர் இறுதியாகும்போது 2% இனை விடவும் கீழான பெறுமதியைக் காண்பித்து வரையறுக்கப்படுகின்றது. MBSL இன் பங்குகள் தொகுதியின் வினைத்திறன் ஆண்டில் 40% இனை விடவும் வீழ்ச்சியடைந்துள்ளது. சந்தையில் வீழ்ச்சியைக் காட்டியது அதன் காரணமாக வணிகத் தொகுதி மீது கம்பனி ரூபா 61 மில்லியன் நட்டத்தை அடைந்தது. இதனிடையே கம்பனியின் பங்குத் தொகுதி கைத்தொழிலின் சகல பிரிவுகளை நோக்கி சீர்படுத்திய திறந்து விடப்படலுடன் விரிவாக்கமடைந்தது.

பிரிவின் தொகுதி 2016



அழுத்தப் பரிசோதனை பெறுபேறுகள்

விபரம்	2016 டிச.31 திகதியன்று CAR	அழுத்த மட்டம் 5%	20%	50%
கடன் ஆபத்து - பங்குகள்				
ஆரம்ப மூலதனம்	10.66%	10.65%	10.64%	10.61%
முழு அடிப்படை மூலதனம்	10.69%	10.68%	10.67%	10.64%

வியாபாரப் பொருட்கள் ஆபத்து

உலகளாவிய தங்க விலை மாற்றத்திற்கமைய கம்பனி அதன் தங்கக் கடன் தொகுதயில் ஏற்படும் வியாபாரப் பொருட்கள் ஆபத்துக்கு திறந்துவிடல் ஊடாக கம்பனியினால் பேணி வரப்படும் பிணை முறிகளின் பெறுமதியின் மீது நேரடித் தாக்கம் உண்டு.இந்த ஆபத்துப் பெறுமதிக்கு சமமான கடன் வீதத்தை பேணி வருவதன் ஊடாக பேணி வருவதுடன், அதனூடாக விலை அளவுகள் பாரியளவில் வீழ்ச்சியடைவதற்கு எதிராக போதுமானளவு பாதுகாப்பை வழங்குகின்றது. 2016 இல் கடைசி 02 மாதங்களினால் குறைவடைந்த போதிலும் தங்கத்தின் விலை அதிகரித்து வந்தது.

சர்வதேச தங்க விலை தங்க, வெள்ளி அளவையில்



விபரம்	2016 டி31 திகதியன்று CAR	அழுத்த மட்டம் 5%	20%	50%
கடன் ஆபத்து - அடகு				
ஆரம்ப மூலதனம்	10.66%	10.65%	10.65%	10.65%
முழு அடிப்படை மூலதனம்	10.69%	10.68%	10.68%	10.68%

திரவ நிலை மற்றும் நிதிய ஆபத்து

திரவ நிலை ஆபத்து என்பது சொத்துக்களை விற்பனை செய்வதற்கு மற்றும் ஒதுக்குவதற்குப் போன்றே காலத்திற்கு ஏற்ப பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு கம்பனிக்கு இருக்கும் ஆற்றல் மாற்றத்தின் ஊடாக ஏற்படும் எதிர் கால நட்டங்களாகும்.

கம்பனியின் திரவ நிலை ஆபத்தை பயன்மிக்க வகையில் முகாமைத்துவப்படுத்தல் அதன் செயற்பாடுகளில் தொடர்ந்தேர்ச்சித் தன்மையை உறுதிப்படுத்தும்போது அத்தியாவசியமாக இருப்பதுடன், அதன் திரவநிலை ஆபத்து முகாமைத்துவ செயற்பாட்டின் ஊடாக கம்பனி அதன் ஒப்பந்தப் பொறுப்புக்களை கால அடிப்படையில் பூர்த்தி செய்வதற்கு போதுமானளவு நிதியத்தைப் பெணி வருவதனை உறுதிப்படுத்துகின்றது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு (ALCO) திறைசேரிப் பிரிவின் ஊடாக கம்பனியானது அதன் ஒப்பந்தப் பொறுப்புக்களை பூர்த்தி செய்வதற்கு போதுமானளவு திரவ நிலை மட்டத்தை பேணி வருவதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. கம்பனியின் திரவநிலை முகாமைத்துவச் சட்டகத்தின் முக்கிய பிரிவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- உள்ளக இலக்குகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு இணங்கிச் செயற்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியின் திரவத்தன்மையை நேரொத்த வகையில் ஒழுங்குபடுத்தல்.
- பல்வேறு மூலங்களினால் உருவாகும் திரவத்தன்மையைக் கொண்ட நிதியத்தை மூலோபாய ரீதியிலான வகைப்படுத்தல்.
- துரித திரவத்தன்மை சிக்கல் நிலையொன்று காணப்படும் சந்தர்ப்பத்தில் ஆபத்தைக் குறைப்பதற்காக தேயைற்ற நிதி பற்றிய திட்டமிடல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆண்டில் கீழே சுட்டிக்காட்டியதன் பிரகாரம் உரிய குறைந்தளவினைப் பார்க்கிலும் சிறந்த மட்டங்களில் கம்பனி அதன் திரவத்தன்மையை பேணி வந்துள்ளது.

திரவத்தன்மை வீதம்



கம்பனியானது சந்தை ஆற்றல் மற்றும் வட்டி வீத மாற்றங்களின் அடிப்படையில் தங்கியிருந்து பல்வேறு மூலங்களிலிருந்து திரவத் தன்மையை மூலமாகக் கொண்டு ஒப்பீட்டு ரீதியில் பல்வேறு நிதியத் தொகுதியைப் பேணி வருகின்றது. வைப்பானது பாரிய நிதிய மூலமாக இருப்பதுடன், மொத்த நிதியத்தின் 61மூ இற்கு பங்களிப்புச் செலுத்துவதுடன் அதன் பின்னர் முறையே கடன் பெறுகை 29% மற்றும் பங்குரிமையாளர்களின் நிதி 10% ஆகும்.

அதனிடையே, கம்பனியின் மூலதன மதிப்பாக்க மட்டம் சிறப்பாக நிலவுவதுடன் கடன் விருத்திக்கமைய ஆண்டில் வைப்புக்கள் ஒரு சிறிய அளவினால் வீழ்ச்சியடைந்துள்ளது. MBSL ஆரம்ப மூலதன அளவு வீதம் ஒழுங்குபடுத்தல் தேவையிலும் உயர்வாக நிலவியது. மொத்த RWCAR 2016 டிசம்பர் இறுதியில் 10.69% மட்டத்தில் நிலவியதுடன் 2017 இல் இரண்டாம் நிலை கடன் பெறுகை ஊடாக மொத்த மூலதன நிலைமையை அதிகரிப்பதற்காக மொத்த மூலதனத்தை அதிகரிப்பதற்கு கம்பனி திட்டமிட்டுள்ளது.

நிதியத்தின் அமைப்பு



மூலதன அளவு வீதம் %	2016-Q1	2016-Q2	2016-Q3	2016-Q4
ஆரம்ப மூலதனம்	11.75	11.35	11.10	10.66
முழு அடிப்படை	11.63	11.24	11.07	10.69

செயற்பாட்டு ஆபத்து

உள்ளகச் செற்பாடுகள், ஊழியர்கள் மற்றும் போதுமானளவு முறைகள் இல்லாமை அல்லது தோல்வி அல்லது வெளிவாரியான நிகழ்வுகளில் ஏற்படும் நேரடி மற்றும் மறைமுகமான நட்டங்களாக செயற்பாட்டு ஆபத்து வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. பாசல் ii வரைவிலக்கணத்திற்கமைய, சட்ட ரீதியான ஆபத்து செயற்பாட்டு ஆபத்தின் ஒரு கூறாக உள்ளடக்கப்படுகின்றது.



செயற்பாட்டு ஆபத்து முகாமைத்துவம்

MBSL செயற்பாட்டு ஆபத்து முகாமைத்துவத்தின் அடிப்படை பிரிவுகள் கீழே குறிப்பிடப்படுகின்றது.

- தொகுதி மற்றும் செயற்பாட்டு ரீதியலான தவறுகள் நிலவும் சந்தர்ப்பத்தில் செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய தடைகளை குறைத்துக் கொள்வதற்காக விபரமான தொடர் வணிகத் திட்டமொன்றைச் செயற்படுத்தல்.

ஆபத்து முகாமைத்துவம்

- கிளை மட்டத்தில் செயற்பாட்டு ஆபத்து மதிப்பீடு இணையத்தள அடிப்படையின் ஊடாக காலாண்டு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதனூடாக முக்கியமான பிரச்சினைகளை இனங்காண்பதனை உறுதிப்படுத்துகின்றது. கிளைகள் சார்ந்த விடயங்களை தொடர்ந்தேர்ச்சியான அடிப்படையில் நிறுவனத்தின் முகாமைத்துவக் கூட்டங்களின்போது கலந்துரையாடப்படுகின்றது.

- ஏற்பட முடியுமான மற்றும் நிலவும் மோசடி நடவடிக்கைகள் சம்பந்தமான நடவடிக்கைகள் சம்பந்தமாக அறிக்கைப்படுத்துவதனை ஊக்குவிப்பதற்காக தகவல்களை அறிவிக்கும் கொள்கை செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

- மனித வளம் தொடர்பான சகல பிரச்சினைகளும் இனங்காணப்பட்டு வெளிப்படுத்துவதற்காக தொடர்ச்சியான மனித வளச் செயற்பாடுகள் குழுவொன்று செயற்படுகின்றது.

- அலுவல்கள் ஒதுக்கப்பட்டுள்ளதென்பதனை உறுதிப்படுத்தும் தெளிவான, சிறப்பாக தீர்மானிக்கப்பட்ட தொழில் பொறுப்புக்கள்.

- உள்ளக நிர்வாக முறைகளின் தவறுகளை இனங்கண்டு கொள்வதற்காக கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் தொடர்ச்சியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

மீளாய்வாண்டினுள் குறிப்பிடத்தக்களவு செயற்பாட்டு ஆபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை.

அழுத்தப் பரிசோதனை

செயற்பாட்டு ஆபத்துக்களுடன் தொடர்பான பல்வேறு முக்கியத்துவங்களில் அழுத்தத்தை தாங்கிக் கொள்வதற்கான கம்பனியின் ஆற்றலை மதிப்பீடு செய்வதற்காக அழுத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. MBSL ஆனது இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட கம்பனியின் மூலதன அளவு வீதத்தை பேணியவாறு 50% ஆன அழுத்தத்தை தாங்கிக்கொள்ளும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

	206 டிச. 31 திகதி	அழுத்த மட்டம்		
விபரம்	CAR	5%	20%	50%
செயற்பாட்டு ஆபத்து				
ஆரம்ப மூலதனம்	10.66%	10.32%	10.28%	10.18%
மொத்த மூலதனம்	10.69%	10.35%	10.30%	10.21%

** எடுகோள் : செயற்பாட்டு நட்டம் ரூபா 100 மில்லியன்காகும்.

மூலோபாய ஆபத்து

மூலோபாய ஆபத்து என்பது, வங்கயின் எதிர்கால வர்த்தக திட்டங்கள் மற்றும் மூலோபாயங்கள் போதுமான அளவில் காணப்படாமையினால் ஏற்படக்கூடிய நட்டங்களாகும்.

இந்த ஆபத்துக்கள் MBSL இன் மூலோபாய நோக்கங்கள், அந்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக மேம்படுத்தப்பட்ட வணிக மூலோபாயங்கள், இந்த நோக்கங்களுக்கமைய பயன்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் செயற்படுத்தல் நிலைமை சம்பந்தமான சீர்படுத்துகை அலுவலாகும்.

MBSL இன் மூலோபாய ஆபத்து முகாமைத்துவச் சட்டகத்தின் அடிப்படை அங்கம்,

- பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூலோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் அதனூடாக துறையின் வளர்ச்சிப்போக்கு, பங்குகளுக்கான தேவைகள் மற்றும் எமது பெறுமதியை உருவாக்கல் படிவத்தின் சக்திகள் மற்றும் பலவீனங்கள் இனங்காணப்படும்.

- நேரொத்த அடிப்படையில் முன் நிச்சயிக்கப்பட்ட வினைத்திறன் குறிகாட்டிக்கமைய மூலோபாயத் திட்டத்தின் வினைத்திறன் மீளாய்வுக்குட்படுத்தல்.

- சந்தை இயக்கநிலை, பேரினப் பொருளாதார மாற்றங்கள் மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த நடத்தைகள் உட்பட துறையின் போக்குகளை தொடர்ச்சியாக ஒழுங்குபடுத்தல்.

- உண்மையான வினைத்திறன் மற்றும் சிபாரிசு செய்யப்பட்ட பொருத்தமான மூலோபாயங்களுக்கமைய வரவு செலவுத் திட்டத்தை ஒப்பிட்டு வேறுபாட்டு பகுப்பாய்வை மேற்கொள்ளல்

- போட்டியாளர்களின் பகுப்பாய்வை நடாத்துதல், துறையின் போக்குகளை மீளாய்வுக்குட்படுத்தல், ஆபத்துக்களை தடுப்பதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- ஏதேனும் கையகப்படுத்தலுக்கு அல்லது முதலீட்டுக்கு முன்னர் ஆபத்து மதிப்பீடொன்றை மேற்கொள்ளல்

இணக்கப்பாட்டு ஆபத்து

இணக்கப்பாட்டு ஆபத்து என்றால் நிதிசார் நட்டம் அல்லது கம்பனியின் கீர்த்திநாமத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தி குறிப்பிட்ட சட்டம், ஒழுங்குவிதிகள், நன்னெறிக் கோவை மற்றும் தரம் சிறந்த பயிற்சி என்பவற்றுடன் இணக்கம் ஏற்படாமையினால் ஏற்படும் ஆபத்துக்களாகும்.

MBSL இன் விசேட இணக்கப்பாட்டு உத்தியோகத்தர்கள் சங்கத்தின் மொத்த இணக்கப்பாட்டு ஆபத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.

இணக்கப்பாட்டை பரிசோதிப்புக்கள் மாதாந்த அடிப்படையில் சகல வணிகப் பிரிவுகளுக்காகவும் நடாத்தப்படுவதுடன் இணக்கப்படாத சந்தர்ப்பங்களில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கணக்காய்வுக் குழு இணக்கப்பாட்டுப் பிரிவின் முறையான அறிக்கைப்படுத்தல் ஊடாக கம்பனியின் இணக்கப்பாட்டை ஒழுங்குபடுத்தும்.

அத்துடன், பிரசித்தப்படுத்தல்கள் உரிய இணக்கப்பாட்டுத் தேவைகளுக்கமைய நிலவுவதனை உறுதிப்படுத்துவதற்கு சகல விளம்பரங்கள் மற்றும் வெளியீட்டு இணக்கப்பாட்டு பிரிவினால் மீளாய்வுக்குட்படுத்தப்படும். கம்பனியினால் அவ்வாறான இணக்கப்பாட்டுத் தேவைகளை மீறுவதனை குறைப்பதற்காக உள்ளக வலையமைப்பின் ஊடாக இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் தொடர்பாக MBSL பணியாட் தொகுதியை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிய மத்திய வங்கியியல் கட்டமைப்பில் எதிர்பார்க்கப்படும் செயற்பாட்டுடன் ஆபத்து அடிப்படை பிரவேசம் உட்பட வாடிக்கையாளரின் உரிய கட்டளையின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் பிரேரிக்கப்பட்ட வழிகாட்டலை செயற்படுத்துவதற்கு MBSL எதிர்பார்க்கின்றது.

கீர்த்தி நாமம் தொடர்பிலான ஆபத்து

கீர்த்தி நாம ஆபத்து என்றால் வங்கியின் நிகழ்கால அல்லது எதிர் கால ஈட்டல் இயலளவுக்கு காரணமான மற்றும் நம்பிக்கை இழக்கப்படுவதனால் ஏற்படும் நிறுவன ரீதியிலான பெறுமதி, தொடர்புகள் துண்டிக்கப்படல் மற்றும் வாடிக்கையாளர் பங்குரிமையாளர்களின் எதிர்மறையான கண்ணோட்டம் சம்பந்தமான ஆபத்தாகும்.



மூலம் : GARP

கம்பனியின் கீர்த்திநாம ஆபத்து முகாமைத்துவச் சட்டகம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களின் ஊடாக உறுதி செய்யப்படுகின்றது.

- பலம்மிக்க பங்குரிமை பங்கேற்புப் பொறிமுறை மற்றும் சகல தரப்பினருடனுமான முறையான தொடர்பாடல்
- இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய ஏற்புடைத்தாகும் ஒழுங்குவிதிகளின் இணக்கப்பாடு.
- கடன் வழங்கல் மற்றும் வைப்பு வீதம் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலின் பிரகாரம் பேணிவரப்படுகின்றது.
- கம்பனியானது வாடிக்கையாளர்களின் இருப்பு, வாடிக்கையாளர்களை இனங்காணல், அவ்வாறான அமைப்புக்கள் மற்றும் நபர்களின் வைப்புக்களை பொறுப்பேற்றலைத் தவிர்ப்பதற்கு பணச் சுத்திகரிப்பு விதிமுறைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

MBSL தரப்பினர்



2016 ஆம் ஆண்டில் **MBSL** கடந்த ஆண்டின் பெறுமதியை மீறிய சொத்துக்கள் அடிப்படையிலான விருத்தியுடன் இலாபம் மற்றும் இலாப மட்டங்களில்

விருத்தியை அடைந்துள்ளது.

நிதித் தகவல்கள்

நிதி நாட்காட்டி	திகதி
2016	
2015 டிசம்பர் 31 உடன் முடிவடையும் காலாண்டுக்கான நிதி அறிக்கையைத் வெளியிடுதல்	2016 மார்ச் 23
2016 மார்ச் 31 உடன் நிறைவடைகின்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியறிக்கைகையை வெளியிடல்	2016 மே 10
2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதி அறிக்கையை வெளியிடுவதற்கு அனுமதி அளித்தல்	2016 மே 18
2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற நிதியாண்டுக்கு வருடாந்த நிதியறிக்கையை வெளியிடல்	2016 ஜூன் 02
கம்பனியின் 34 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம்	2016 ஜூன் 28
2016 ஜூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியறிக்கையை வெளியிடல்	2016 ஜூலை 26
2016 செப்டம்பர் 30 ஆம் திகிதியுடன் முடிவடைகின்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியறிக்கையை வெளியிடல்	2016 நவம்பர் 7
2017	
2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற காலாண்டுக்கான இடைக்கால நிதி அறிக்கையை வெளியிடல்	2017 பெப்.28
2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற ஆண்டிற்கான நிதி அறிக்கையை வெளியிடுவதற்கான அங்கீகாரம்	2017 ஏப்ரல் 28
கடன் பத்திர ஒதுக்கீடு - 2017	2017 மே 03
2017 மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற காலாண்டுக்கான இடைக்கால நிதிக்கூற்றை வெளியிடல்	2017 மே 09
2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற ஆண்டிற்கான ஆண்டறிக்கையை வெளியிடல் (உரிய திகதியன்று அல்லது முன்னர்)	2017 மே 31
கம்பனியின் 35 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம்	2017 ஜூன் 27
2017 ஜூன் 30 ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியறிக்கையை வெளியிடல் (கணக்காய்வுக்கு உட்படாத) (உரிய திகதியன்று அல்லது முன்னர்)	2017 ஆகஸ்ட் 15
2017 செப்டெம்பர் 30 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியறிக்கையை வெளியிடல் (உரிய திகதியன்று அல்லது முன்னர்)	2017 நவ. 15
2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியறிக்கையை வெளியிடல் (உரிய திகதியன்று அல்லது முன்னர்)	2018 பெப் 15

நிதி அறிக்கைகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர்களின் அறிக்கை

2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளின் கட்டளையின் அதாவது 2013 ஆம் அண்டு 06 ஆம் இலக்க திருத்தப்பட்ட கட்டளையின் 10(2) (டி) பிரிவின் கீழ் நிதி அறிக்கைகள் தொடர்பில் பணிப்பாளர் சபையினால் இந்த அறிக்கை முன்வைக்கப்படுகின்றது.

பொறுப்பு

மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீலங்கா (MBSL) இன் நிதி அறிக்கை தொடர்பிலான உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்தும், முறைமையின் அளவு மற்றும் விளைத்திறன் குறித்தும் பணிப்பாளர் சபை (சபை) பொறுப்பேற்கும். ஆனாலும் MBSL இன் கொள்கைகள், வணிக நோக்கங்களை அடைந்து கொள்வதற்குள்ள அபாயத்தை எதிர் கொள்வதற்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளக் கூடிய புதிய பார்வை ஒன்றின் கீழ் MBSL இன் பிரதான வருமான மார்க்கத்தை கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும். அதன் அடிப்படையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள், நிதித் தகவல்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பிலும் நிதி நட்டங்கள் மற்றும் மோசடிகள் குறித்தும் பூரணமாக இல்லையென்றாலும் நியாயமான மட்டம் ஒன்றில் இருப்பது புலப்படுகிறது.

நிறுவனம் முகங் கொடுக்க நேரிடும் முக்கியமானதாகக் கருதப்படக் கூடியதான அபாயங்களை இனம் காண்பதற்கும், அவற்றை மதிப்பீடு செய்வதல் மற்றும் முகாமை செய்தல் என்பவற்றுக்கான தொடர் செயற்பாடு பணிப்பாளர் சபையினால் உருவாக்கப்பட்டுள்ளதுடன், வணிகச் சூழலிலும், வழிகாட்டல் செயலொழுங்குகளில் ஏதேனும் மாற்றம் உருவாகும் சகல சந்தர்ப்பங்களிலும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை மேம்படுத்ததல் இந்த செயற்பாட்டில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

இந்த செயற்பாடுகளை பணிப்பாளர் சபையினால் காலத்திற்குக் காலம் கலந்துரையாடப்படுவதுடன், அது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் மூலம் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக பணிப்பாளர்களின் அறிக்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களில் அடங்கியுள்ள விடயங்களோடு இணைந்ததாக நடைமுறைப் படுத்தப்படும். மேலே குறிப்பிட்ட வழிகாட்டலின் படி MBSL இன் குறிப்பிடத்தகு கணக்குகளில் தாக்கம் செலுத்தக் கூடிய நடவடிக்கைகள் MBSL இன் பிரதான அபாயத் துறைகளில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

நடைமுறைப் படுத்தப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நிதி அறிக்கைப்படுத்தலின் நம்பகத் தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதம் ஒன்றை வழங்குவதற்கு போதுமான அளவில் உள்ளது என்றும், அவ்வாறே வெளியக செயற்பாடுகளுக்காக நிதி அறிக்கை தயாரித்தல் தொடர்பில் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நியமங்களின் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டது என்பதும் பணிப்பாளர் சபையின் கருத்தாகும்.

அபாயம் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நடைமுறைப் படுத்தும் போது MBSL முகம் கொடுக்கும் அபாயங்களை இனங் கண்டு கொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல், அந்த அபாயங்களைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான உள்ளக முறைகளை திட்டமிடல், செயற்பாடுத்துதல், மேற்பார்வை செய்தல் மூலமும் முகாமைத்துவம் பணிப்பாளர் சபைக்கு உதவும்.

நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் பணித் திட்டம் மற்றும் பயன்கள் தொடர்பில் கலந்துரையாடும் போது பயன்படுத்தப்பட்ட செயல் முறையின் பண்புகள்

நிதி அறிக்கைப்படுத்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் அளவு மற்றும் நேர்மை குறித்து கலந்துரையாடுவதற்கு உருவாக்கப்பட்டுள்ள அடிப்படை நடைமுறைகள் பின்வருமாறு :

- பணிப்பாளர் சபையினால் உருவாக்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வுப் பிரிவு தொடர்ச்சியான அடிப்படையில் MBSL கொள்கைகள் மற்றும் செயல் ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டது எனவும் உள்ளகக் கட்டுப்பாட்டின் நகர்வுத் திறனை மதிப்பீடு செய்வதற்கும் ஏதாவது குறிப்பிடத்தக்க இணக்கப்பாடற்ற நடவடிக்கைகள் இருப்பின் அவற்றைக் கண்டறிவதற்கும் பணிப்பாளர் சபைக்கு உதவும். சகல திணைக்களங்கள் மற்றும் கிளைகள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வுகள் நடாத்தப்படுவதுடன், அந்தக் கணக்காய்வுகள் செய்யப்படும் முறைகளின் எண்ணிக்கை மதிப்பீட்டிற்குட்பட்ட அபாயத்தின் அளவின் அடிப்படையில் ஆகும். இதன் நோக்கம், திணைக்களங்கள் மற்றும் கிளைகளின் தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றிய சுயாதீனமானதும், விடய அடிப்படையிலானதுமான அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தலாகும்.

  வருடாந்த கணக்காய்வு திட்டம் பற்றிக் கலந்துரையாடி அதற்கான அனுமதி கணக்காய்வுக் குழவினால் வழங்கப்படும். அத்துடன் கணக்காய்வு செய்யப்பட்ட கண்டுபிடிப்புக்கள் கணக்காய்வுக் குழுவிற்கு கால அடிப்படையிலான கூட்டங்களில் கலந்துரையாடுவதற்காக சமர்ப்பிக்கப்படும்.

- கம்பனியின் கணக்காய்வுக் குழு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, வெளியகக் கணக்காய்வாளர்கள், ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் மற்றும் முகாமைத்துவம் மூலம் இனங் காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு அபாயங்கள் முகாமைத்துவத்தினதும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினதும் அளவு மற்றும் பயன்பாடு மதிப்பிடப்படும். அவ்வாறே நடைமுறையில் உள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறையை மேம்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கி உள்ளக கட்டுப்பாடு அத்தியாவசியம் தேவைப்படும் துறையை சுட்டிக் காட்டும். கணக்காய்வுக் குழுக்களின் அறிக்கைகள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்படும். சபையின் கணக்காய்வுக் குழுவுக்குரிய ஏனைய பணிகள் குறித்து மேலதிக விபரங்கள் 114 ஆம் பக்கத்தில் சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- கம்பனியின் அன்றாட செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் நிறுவன நோக்கங்கள் மூலோபாயங்கள் மற்றும் வருடாந்த பாதீடு போன்றே அனுமதிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வியாபார ஆலோசனைகளுக்கு உடன்பாடானது என்பது உறுதிப்படுத்தப்படும் போது சபைக்கு உதவுவதற்காக பொறுத்தமான அதிகாரங்களுடன் செயற் குழுக்கள் சபையினால் உருவாக்கப்படும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பை மதிப்பீடு செய்யும் போது விசேடமாக அடையாளம் காணப்பட்ட அதிகாரிகளின் மூலம் முக்கியத்துவம் வாய்ந்த கணக்குகள் மற்றும் கம்பனியின் நிதி அறிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் தொடர்பான சகல நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாட்டு ஒழுங்குகள் ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதுடன், அவை உள்ளக கணக்காய்வு பிரிவினரால் மேற்பார்வை செய்யப்படுவதுடன், அவை திட்டம் மற்றும் வினைத்திறன் என்பவற்றின் அடிப்படையில் பொருத்தமானதா என்பது தொடர்ச்சியாக பரிசீலிக்கப்பட்டது.

சபையின் உறுதிப்படுத்தல்

மேற்கூறிய செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு MBSL நிதி அறிக்கைப்படுத்தல் முறைமை திட்டமிட்டுள்ளமையானது நிதி அறிக்கைப்படுத்தல் தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்காகவும், வெளியக நடவடிக்கைகளுக்காக நிதி அறிக்கைகளை தயாரித்தல் மேற்கொள்ளப்படுவது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஸ்ரீலங்கா மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கும் தேவைப்பாடுகளுக்கும் உட்பட்டாகும் என்பதை சபை உறுதிப்படுத்துகிறது.

வெளியக கணக்காய்வாளர்களின் அறிக்கை தொடர்பான மதிப்பாய்வு

நிறைவேற்றப்பட்ட செயல் முறைகளின் அடிப்படையில் வெளியாகக் கணக்காய்வாளர்கள் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாவது, நிதிக் கூற்றுக்கள் நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளின் விளைத்திறன் சம்பந்தமான மீளாய்வின்போது பணிப்பாளர் சபையினால் பயன்படுத்தப்பட்ட செயல் ஒழுங்குமுறைகள் தொடர்பான தெளிவு மற்றும் இந்தக் கூற்று ஒத்திருக்கவில்லை என்பதற்கான காரணங்கள் அவர்களது கவனத்திற்குட்படவில்லை என்பதாகும்.

பணிப்பாபளர் சபை சார்பாக,

டப்.பீ.ஆர்.பீ.எச்.பொன்சேக்கா
பணிப்பாளர்

சீ.என்.விஜேவர்தன
பணிப்பாளர்

2017 மார்ச் 17 ஆம் திகதி
கொழும்பு

நிதி அறிக்கையிடல் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

கம்பனியினதும் அதன் குழுமத்தினதும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது. நிதி அறிக்கை தொடர்பில் கணக்காய்வாளர்களின் பொறுப்பிளைத் தெளிவுபடுத்தும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 137 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 150 (1), 151, 152, மற்றும் 153 (1) ரூ (2) சட்டங்களின் அடிப்படையில் கம்பனியின் குழுமத்தினதும் சகல கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் தகவல்கள் முறையாகப் பேணப்படல், ஒவ்வொரு வருட முடிவிலும் கம்பனியினதும், குழுமத்தினதும் நிதி நிலைமை, மற்றும் ஒவ்வாரு நிதி ஆண்டுக்கும் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதி செயல் அடைவு தொடர்பில் சரியானதும், நியாயமானதுமான தகவல்களை உள்ளடக்கிய நிதி அறிக்கை ஒன்றை தயார் செய்தல் அவற்றை பொதுக் குழுவில் முன்வைத்தல் என்பன தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்புக் கூற வேண்டும். 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலமை குறித்த அறிக்கை, வருமான அறிக்கை மற்றும் ஏனைய விரிவான வருமான அறிக்கைகள், ஆதன அசைவு தொடர்பான அறிக்கை, காசுப் பாய்ச்சல் கூற்று, அவற்றுடன் தொடர்பான குறிப்புக்கள் என்பன நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டும்.

அதன் அடிப்படையில் கம்பனி மற்றும் குழுமத்தின் அறிக்கைகள் கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் சரியானதும், நியாயமானதுமான கற்பிதம் ஒன்றை வழங்கும் என்பதை பணிப்பாளர்கள் உறுதி செய்கின்றனர்.

(அ) அறிக்கைப் படுத்தப்படும் திகதிக்கு கம்பனி மற்றும் குழுமத்தின் நிதி நிலமை மற்றும்

(ஆ) அறிக்பைப் படுத்தப்படும் திகதியுடன் நிறைவடைந்த நிதி ஆண்டுக்காக கம்பனி மற்றும் குழுமத்தின் நிதி செயல் அடைவு

2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டுக்காக கம்பனி மற்றும் குழுமத்தின் நிதி அறிக்கை, இலங்கை கணக்கீட்டுக் கொள்கைகள் (SLFRSs யனெ LKASs)" 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டம், 1995 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு சட்டம், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டம் மற்றும் அதற்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் நடைமுறையில உள்ள பட்டியல் படுத்தப்படுவதற்கான விதிகள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை பங்குகள் மற்றும் பரிவர்த்தணை ஆணையம் இணைந்து வெளியிட்டுள்ள நிறுவன நல்லாட்சிக்கான அறிவுறுத்தல்கள் ஆகிய சகலவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கு உடன்பாடானதாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை பணிப்பாளர்கள் உத்தரவாதப் படுத்துகின்றனர்.

ஊழல் மற்றும் ஏனைய முறைகேடுகளை வெளிக் கொண்டு வருவதற்காகவும் தவிரத்துக் கொள்வதற்காகவும் கம்பனி மற்றும் குழுமத்தின் சொத்துக்களைப் பாதுக்காதர்துக் கொள்வதற்காகவும் பணிப்பாளர்கள் அவர்களால் மேற்கொள்ளக் கூடிய நியாயமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். இது தொர்பில் ஊழல் மற்றும் ஏனைய முறைகேடுகளை வெளிக் கொண்டு வருவதையும், தவிர்ப்பதையும் நோக்காகக் கொண்டு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பணிப்பாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. காசுப் பாய்ச்சல், கடன் வசதிகள் உட்பட எதிர் வரும் வருடங்களுக்காக கம்பனியின் பாதீடு தொடர்பில் வினவுதலும் கலந்துரையாடலும் நிறைவடைந்த பின்னர் தூரநோக்குள்ள எதிர்காலத்திற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவதுடன் தொடர்ந்தி யங்குவதற்காக கம்பனிக்கு போதுமான வளங்கள் இருக்கின்றது என்பதை பணிப்பாளர்களுக்கு நியாயமான எதிர்பார்ப்பு உள்ளது என்பதுடன் அதனால் நிதி அறிக்கைகளை தயார் செய்யும் போது நிறுவனத் தொடர்ச்சி கருத்துக் கொள்கை பிரயோகிக்கப்பட்டுள்ளது.

கம்பனிச் சட்டத்தின் 166 (1) மற்றும் 167 (1) பிரிவுகளின் படி பணிப்பாளர் சபை இந்த அறிக்கையை உரிய காலத்தில் தயாரித்துள்ளது என்பதை உறுதி செய்வதற்கு இணங்குவதுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியல் படுத்தல் நியமங்களில் தொடர்ச்சியாக பட்டியல்படுத்தல் செய்யும் தேவைப்பாடுகள் தொடர்பான நியம இலக்கம் 7.5 (அ) மற்றும் (ஆ) இன் படி உரிய காலப் பகுதியினுள் அதன் பிரதி ஒன்றை வன் பிரதியை பெற்றுக் கொள்வதற்கு விருப்பத்தை தெரிவித்துள்ளதுடன், கம்பனியின் சகல பங்குதாரர்களுக்கும் மற்றும் ஏனைய ஏனைய பங்குதாரர்களுக்கு வருடாந்த அறிக்கைகள் அடங்கிய இருவட்டு வீதம் வன் பிரதி அனுப்பப்படும் என்றும் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. சகல வகையிலான பங்குதாரர்களுக்கும் முதல் வழங்கலின் உப விதிகளுக்கு உடன்பாடானதாக சமமாகக் கருதப்பட்டுள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (4) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வாளர் நாயகம் கம்பனியின் கணக்காய்வாளர் என்பதுடன், அவர் கம்பனியின் நிதி அறிக்கைகள் தொடர்பில் இறுதிக் கருத்தை வெளியிடுவார். நிதி அறிக்கை தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு வருடாந்த ஆண்டறிக்கையின் 137 பக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

பொருத்தப்பாட்டு அறிக்கை

பணிப்பாளர்களின் அறிவின் படி கம்பனி செலுத்த வேண்டிய சகல வரிகள், கூட்டிணைந்த வரிகள் மற்றும் நிதியியல் பொறுப்புக்கள் ஆகிய சகலதும் செலுத்தப்பட்டுள்ளன என்பதாகவும் அல்லது பொறுத்தமானவாறு நிதி ஒதுக்கீடுகள் நிதி அறிக்கைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் உத்தரவாதமளிக்கின்றனர். நிதி நிலமை, நடவடிக்கை நிலமைகள், வழிப்படுத்தல் மற்றும் ஏனைய காரணிகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் இலங்கை பங்குகள் மற்றும் பரிவர்த்தணை ஆணையம்இணைந்து வெளியிட்டுள்ள நிறுவன நல்லாட்சி வழிகாட்டியில் விளிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்ட பின்னர் கிட்டிய எதிர் காலத்திற்காக நடவடிக்கைகளை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு போதுமான வளங்கள் கம்பனிக்கும் குழுமத்திற்கும் காணப்படுகின்றது என்ற நியாயமான எதிர்பார்ப்பு பணிப்பாளர்களுக்கு இருக்கிறது என பணிப்பாளர்கள் உறுதி செய்கின்றனர். நிர்வாக பங்குதாரர்களாக மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீலங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி என்பன தேவையான மூலதனத்தை ஈடுபடுத்துகிறது. இதன் காரணமாக நிதி அறிக்கையை தயார் செய்யும் போது நீடித்த நிலைப்பு மேலும் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் பொறுப்பை பணிப்பாளர்கள் விடுவித்துள்ளனர் என்பது அவர்களின் கரும்தாகும்.

பணிப்பாளர் சபையின் பணிப்பின் பேரில்

கே. ஜயதிலக்க
கம்பனி செயலாளர்

2017 மார்ச் 17 ஆம் திகதி
கொழும்பு

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } BAF/B/BOC-S/MBSL/2016 ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 23 May 2017

மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீலங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி இன் பங்குடைமையாளர்களுக்கு,

2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீலங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

நிதி அறிக்கை தொடர்பான அறிக்கை

2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீலங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி ("கம்பனி") இன் நிதி அறிக்கைகள் மற்றும் கம்பனி, அதன் துணைக் கம்பனியின் ("குழுமம்") 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அந்தத் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான வருமானக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றுக்கள், பங்குரிமை மாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பான பொழிப்புக்கள் மற்றும் ஏனைய விபரமான கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 (1) ஆவது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது அறிவுறுத்தல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வை மேற்கொள்வதற்காக பிரசித்திபெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று உதவி வழங்கியது.

நிதிக் கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

பணிப்பாளர் சபை ("சபை") இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக சரியாகவும், நியாயமானதாகவும் தகவல்களை வழங்கும் இந்த நிதி அறிக்கை ஊழல் மற்றும் வழுக்கள் தொடர்பில் மீண்டும் அறிக்கை சமர்ப்பித்தல் மேற்கொள்ளாமல் நிதி அறிக்கைகளை தயாரிக்க முடியுமாவதற்காக சபையின் தீர்மானங்கள் தேவை என்பதால் அந்த உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளது.

கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

எமது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதி அறிக்கை தொடர்பில் கருத்து ஒன்றை முன்வைப்பது எமது பொறுப்பாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் எமது கணக்காய்வை மேற்கொண்டோம். அந்த நியமங்களின் அடிப்படையில் நாங்கள் ஒழுங்கு முறையொன்றைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன், நிதி அறிக்கை விடய ரீதியான தவறான அறிக்கைகளில் இருந்து சுயாதீனமாக உள்ளதா என்பது குறித்தும் நேர்மையான உத்தரவாதம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக கணக்காய்வு திட்டமிட்டு நடாத்தப்படுகிறது.

நிதி அறிக்கைகளின் அளவு மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பில் கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக் கொள்வது கணக்காய்வு செயல் ஒழுங்கு விதிகளை செயற்படுத்துவதுடன் தொடர்புடையதாகும். தெரிவு செய்யப்பட்ட செயல் ஒழுங்கு விதிகள் மற்றும் முறைகேடுகள் காரணமாக நிதி அறிக்கைகளில் விடய ரீதியான தவறான வெளிப்படுத்தல் அபாயம் தொடர்பில் மதிப்பிடல் உள்ளடங்களாக கணக்காய்வாளர் நாயகத்தின் தீர்மானத்தில் தங்கியுள்ளது. அவ்வாறான அபாயங்கள் மதிப்பீடு செய்யப்படும் போது, நிறுவனத்தின் உள்ளக வினைத்திறன் தொடர்பில் கருத்து ஒன்றை வெளியிடும் நோக்கத்திற்காக அன்றி, சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு செயல் ஒழுங்குகளைத் திட்டமிடுவதற்காக உண்மையானதும், நியாயமானதுமான பார்வையை வழங்கும் நிறுவனத்தின் நிதி அறிக்கையை தயாரிப்பதற்கு உரிய உள்ளக கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வு அவதானம் செலுத்துகிறது. பணிப்பாளர் சபையினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்குப் பொருத்தமான மதிப்பீடுகள் மற்றும் மொத்த நிதி அறிக்கையைத் தயாரித்தல் தொடர்பான மதிப்பீடும் கணக்காய்விற்கு உட்பட்டதாகும்.

நான் பெற்றுக் கொண்ட கணக்காய்வு சாட்சிகள் எனது கணக்காய்வுக் கருத்திற்கான அடிப்படைக்கு போதுமானதும் பொருத்தமானதும் என நாம் நம்புகிறேன்.

கருத்து

எமது கருத்தினுள், திரட்டப்பட்ட அல்லது ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகள் 2016 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு குழுமத்தின் நிதி நிலமை தொடர்பிலும் அன்றைய திகதியில் நிறைவடையும் வருடத்திற்கான நிதி செயல் அடைவு மற்றும் காசுப் பாய்ச்சல் தொடர்பில் நியாயமான நோக்கு ஒன்றினை வழங்குவதுடன் அவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இசைவானதாகும்.

விடயங்கள் தொடர்பிலான அவதானிப்பு

எமது கருத்தினை உறுதி செய்யாமல் கம்பனியின் நிர்வாகக் கம்பனி ஒன்றான ஆடீளுடு காப்புறுதி கம்பனி தொடர்பான நிதி அறிக்கை தொடர்பில் கீழ்வரும் குறிப்பின் மீது உங்கள் கவனத்தை செலுத்தவும்.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. · இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. · No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

- ஆடீளுடு காப்புறுதி நிறுவனத்தின் நிதி அறிக்கைகளைத் தயார் செய்யும் போது நிலைத்திருக்கும் எதிர்பார்கை தொடர்பில் நிதி அறிக்கை தொடர்பான குறிப்பு 44

- குறிப்பு 47.2.2 - இதன் கீழ் வருடத்தினுள் மேற்கொள்ப்பட்ட செயலடைவு பிணைக் காப்புறுதி உரிமைகள் தொட்ரபான அசாதாரண பொறுப்புகளை விளக்குகிறது.

எமது கருத்து இந்த விடயம் தொடர்பில் தகுதியானதல்ல

ஏனைய விடயங்கள்

2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற வருடத்திற்காக மேர்ச்சன்ட் பேன்க ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி இன் ஒருங்கிணைந்த நிதி அறிக்கை வேறு ஒரு கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்பட்டதுடன், நிர்வாக கம்பனியான ஆடீளுடு காப்புறுதி கம்பனியின் நிலைப்பை வலியுறுத்தி 2016 மே மாதம் 18 ஆம் திகதி அந்த அறிக்கை தொடர்பில் பொருத்தமற்ற கருத்து ஒன்றை வெளியிட்டார்.

ஏனைய சட்ட ரிதியான மற்றும் விதிமுறைகளின் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டு 07 மே இலக்க கம்பனி சட்டத்தின் 163 (2) பிரிவின் நியமங்களின் படி நாம் பின்வரும் விடயங்களை முன்வைக்கிறோம்.

அ) கணக்காய்வின் கருத்தது மற்றும் விடயத் தளம், எல்லைகள் தொடர்பிலான அடிப்படைகள் மேற் குறிப்பிட்டவாறு அமையும்.

ஆ) எனது கருத்தின் பிரகாரம் :

- கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பவற்றை நாம் பெற்றுக் கொண்டிருப்பதுடன், எனது பரிசோதனையில் விளங்கியதன் அடிப்படையில் கம்பனியானது பொருத்தமான கணக்கு அறிக்கைகளைப் பேணி உள்ளது.

- கம்பனியின் நிதி அறிக்கை மூலம் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அதன் நிதி நிலமை மற்றும் அந்தத் திகதியில் நிறைவடைந்த வருடத்திற்கான நிதி செயல் அடைவு மற்றும் காசுப் பாய்ச்சல் தொடர்பில் உண்மையானதும், நியாயமானதுமான அர்த்தம் ஒன்றை பெற்றுத் தருவதுடன், அவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு உடன் பாடானதாகும்.

- கம்பனியினதும் குழுமத்தினதும் நிதி அறிக்கை 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுக்கு உடன்பாடானதாகும்.

ஆனாலும், நிர்வாக கம்பனியின் தேறிய சொத்துக்களின் சதவீதம் மூலதனத்தில் அரைவாசியை விடக் குறைவு என்பதுடன், 2007 ஆம் ஆண்டின் 07 இலக்க கம்பனிகள் சட்ட மூலத்தின் 220 ஆவது பிரிவின் படி மூலதன நிலமையில் தீவிரமான நட்டத்திற்கு முகம் கொடுக்கிறது என்பதை குறிப்பிடல் வேண்டும்.

- நிதி அறிக்கைகள் தொடர்பான குறப்பு 44 இல் கலந்துரையாடப்பட்டவாறு 2011 ஆம் ஆண்டு காப்புறுதித் தொழில் சீராக்கல் (திருத்திய) சட்டத்தின் 53 ஆம் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறு காப்புறுதிக் கம்பனிகளாகக் கொண்டு நடாத்திச் செல்ல வேண்டிய நீண்ட கால காப்புறுதி வணிகம் மற்றும் பொதுக் காப்புறுதி வணிகம் என்பன வெவ்வேறாக ஆக்கப்பட்டிருக்கவில்லை.

- நிர்வாகக் கம்பனியில் உயிர் அல்லாத வணிகங்கள் 2000 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில் சட்டத்தின் விதிகள் மற்றும் 2015 கரையக்கூடிய ஆபத்துமிக்க (ஆபத்தை அடிப்படையாகக் கொண்ட மூலதனங்கள்) நியமங்கள் மூலம் மூலதன அளவுச் சுட்டி மற்றும் பெற்றுக் கொள்ளக் கூடிய மொத்த மூலதனத்திற்கு தேவையான குறைந்த பட்ச குறைந்த எல்லை என்பன பூரத்தி செய்யப்படாததோடு, ஆயுள் காப்புறுதி வணிகத்திற்கான பெற்றுக் கொள்ளக் கூடிய மொத்த மூலதனத்திற்கு தேவையான குறைந்த பட்ச எல்லை பூர்த்தி செய்யப் பட்டிருக்க வில்லை.

பாராளுமன்றத்திற்கு அறிக்கைப்படுத்தல்

அரசியல் யாப்பின் 154 (6) ஆவது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, உரிய காலத்தில் எனது அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எச்.எம்.காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

நிதிக் கூற்றுக்கள் - அட்டவணை

குறிப்பு இலக்கம்		பக்க எண்.
நிதிக் கூற்றுக்கள்		
	இலாப நட்டக்கூற்று	140
	விரிவான வருமான அறிக்கை	141
	நிதி நிலமை அறிக்கை	142
	உரிமை மாற்றல் கூற்று	144
	காசுப் பாய்ச்சல் கூற்று	145
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்		
இலாப நட்டக் கூற்றுக்கள்		
1	நிறுவனங்கள் பற்றிய தகவல்கள்	146
2	தயாரிக்கும் அடிப்படை	146
3	முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்	148
4	வருமானம்	156
5	தேறிய வட்டி வருமானம்	156
6	தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	157
7	காப்புறுதி வருமானம்	158
8	தேறிய வியாபார வருமானம்	159
9	வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்களின் மீதான தேறிய வருமானம் / நட்டங்கள்	159
10	ஏனைய தொழிற்பாட்டு வருமானம்	159
11	கடன் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பாதிப்பு அறவீடுகள்	160
12	ஊழியர் செலவுகள்	160
13	ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்	161
14	வருமான வரிச் செலவுகள்	162
15	ஒரு பங்கின் மீதான ஈட்டல்/ (நட்டம்) மற்றும் ஒரு பங்கின் மீது ஈட்டிய பங்கிலாபம்	163
நிதி நிலைமைக் கூற்று - சொத்துக்கள்		
16	மதிப்பீட்டு அடிப்படையிலான நிதிக் கருவி பகுப்பாய்வு	164
17	காசும் காசுக்கு சமமானவையும்	167
18	வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் நிலுவை	168
19	மீள் கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணைப் பத்திரங்கள்	168
20	கொடுக்கல் வாங்கல்களுக்காக உள்ள நிதிச் சொத்துக்கள்	168
21	கடன் மற்றும் பெறுவனவுகள்	177
22	விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள்	182
23	முதிர்வுக்காக வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள்	184
24	நிர்வகிக்கும் கம்பனியின் முதலீடுகள்	185
25	துணைக் கம்பனிகளின் முதலீடுகள்	187
26	முதலீட்டு சொத்துக்கள்	189
27	சொத்துக்கள், வளவுகள் மற்றும் உபகரணங்கள்	191
28	புலப்படாத(அருவ)ச் சொத்துக்கள்	194
29	ஏனைய சொத்துக்கள்	197
30	வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை - வங்கிக் கடன்	197
31	வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை - கடனாளிகள்	197
32	வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் கடன் நிதியம்	198
33	காப்புறுதிக்கான ஒதுக்கீடுகள்	199
34	நடைமுறை வரிப் பொறுப்புக்கள்	201
35	ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	202
36	ஏனைய பொறுப்புக்கள்	203
37	ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடுகள் (பொறுப்புக்கள்)	203
38	வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்	205
39	இருப்புக்கள்	205
40	மேலதிக காசுப் பாய்ச்சல் தகவல்கள்	206
ஏனைய நிதி வெளிப்படுத்தல்கள்		
41	தொடர்புடைய தரப்பினரின் வெளிப் படுத்தல்கள்	206
42	நிதிக் கருவிகளின் நியாயமான பெறுமானம்	210
43	4அறிக்கைப் படுத்தப்படும் காலத்தின் பின்னரான நிகழ்வுகள்	213
44	துணை நிறுவனத்தின் நீடித்த நிலைத்திருப்பு	214
45	சமப்படுத்தல் தகவல்கள்	214
46	பிரிவுகள் ரீதியிலான நிதி அறிக்கைப்படுத்தல்	215
47	சாத்தியமற்ற பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்	218
48	அபாய முகாமைத்துவம்	226
49	செயற்பாட்டு ஆபத்துக்கள்	237

இலாப நட்டக் கூற்று

டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	குறிப்பு	கம்பனி 2016 ரூ.'000	கம்பனி 2015 ரூ.'000 மீள் சதவீதம்*	குழுமம் 2016 ரூ.'000	குழுமம் 2015 ரூ.'000 மீள் சதவீதம் *
வருமானம்	4	4,888,155	4,216,991	6,099,998	5,429,495
வட்டியும் சமனான வருமானங்களும்		4,737,774	4,073,159	4,853,007	4,164,059
வட்டியும் சமனான செலவினங்களும்		(2,709,604)	(2,133,325)	(2,710,557)	(2,134,351)
தேறிய வட்டி வருமானம்	5	2,028,170	1,939,834	2,142,450	2,029,708
கட்டணங்களும் தரகு வருமானங்களும்		41,455	42,640	100,695	197,659
கட்டணங்களும் தரகு செலவினங்களும்		-	-	(65,674)	(99,898)
தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்	6	41,455	42,640	35,021	97,761
காப்புறுதி தவணை வருமானம்	7	-	-	995,321	903,910
தேறிய உரிமை வழங்கல் மற்றும் அனுகூலங்கள்		-	-	(845,430)	(616,128)
தேறிய வணிக வருமானம்	8	10,072	46.862	5,612	48,531
வணிகத்திற்கு வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களின் மீதான தேறிய இலாபம் அல்லது/ (நட்டம்)	9	(61,096)	(54,137)	(58,226)	(55,336)
ஏனைய செயற்பாட்டச் செலவுகள்	10	159,950	108,467	203,589	170,672
மொத்த செயற்பாட்டுச் செலவுகள்		2,178,551	2,083,666	2,478,337	2,579,118
கடன் மற்றும் பெறுவனவுகளுக்கான ஏனைய நட்டங்களுக்கான இழப்பீட்டு அறவீடுகள்	11	(24,239)	(462,151)	(27,959)	(474,618)
தேறிய செயற்பாட்டு வருமானம்		2,154,312	1,621,515	2,450,378	2,104,500
ஆளணியினரின் செலவுகள்	12	(781,530)	(670,740)	(993,084)	(857,116)
ஓய்வு நன்மை செலவுகள்	37.1	(40,464)	(42,648)	(45,697)	(47,751)
சொத்துக்கள், வளவுகள், உபகரணங்கள் மற்றும் முதலீட்டு சொத்துக்களின் தேய்வு	27 ரூ 26	(63,572)	(59,022)	(82,651)	(79,897)
புலமைச் சொத்து தேய்வு	28	(14,098)	(11,148)	(21,588)	(20,269)
ஏனைய செயற்பாட்டு செலவுகள்	13	(670,156)	(610,267)	(943,391)	(975,134)
மொத்த செயற்பாட்டுச் செலவுகள்		(1,569,820)	(1,393,825)	(2,086,411)	(1,980,167)
நிதிச் சேவைகள் மீது வி.நி வரிக்கு முந்திய செயற்பாட்டு வருமானம் மற்றும் துணைக் கம்பனிகளின் முதலீட்டின் பாதிப்புக்கள்		584,492	227,690	363,967	124,333
துணைக் கம்பனிகளின் முதலீடுகளின் பாதிப்புக்கள்		(232,891)	(205,899)	-	(18,193)
துணைக் கம்பனிகளின் முதலீடுகளின் ஏற்பாடுகளின் பின்னரான செயற்பாட்டு இலாபம்		351,601	21,791	363,967	106,140
நிதிச் சேவைகளின் மீதான பெறுமதி சேர் வரி		(111,730)	(57,219)	(111,730)	(57,219)
வரிக்கு முந்திய இணைந்த கம்பனிகளின் இலாபம் / (நட்டம்) பகுதி	24.1	-	-	(5,437)	7,080
வருமான வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்)		239,871	(35,428)	246,800	56,001
வருமான வரிச் செலவினம்	14	(154,247)	(42,878)	(165,658)	(52,718)
வருடத்திற்கான இலாபம் / (நட்டம்)		85,624	(78,306)	81,142	3,283
வருடத்திற்கான இலாபப் பகிர்வு:					
தாய்க கம்பனியின் பங்குதாரர்களுக்கு		85,624	(78,306)	117,853	22,152
கட்டுப்பாட்டுக்குள் ஆகாத உரிமைகள்		-	-	(36,711)	(18,869)
வருடத்திற்காக இலாபம் / (நட்டம்)		85,624	(78,306)	81,142	3,283
பங்கு ஒன்றனை ஈட்டல் / (நட்டம்):					
அடிப்படை / நீர்த்த / (நட்டம்) (ரூ)	15	0.52	(0.47)	0.71	0.13

* இந்தக் கூற்றுக்களின் 45 ஆவது கூற்றில் விவரிக்கப்படுவதன் அடிப்படையில் சில பெறுமானங்கள் 2015 நிதி அறிக்கைக்கு இயையானதான இல்லை என்பதுடன் 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டுக்கான வட்டி வருமானங்கள் உத்தேச வரிகளின் மீது மேற் கொள்ளப்பட்ட சீராக்கல்களைக் வெளிக் காட்டுகின்றது.

அடைப்பினுள் பெறுமானங்கள் கழித்தல் காட்டப்பட்டுள்ளது.

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம 146 தொடக்கம் 238 வரை காட்டப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுக்கு அத்தியாவசியமான பகுதியாகக் கருதப்படல் வேண்டும்.

விரிவான வருமானக் கூற்று

டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	குறிப்பு	கம்பனி 2016 ரூ.'000	கம்பனி 2015 ரூ.'000 மீள் சதவீதம்*	குழுமம் 2016 ரூ.'000	குழுமம் 2015 ரூ.'000 மீள் சதவீதம் *
வருடத்திற்கான இலாபம் / (நட்டம்)		85,624	(78,306)	81,142	3,283
ஏனைய விரிவான வருமானங்கள் / (செலவினங்கள்)					
எதிர் காலத்தினுள் இலாப நட்டங்களுக்கு மீள வகைப்படுத்தப்படும் ஏனைய விரிவான வருமானங்கள் (வரிகளின் தேறிய)					
விற்பனைக்காக உள்ள நிதி சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதன் மூலம் உருவான இலாபம் / (நட்டம்)		(17,452)	(47,835)	(29,129)	(53,833)
எதிர் காலத்தினுள் இலாப நட்டங்களுக்கு மீள வகைப்படுத்தப்படும் ஏனைய விரிவான வருமானங்கள் (வரிகளின் தேறிய)		(17,452)	(47,835)	(29,129)	(53,833)
எதிர் காலத்தினுள் இலாப நட்டங்களுக்கு மீள வகைப்படுத்தப்படும் ஏனைய விரிவான வருமானங்கள் (வரிகளின் தேறிய)					
தீர்மானிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களின் மீதான இலாபம் / ((நட்டம்)	37	39,068	32,603	40,541	31,215
அண்மைய கம்பனியின் ஏனைய விரிவான வருமானப் பங்கு	24.1	-	-	1,035	(726)
ஏனைய விரவான வருமானங்களின் கூறுகளிற்குரிய தீர்வையாகாத வரிகளின் தாக்கம்	14	(1,810)	(11,072)	(1,810)	(11,072)
எதிர் காலத்தினுள் இலாப நட்டங்களுக்கு மீள வகைப்படுத்தப்படும் ஏனைய விரிவான வருமானங்கள் (வரிகளின் தேறிய)		37,258	21,531	39,766	19,417
வரிகளுக்குத் தேறிய ஏனைய விரிவான வருமானங்கள்		19,806	(26,304)	10,637	(34,416)
வருடத்திற்குரிய தேறிய மொத்த விரிவாக வருமானம்.		105,430	(104,610)	91,779	(31,133)
மொத்த விரிவான வருமானம் கூ (செலவினம்) பகிர்வு					
தாயக் கம்பனியின் பங்குதாரர்களுக்கு		105,430	(104,610)	130,111	(11,091)
நிர்வாகத்திற்கு உடபடாத உரிமைகள்		-	-	(38,332)	(20,042)
வருடத்திற்குரிய வரிகளுக்கான தேறிய மொத்த விரிவான வருமானம்		105,430	(104,610)	91,779	(31,133)

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இல்க்க 146 தொடக்கம் 238 வரை காட்டப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுக்கு அத்தியவசியமான பகுதியாகக் கருதப்படல் வேண்டும்.

நிதி நிலைமை அறிக்கை

டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	குறிப்பு	கம்பனி 2016 ரூ.'000	கம்பனி 2015 ரூ.'000 மீள் சதவீதம்*	குழுமம் 2016 ரூ.'000	குழுமம் 2015 ரூ.'000 மீள் சதவீதம்*
சொத்துக்கள்					
சொத்துக்கள்	17	401,301	380,830	441,357	432,947
வங்கி மற்றும் நிதி நிறுவன ஸ்தாபிப்புக்கள்	18	118,933	440,093	262,319	571,672
மீள் விற்பனை செய்யும் ஒப்பந்ததத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள கடன் பத்திரங்கள்	19.1	265,687	785,965	730,773	1,609,702
கொடுக்கல் வாங்கல்களுக்காக உள்ள நிதி முதலீடுகள்	20	323,655	541,970	331,586	552,741
கிடைக்க வேண்டியப ற்றுச் சீட்டுக்கள்	21.1	739,403	595,888	739,403	595,888
வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் பெறுவனவுகள்	21.2	11,320,845	8,406,632	11,392,491	8,505,054
கிடைக்க வேண்டிய குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவுகள்	21.3	14,991,751	14,223,259	14,991,751	14,223,259
விற்பனைக்காக உள்ள நிதி முதலீடுகள்	22	2,735,645	1,754,206	3,126,815	1,994,857
முதிர்வு வரை வைக்கப்பட்டுள்ள நிதி முதலீடுகள்	23	57,766	56,507	57,766	56,507
சொத்துக்கள் வியாபார மொத்தம்		24,144	62,545	24,143	62,545
அண்மிய கம்பனியின் முதலீடுகள்	24	81,084	81,084	91,325	96,484
நிர்வகிக்கப்படும் கம்பனியின் முதலீடுகள்	25	77,306	310,197	-	-
முதலீட்டு சொத்துக்கள்	26	127,670	145,840	127,670	145,840
உபகரணங்கள்	27	312,337	219,260	354,092	273,122
கட்புலனாகாச் சொத்துக்கள்	28	37,705	38,816	59,028	67,141
ஏனைய சொத்துக்கள்	29	318,496	231,455	910,918	712,333
மொத்த சொத்துக்கள்		31,933,728	28,274,547	33,641,437	29,900,092
பொறுப்புக்கள்					
வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை - கடன்கள்	30	201,635	258,062	224,997	273,968
மீள் கொள்வனவு ஒப்பந்ததின் கீழ் விற்ற கடன் பத்திரங்கள்	19.2	401,820	416,472	401,820	416,472
வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய	31	18,518,419	15,846,306	18,518,419	15,846,306
வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் ஏனைய கடன் பெறுதல்கள்	32	8,722,787	7,883,323	8,722,787	7,883,323
காப்புறுதி ஒதுக்கீடுகள் - ஆயுளுறுதி	33.1	-	-	514,258	444,257
காப்புறுதி ஒதுக்கீடுகள் - ஆயுள் அல்லாத	33.4	-	-	781,034	512,333
நடைமுறை வரிப் பொறுப்பு	34	151,128	146,284	141,180	136,336
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	35	206,888	113,669	206,888	113,669
ஏனைய பொறுப்புக்கள்	36	404,174	356,840	752,034	956,610
ஓய்வூதயப் அனுகூலப் பொறுப்புக்கள்	37	213,388	245,532	231,463	262,040
மொத்தப் பொறுப்புக்கள்		28,820,239	25,266,488	30,494,880	26,845,314

டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	குறிப்பு	கம்பனி 2016 ரூ.'000	கம்பனி 2015 ரூ.'000 மீள் சதவீதம்*	குழுமம் 2016 ரூ.'000	குழுமம் 2015 ரூ.'000 மீள் சதவீதம்*
பங்குகள்					
கூறப்பட்ட மூலதனம்	38	2,124,457	2,124,457	2,124,457	2,124,457
சட்ட ரீதியான இருப்புக்கள்	39.1	157,669	140,544	157,669	140,544
நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இலாபம்	39.2	853,165	747,408	886,283	746,023
விற்பனைக்காக உள்ள இருப்புக்கள்	39.3	(21,802)	(4,350)	(36,195)	(8,920)
தாயக் கம்பனியின் பங்குதாரர்களுக்கு பங்கிடக் கூடிய மொத்த உரிமை		3,113,489	3,008,059	3,132,214	3,002,104
நிர்வாகத்திற்கு உட்படாத உரிமைகள்		-	-	14,343	52,674
மொத்த உரிமைப் பங்குகள்		3,113,489	3,008,059	3,146,557	3,054,778
மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்குகள்		31,933,728	28,274,547	33,641,437	29,900,092
கடப்பாடுகள் மற்றும் நிச்சயமற்ற பொறுப்புக்கள	47	132,265	123,536	616,478	546,079
பங்கொன்றுக்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூ.)		18.77	18.13	18.88	18.10

அடைப்புக்குள் தொகைகளில் இருந்து குறைத்தல்கள் கட்டப்பட்டுள்ளது.

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இலக்க 146 தொடக்கம் 238 வரை காட்டப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுக்கு அத்தியவசியமான பகுதியாகக் கருதப்படல் வேண்டும். இந்த நிதி அறிக்கை 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப் பட்டுள்ளது என்பதை உறுதி செய்கிறேன்.

பீ.ஐ. கந்தனஆரச்சி
நிதி மேலாளர்

டீ. முத்துகல
பிரதம நிறைவேற்று அதிகாரி

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடல் தொடர்பான பொறுப்புக்கள் பணிப்பாளர் சபைக்கு உரியதாகும். சபை சார்பில் அங்கீகரித்து ஒப்பமிடுகிறேன்.

கலாநிதி எஸ். லொகுஹேவா
தலைவர்

டப்.ஜீ.ஆர்.ஜீ.எச். பொன்சேக்கா
பணிப்பாளர்

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி
கொழும்பு, இலங்கை

பங்குரிமை மாற்றல் கூற்று

கம்பனி	கூறப்பட்ட மூலதனம் ரூ.'000	சட்ட முறை இருப்பு ரூ.'000	விற்பனைக்கான இருப்பு ரூ.'000	நிறுத்தி வை-க்கப்பட்டுள்ள இலாபங்கள் ரூ.'000	மொத்த உரிமை ரூ.'000
2015 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி	2,124,457	140,544	43,485	842,936	3,151,422
மிகை அனுகூல வரி சீராக்கல்	-	-	-	(38,753)	(38,753)
வருடத்திற்காக தேறிய இலாபம்	-	-	-	(78,306)	(78,306)
வரிகளின் பின்னரான தேறிய ஏனைய விரிவான வருமானம் (செலவினம்)	-	-	(47,835)	21,531	(26,304)
2015 டிசம்பர் 31 க்கு மீதீ - மீள் அறிக்கையிட்ட	2,124,457	140,544	(4,350)	747,408	3,008,059
வருடத்திற்கான தேறிய இலாபம்	-	-	-	85,624	85,624
வரிகளிலி இருந்து தேறிய ஏனைய விரிவான வருமானம் (செலவினம்)	-	-	(17,452)	37,258	19,806
சட்ட ரீதியான இருப்புக்களின் மாற்றல்கள்	-	17,125	-	(17,125)	-
2016 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி	**2,124,457**	**157,669**	**(21,802)**	**853,165**	**3,113,489**

குழுமம்	கூறப்பட்ட மூலதனம் ரூ.'000	சட்ட முறை இருப்பு ரூ.'000	விற்பனைக்கான இருப்பு ரூ.'000	நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இலாபங்கள் ரூ.'000	நிர்வாகத்திற்கு உட்படா உரிமைகள் ரூ.'000	மொத்த உரிமை ரூ.'000
2015 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி	2,124,457	140,544	43,961	742,987	72,715	3,124,664
மிகை அனுகூல வரி சீராக்கல்	-	-	-	(38,753)	-	(38,753)
வருடத்திற்காக தேறிய இலாபம்	-	-	-	22,152	(18,869)	3,283
வரிகளின் பின்னரான தேறிய ஏனைய விரிவான வருமானம் (செலவினம்)	-	-	(52,881)	19,637	(1,172)	(34,416)
2015 டிசம்பர் 31 க்கு மீதி - மீள் அறிக்கையிட்ட	2,124,457	140,544	(8,920)	746,023	52,674	3,054,778
வருடத்திற்காக தேறிய இலாபம்	-	-	-	117,853	(36,711)	81,142
வரிகளிலி இருந்து தேறிய ஏனைய விரிவான வருமானம் (செலவினம்)	-	-	(27,275)	39,532	(1,620)	10,637
சட்ட ரீதியான இருப்புக்களின் மாற்றல்கள்	-	17,125	-	(17,125)	-	-
2016 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி	**2,124,457**	**157,669**	**(36,195)**	**886,283**	**14,343**	**3,146,557**

அடைப்புக்குள் தொகைகளில் இருந்து குறைத்தல்கள் கட்டப்பட்டுள்ளது.

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இலக்க 146 தொடக்கம் 238 வரை காட்டப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுக்கு அத்தியவசியமான பகுதியாகக் கருதப்படல் வேண்டும்.

காசுப் பாய்ச்சல் கூற்று

கணக்கீட்டு கொள்கைகள்

காசுப் பாயச்சல் கூற்று தொடர்பில் இலங்கை கணக்கீட்டு கொள்கைகள் LKAS7 க்கு அனுகூலமாக நிதிப் பாய்ச்சலை தயாரிக்கும் வட்டத்தை பிரயோகித்து காசுப் பாயச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. இங்கு செயற்பாட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள், மற்றும் நிதி நடவடிக்கைகள் வெவ்வேறாக இனம் காணப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் விரைவாக காசாக மாற்றத் தக்க குறுங்கால, உயர் திரவத் தன்மை வாய்ந்த மற்றும் பெறுமதி மாற்றம் குறைந்த அபாயத்தின் கீழான முதலீடுகளை உள்ளடக்கியுள்ளது. காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காசு மற்றும் காசுக்கு சாமானவைகள் பக்க இலக்கம் 40 தொடக்கம் 206 வரை உள்ள நிதிக் கூற்றின் குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளவாறு உறுப்படிகளைக் கொண்டதாகும்.

டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	குறிப்பு	கம்பனி		குழுமம்	
		2016	2015	2016	2015
		ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000
			மீள் சதவீதம்*		மீள் சதவீதம்*
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் பெற்ற பணம்					
வருமான வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்)		239,871	(35,428)	246,800	56,001
சீராக்கம்					
செயற்பாட்டு சொத்துக்களில் மாற்றம்	40.2	(3,899,099)	(2,989,522)	(3,987,586)	(2,916,392)
செயற்பாட்டுப் பொறுப்புக்களின் மாற்றம்	40.3	2,719,447	4,416,592	2,806,239	4,671,856
அண்மிய கம்பனியின் வரிக்கு முந்திய இலாபப் பங்கு		-	-	5,437	(7,080)
நிர்ணயிக்கப்பட்ட அனுகூல திட்டத்திற்கான பங்களிப்பு		40,464	42,648	45,697	47,751
வரிக்கு முந்திய இலாபத்தினுள் ஏனைய காசல்லாத உருப்படிகள்	40.4	219,617	610,963	15,798	451,330
கிடைத்த பங்கிலாபங்கள்		(12,853)	(14,008)	(13,127)	(12,559)
		(692,553)	2,031,245	(880,742)	2,290,907
வழங்கப்பட்ட பணிக் கொடைகள்		(33,539)	(11,564)	(35,733)	(13,603)
வருமான வரிக்கு முன் செயற்பாடுகள் மூலம் கிடைத்த தேறிய காசு		(726,092)	2,019,681	(916,475)	2,277,304
செலுத்திய வரி		(57,995)	(89,315)	(69,683)	(89,315)
செயற்பாட்டு நடவடிக்கை மூலம் பெற்ற தேறிய நிதி		(784,087)	1,930,366	(986,158)	2,187,989
முதலீட்டு நடவடிக்கை மூலம் பெற்ற காசுப் பாய்ச்சல்					
குவீடு க்கு நிர்ணயிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களை கொள்வனவு செய்தல்		(31,279)	(563,386)	(33,716)	(563,595)
குவீடுக்கு நியமிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களை ஒதுக்கல் மூலம் பெற்ற காசு		185,713	879,520	189,128	882,543
விற்பனைக்காக உள்ள மற்றும் முதிர்வடையும் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ள நிதி முதலீடுகளை கொள்வனவு செய்தல் -யுகுளூர்வுஆ		(3,082,222)	(2,639,079)	(3,243,384)	(2,843,193)
விற்பனைக்காக உள்ள மற்றும் முதிர்வடையும் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ள நிதி முதலீடுகளை விற்பனை செய்தல் மூலம் பெற்ற தேறிய நிதி		2,228,223	2,704,596	2,228,223	2,719,096
ஏனைய முதலீடுகளின் தேறிய அதிகரிப்பு / (குறைவு)		321,160	1,274,323	309,353	1,281,409
சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு		(154,237)	(81,487)	(160,095)	(89,803)
அருவச் சொத்துக்களின் கொள்வனவு		(12,987)	(19,415)	(14,487)	(22,879)
சொத்துக்கள் உபகரணங்களின் விற்பனை மூலம் கிடைத்த காசு		48,671	3,329	51,649	3,329
கிடைத்த பங்கிலாபம்		12,853	14,008	13,127	15,346
முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்பாட்டில்) கிடைத்த தேறிய காசுப் பாயச்சல்		(484,105)	1,572,409	(660,202)	1,382,253
நிதிச் செயற்பாடுகள் மூலம் கிடைத்த காசுப் பாய்ச்சல்					
மீள் கொள்வனவு மற்றும் மீள் கொள்வனவு ஒப்பந்தங்களை மீளத் திருப்பல் தேறிய அதிகரிப்பு / (குறைவு)		505,626	(246,438)	864,277	(321,914)
ஏனைய கடன் தொகைகளில் தேறிய அதிகரிப்பு / (குறைவு)		1,173,945	(3,017,390)	1,173,945	(3,017,390)
கடன் பத்திரங்களை விடுவித்தலுக்கான கொடுப்பனவு		(334,481)	(268,080)	(334,481)	(268,080)
நிதிச் செயற்பாடுகள் (பயன்பாட்டில்) மூலம் கிடைத்த காசுப் பாய்ச்சல்		1,345,090	(3,531,908)	1,703,741	(3,607,384)
வருடத்தினுள் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய குறைவு		76,898	(29,133)	57,381	(37,142)
வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்		122,768	151,901	158,979	196,121
வருட இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்		199,666	122,768	216,360	158,979
வருட இறுதியில் காசு மற்றும் சமமானவைகளின் பகுப்பாய்வு	40.1				
காசு மற்றும் குறுங்கால நிதியங்கள்		401,301	380,830	441,357	432,947
வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை		(201,635)	(258,062)	(224,997)	(273,968)
		199,666	122,768	216,360	158,979

அடைப்புக்குள் தொகைகளில் இருந்து குறைத்தல்கள் காட்டப்பட்டுள்ளது.

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 146 தொடக்கம் 238 வரை காட்டப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுக்கு அத்தியவசியமான பகுதியாகக் கருதப்படல் வேண்டும்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1 நிறுவனத் தகவல்கள்

இந்தப் பகுதியின் மூலம் அறிக்கையிடப்படும் நிறுவனம், கம்பனி மற்றும் குழுமத்தின் பிரதான செயற்பாடுகள் மற்றும் நிதிக் கூற்றுக்களை இனம் காணல் மற்றும் அதன் அதிகாரத்தை வழங்குதல் தொடர்பில் விபரம் ஒன்றை வழங்கும்.

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

மேர்ச்சன் பேன்க ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி (MBSL) 1982 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இலங்கையினுள் உள்ள பொது பட்டியல் படுத்தப்பட்ட ஒரு கம்பனியாகும். 2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க நிதி வியாபார சட்டத்தின் கீழ் அது பதிவு செய்யப்பட்டுள்ளது. கம்பனியின் சாதாரண பங்குகள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது. கம்பனி 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் மீள பதிவு செய்யப் பட்டுள்ளது. 20144 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதியில் இருந்து அமுலுக்குவரும் வகையில் கம்பனி அதன் பெயரை மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி என மாற்றப் பட்டதுடன் அது அதற்கு முதல் மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா பீஎல்சி என அழைக்கப்பட்டது. MBSL சேமிப்பு வங்கிக் கம்பனி மற்றும் MCSL நிதிச் சேவைகள் கம்பனி 2015 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி உடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி உடன் ஒன்றிணைக்கப்பட்டதைத் தொடர்ந்து நிலையான நிறுவனம் ஒன்றாகத் திகழ்கிறது. கம்பனியின் பதிவு அலுவலகம் இலங்கை வங்கி மேர்ச்சன்ட் கோபுரம், இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் பதியப்பட்டுள்ளது.

1.2 ஒருங்கிணைந்த நிதி அறிக்கை

2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கு மேர்ச்சன்ட் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி இன் ஒருங்கிணைந்த நிதி அறிக்கை கம்பனி மற்றும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கம்பனிகள் (இணைந்து குழுமமாக அறியப்படுகின்ற) மற்றும் அதனுடன் இணைந்த கம்பனிகளின் குழுமங்களின் உரித்துடையவையாகும்.

தாய் கம்பனி மற்றும் இறுதி நிர்வாகக் கம்பனி பணிப்பாளர்களின் கருத்தின் அடிப்படையில் கம்பனியின் தாய்க கம்பனி மற்றும் இறுதி நிர்வாகக் கம்பனியாகக் கருதப்படுவது அரசுக்கு முற்று முழுதாகச் சொந்தமான இலங்கை வங்கியாகும்.

தாய்க் கம்பனி மற்றும் இறுதி நிர்வாகக் கம்பனி

பணிப்பாளர்களின் கருத்துக்கமைய கம்பனியின் தாய்க் கம்பனி மற்றும் இறுதி நிர்வாகக் கம்பனி முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான இலங்கை வங்கியாகும்.

ஊழியர்களின் எண்ணிக்கை

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு கம்பனியின் ஆளணிப் பலம் முறையே 971 மற்றும் 1423 ஆக இருந்தது. (2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு 866 மற்றும் 1440)

1.3 குழுமத்தின் தகவல்கள்

அடிப்படை நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

நிறுவனம்	பிரதான வியாபார நடவடிக்கை
கம்பனி	
மேர்ச்சன் பேன்க் ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சி	குத்தகை, வாடகைக் கொள்வனவு, நிறுவன மற்றும் வாடிக்கையாளர் கடன், நிறுவன ஆலோசனைச் சேவை, மூலதனச் சந்தை நடவடிக்கைகள், எல்லை வணிகம், நுண் நிதியியல், விவசாயக் கடன் வசதிகள், நிலையான சொத்துக்கள் மேம்பாடு, அடகுச் சேவை, இஸ்லாமிய நிதியியல் மற்றும் சேமிப்பு, நிலையான வைப்புக்களை பெறுப்பேற்றல்
நிர்வகிக்கப்படும் கம்பனிகள்	
MBSL காப்புறுதிக் கம்பனி	ஆயுள் மற்றும் சாதாரண காப்புறுதியின் சகல வகைகளுக்குமான மீள் காப்புறுதி
அண்மிய கம்பனிகள்	
லங்கா சிகியுரிடீஸ் தனியார் கம்பனி	பங்குச் சந்தை வர்த்தகம்,கடன் வணிகம் மற்றும் எல்லை வணிகத்தினுள் பதிவு செய்யப் பட்ட பங்குத் தரகர் ஒருவராக பதிவு செய்யப் பட்டுள்ளது.

கலந்துரையாடலுக்கு உட்படும் நிதி ஆண்டினுள் கம்பனியினதும் குழுமத்தினதும் பிரதான செயற்பாடுகளில் பங்களிப்புச் சுபாவத்தில் குறிப்பிடும் படியான மாற்றங்கள் ஏற்பட வில்லை.

1.4 பணிப்பாளர் சபை நிதி அறிக்கையை அங்கீகரித்தல்.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் (சமப்படுத்தல்கள் உட்பட) 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி பணிப்பாளர்களின் பிரேரணை ஒன்றின் மூலம் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் ஆண்டு வெளியிடுவதற்கு அனுமதி அளிக்கப் பட்டது.

2. தயாரித்தலின் அடிப்படைகள்

குறிப்பிட்டுச் சொல்லத் தகு கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்ட தேவைகளை உள்ளடக்கியதாக நிதிக் கூற்றுக்களை தயாரித்தலின் அடிப்படை இந்தப் பகுதியின் மூலம் விபரிக்கப்படுகிறது.

2.1 தயாரித்தலின் அடிப்படைகள் மற்றும் ஏனைய குறிப்பிட்டுச் சொல்லத் தகு கணக்கீட்டுக் கொள்கைகள்.

குறிப்பிட்டுச் சொல்லத் தகு கணக்கீட்டுக் கொள்கைகள், குறிப்பிட்டுச் சொல்லத் தகு கணக்கீட்டுத் தீர்ப்புக்கள், பயன் படுத்தப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் உத்தேசங்கள், ஏனைய பொதுவான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் இதுவரை இணங்கப்படாத இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS) இந்தப் பகுதியினுள் வழங்கப் படுகிறது.

அறிக்கை அளித்தலின் பெறுமானங்கள் தொடர்பான சகல விஷேட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பான குறிப்புக்கள் முன் வைக்கப் பட்டுள்ளன.

2.2 இணக்கப்பாட்டு அறிக்கை

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு மற்றும் அந்தத் திகதிக்கு முடிவடைந்த ஆண்டுக்கான

குழுமத்தின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் விதித்திருக்கும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக (இலங்கை நிதி அறிக்கைப் படுத்தல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - SLFRS மற்றும் LKAS) மற்றும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டம், 2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க நிதி வணிகங்கள் சட்டம் என்பவற்றின் தேவைப்பாடுகள் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியல் படுத்தல் நியமங்கள் என்பவற்றுக்கு இணக்கமாக தயாரிக்கப்பட்டு முன் வைக்கப் பட்டுள்ளது.

இந்த நிதிக் கூற்றிற்கு பின்வரும் கூறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- கலந்துரையாடப்படும் நிதி ஆண்டினுள் கம்பனியினதும், குழுமத்தினதும் நிதிச் செயல் ஒழுங்கு தொடர்பிலான தகவல்களை வழங்கக் கூடிய இலாப நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று (பக்க இலக்கம் 140 தொடக்கம் 141 வரை பார்க்கவும்)

- வருட இறுதியில் கம்பனியினதும் குழுமத்தினதும் நிதி நிலமை தொடர்பான தகவல்களை வழங்கும் நிதி நிலமை அறிக்கை (பக்க இலக்கம் 142 ஐப் பார்க்கவும்)

- கலந்துரையாடப்படும் நிதி ஆண்டினுள் கம்பனியினதும் குழுமத்தினதும் உரிமையில் ஏற்பட்ட மாற்றங்களை வெளிக் காட்டும் உரிமை மற்றல் கூற்று (பக்க இலக்கம் 144 ஐப் பார்க்கவும்)

- காசு மற்றும் காசுக்கு சமனானவைகளை உருவாக்குவதற்கு கம்பனி மற்றும் குழுமத்தின் இயலுமை மற்றும் அந்த பணத்தை பாய்ச்சுவதற்கு நிறுவனத்தின் தேவைகள் தொடர்பில் பாவணையாளர்களுக்கு தகவல் வழங்கும் காசுப் பாய்ச்சல் கூற்று (பக்க இலக்கம் 145 ஐப் பார்க்கவும்) மற்றும்
  நிர்ணயிக்கப்பட்ட நலன்களைப் பகிர்தல் மற்றும்

- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விபரங்கள் தொடர்பிலான விரிவான தகவல்கள் உள்ளடக்கப் பட்ட நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள் (பக்க இலக்கம் 146 - 238 ஐப் பார்க்கவும்)

2.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பொறுப்புக்கள்

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் மற்றும் இலங்கை நிதி அறிக்கை நியமங்கள், மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றுக்கு ஏற்ப துணைக் கம்பனிகள் மற்றும் குழுமத்தின் இந்த நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படலுக்கு பணிப்பாளர் சபை பொறுப்புக் கூற கடமைப் பட்டுள்ளது.

நிதி அறிக்கையை வெளியிடல் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை, கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கையினுள் மற்றும் நிதி நிலமை அறிக்கையினை உறுதிப்படுத்தல் தொடர்பில் முறையே பக்க இலக்கம் 136,106 மற்றும் 143 இல் காட்டப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பினை ஏற்கிறது.

2.4 மதிப்பீடு செய்யும் அடிப்படை

நிதி நிலமை அறிக்கை மற்றும் இலாப நட்டக்கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று என்பவற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கும் பின் வரும் உருப்படிகள் தவிர்ந்த நிதிக் கூற்றுக்களில் தாக்கம் செலுத்தக் கூடிய பணவீக்க காரணிகளுக்கு இணக்கப் பாடுகள் மேற் கொள்ளப் படாமல் கம்பனியின் கணக்குகள் தயாரிக்கப்ப பட்டிருப்பது வரலாற்றுக் கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு ஆகும்.

உருப்படி	மதிப்பீடு செய்யும் அடிப்படை	குறிப்பு இலக்கம்	பக்க இலக்கம்
விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள்	சராசரிப் பெறுமானம்	20	168
கொடுக்கல் வாங்கலுக்காக உள்ள நிதிச் சொத்துக்கள்	சராசரிப் பெறுமானம்	22	182
நிச்சயிக்கப்பட்ட அனுகூலப் பொறுப்புக்கள்	நிர்ணயம் செய்யப் பட்ட நலன்கள் கடப்பா-டுகளுக்கான பொறுப்புக்கள் நிர்ணயம் செய்யப்பட்ட நலன்கள் கடப்பா-டுகளுக்கான நிகழ் கால பெறுமா-னம் மற்றும் இனம் காணப் பாடாத கடந்த கால சேவை செலவுகள் உயிர் கணக்கீட்டு நட்டங்களுக்கு வயதுக் கணக்கீட்டு வருமான-ங்களாக இனம் காணப்படும்	37	203

2.5 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் பயன்பாட்டு நிதி அலகு

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்படுவதுடன், அது குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் பயன்பாட்டு நிதி அலகாகும்.

2.6 நிதிக் கூற்றுக்களை முன் வைத்தல்.

நிதி நிலமை அறிக்கையினுள் கம்பனி மற்றும் குழுமத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அவற்றின் இயல்புகளுக்கு அமைவாக வகைப் படுத்தப் பட்டிருப்பதுடன் திரவத் தன்மை மற்றும் கால அடிப்படையில் அவை வரிசைப் படுத்தப் பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமம் 01 - நிதிக் கூற்றுக்களை முன் வைத்தல் இல் உள்ள நியமங்களின் தூர நோக்கு மற்றும் விடய உள்ளடக்கத் தன்மை மற்றும் அடிப்படை என்பவற்றை முறையாக கவனத்தில் கொண்டு குறிப்பாக இனம் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர கணக்கீட்டு அடிப்படைகளுக்கு இணக்கப்பாடு உள்ளதாக பிரயோகிக்கப் பட்டுள்ளது. தேவையான இடங்களில் கணக்கீட்டு அடிப்படைகள் பிற் குறிப்புகளில் வெளிக் காட்டப் படும்.

நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள்

2.7 முக்கியத்துவம், பதிவழிப்பு செய்தல் மற்றும் மட்டம் தட்டுதல் மற்றும் குழுமத்தை பயன்படுத்தல்

சமமான உருப்படிகளின் தனித்தனி முக்கியத்துவம் மிக்க வகுப்புக்கள் நிதி அறிக்கைகளில் வெவ்வேறாக முன்வைக்கப்படும். சமமற்ற தன்மையிலான உருப்படிகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 01 - நிதிக் கூற்றுக்களை வெளிப்படுத்தல் இன் மூலம் அனுமதிக்கப் பட்டுள்ளவாறு அவை முக்கியமில்லை எனின் வெவ்வேறாகக் முன்வைக்கப்படும்.

ஈடு செய்தல்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் அனுமதியளிக்கும் மற்றும் அதன்படி தேவைப்படும் சந்தர்ப்பம் தவிர சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானம், செலவினங்கள் நிதியறிக்கைகளில் ஈடு செய்யப்பட மாட்டாது.

மட்டம் தட்டுதல்

"நிதிக் கூற்றுக்களின் பெறுமானங்கள் வேறு அடிப்படையில் குறிப்பிடப்படாத சந்தர்ப்பம் தவிர சகல சந்தர்ப்பங்களிலும் கிட்டிய ஆயிரம் ரூபாய்களுக்கு மட்டம் (Rs.'000) தட்டப்பட்டுள்ளது"

2.8 முக்கியத்துவம்மிக்க கணக்கீட்டு தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களின் சாராம்சம்

கண்ககீட்டு கொள்கைகளை பிரயோகிப்பதற்கு மற்றும் சொத்துக்கள், பொறுப்புகக்கள், வருமானம், செலவினம் தொடர்பில் அறிக்கைப் படுத்தப்பட்ட அளவு மற்றும் நிகழ் தகவுகளை வெளியிடுவதில் தாக்கம் செலுத்தக் கூடிய தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் மேற் கொள்வதற்காக மற்றும் SLFRSs/LKASs இற்கு இணக்கமானதாக கம்பனியின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது முகாமைத்துவத்தின் தேவையாகும். தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகள் நடைமுறையில் உள்ள சூழலில் பொறுத்தப்பாடு உடையது என்ற நம்பிக்கை உள்ளடங்களாக வரலாற்று ரீதியான அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அதனால் உண்மையான அனுபவம் மற்றும் முடிவுகள் இவ்வாறான தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மூலம் மாற்றமடைய முடியும். மதிப்பீடுகள் மற்றும் அதன் கீழான எதிர்பார்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான அடிப்படை ஒன்றின் கீழ் கலந்துரையாடல் நடப்பதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்காக சீராக்கங்கள் அதன் அடிப்படையில் இனம் காணப்படும்.

நிதிக் கூற்றுக்களில் இனம் காணப்பட்ட பெறுமானங்களின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டிய தாக்கம் ஒன்று உள்ளது. கணக்கீட்டு கொள்கைகளைப் பயன்படுத்தும் போது மதிப்பீடுகளில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க துறைகள் தொடர்பான தகவல்கள், நிச்சயம் இல்லாத மற்றும் முக்கியத்துவம் மிக்க தீர்ப்புக்கள் பின்வருமாறு உரிய குறிப்புக்களில் கலந்துரையாடப் படும்.

- நிதி அல்லாத சொத்துக்கள் மீதான இழப்புக்கள் - குறிப்பு இல 25,26,27-28
- ஒத்தி வைக்கப்பட்ட வரி - குறிப்பு இலக்கம் 35
- கடன் மற்றும் முற் பணங்களுக்கான இழப்புக்களுக்கான ஒதுக்கீடு குறிப்பு இலக்கம் 21
- ஓய்வு நலன் வழங்கல் - குறிப்பு இலக்கம் 37
- ஒதுக்கீடுகள் மற்றும் கடப்பாட்டுப் பொறுப்புக்கள் -குறிப்பு இலக்கம் 47

2.8.1 தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

எதிர் வரும் காலத்தில் நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்கு குழுமத்தின் இயலுமை குறித்து முகாமைத்துவம் மதிப்பீடு செய்துள்ளதுடன் எதிர் வரும் காலத்தில் வணிகத்தை கொண்டு நடாத்துவதற்குத் தேவையான வளங்களை குழுமம் கொண்டுள்ளது என்பது தொடர்பில் திருப்தி அடைகிறது. மேலும் தொடர்ந்து கொண்டு நடாத்துதல் தொடர்பான விடய ரீதியான நிச்சயமற்ற நிலமைகளை முகாமைத்துவம் அறியவில்லை. அதனால் குழுமத்தின் நிதிக் கூற்று நீடித்த நிலைப்பை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

2.8.2 அறிக்கைப் படுத்தப்படும் காலத்தின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கை அளிக்கப்படும் காலத்தின் பின்னரான நிகழ்வுகள் என்பது நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கும், அவற்றை வெளிப்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்படுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் நடக்கும் சாதகமான மற்றும் பாதகமான சம்பவங்களாகும்.

இது தொடர்பில், அறிக்கைப்படுத்தும் காலத்தின் பின்னர் நிகழ்ந்த சகல முக்கியத்துவம் மிக்க மற்றும் முக்கியத்துவம் அற்ற சம்பவங்கள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப் படுவதுடன், தேவைப்படும் இடங்களில் பொருத்தமான சீராக்கங்கள் மேற் கொள்ளப்படும். அறிக்கைப் படுத்தப்படும் காலத்தின் பின்னரான தகவல்கள் 213 ஆம் பக்கத்தில் குறிப்பு இலக்கம் 43 இன் கீழ் காட்டப் பட்டுள்ளது.

3 முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகள்

3.1 ஒருங்கிணைத்தலை மேற் கொள்வதற்கான அடிப்படை

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் கம்பனியின் (நிர்வாகக் கம்பனி) மற்றும் அதன் நிர்வகிப்பின் கீழ் உள்ள கம்பனி (இணைந்து குழுமம் என அறியப் படுகின்ற) என்பவற்றின் நிதி அறிக்கைகள் மற்றும் அதனுடன் அண்மிய கம்பனிகளின் உள் கம்பனியின் உரிமை உறுதி செய்யப்படுகிறது. குழுமத்தின் சகல கம்பனிகளுக்கும் நிதி அறிக்கைகள் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முடிவடைகின்ற பொதுவான நிதி ஆண்டும், இணக்கமான கணக்கீட்டுக் கொள்கைகளும் உள்ளன.

குழுமத்தின் உள்ளக சமப்படுத்தல் மற்றும் கொடுக்கல் வாங்கல், வருமானம் மற்றும் செலவினம் குழுமத்தின் உள்ளக கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்படுகின்ற தீர்வையாகாத வருமானங்கள் ஒருங்கிணைந்த கணக்கை தயாரிக்கையில் நீக்கப்படும்

3.2 வியாபாரக் கூட்டுக்கள் மற்றும் நன்மதிப்பு

இலங்கை கணக்கீட்டு நியமம் SLFRS 03 (வணிகக் கூட்டுக்கள்) இன் அடிப்படையில் பரிவர்தனை முறைமையைப் பயன்படுத்தி வணிகக் கூட்டுக்கள் கணக்கீட்டுக்கு உட்படுத்தப்படுகிறது. குழுமத்தின் நன்மதிப்பு பரிவர்த்தனைக்குட்பட்ட திகதிக்கு பரிவர்த்தனை செய்யப்பட்ட இனம் காண முடியுமான சொத்துக்கள் மற்றும் கடப்பாடுடைய பொறுப்புக்களின் தேறிய பொறுமானத்தை கழித்து, நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படாத உரிமைகளை இனம் காணத் தக்க பெறுமானங்கள் உள்ளடங்களாக மாற்றப்பட்ட தொகையின்

நியாயமான பெறுமானம் மதிப்பீடு செய்யப்படும். மேலதிகம் மறைப் பெறுமதியைப் பெறும் போது தனிக் கொள்வனவின் இலாபம், விரைவு இலாபம் அல்லது நட்டம் இனம் காணப்படும்.

வணிகக் கூட்டினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்மதிப்யைப் பெற்றுக் கொண்ட இனம் காணத்தக்க சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏற்றுக் கொள்ள முடியாத பொறுப்புக்களின் தேறிய பெறுமதியினுள் குழுமத்தின் உரிமைக்கு மேலதிகமாக வணிக கூட்டின் மேலதிக செலவினங்களான செலவுகள் அடிப்படையாக இனம் காணப்படும்.

அடிப்படையாக இனம் காணப்பட்ட பின்னர், ஒருங்கிணைந்த இழப்பீட்டு நட்டங்களை கழித்த செலவினத்தில் நன்மதிப்பு மதிப்பிடப்படும். நிலைமைகளின் உள் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் முன் கொண்டு வரப்பட்ட பெறுமானங்கள் இழக்கப்படலாம் என்ற அச்சம் காணப்படுமாயின் நன் மதிப்பு வருடாந்தம் அல்லது மேம்படுத்தி கலந்துரையாடப்படும். இழப்பீட்டு பரிசோதனையின் நோக்கத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட, வணிகக் கூட்டினுள் பெறறுக் கொள்ளப்பட்ட நன் மதிப்பு குழுமத்தின் நிதி ஈட்டும் அலகுகளின் குழுமத்திடையே பிரிக்கப்படுவதுடன், நிர்வாகிக்கப் படும் கம்பனியின் ஏனைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அந்த அலகுகளுக்கு பொறுப்பாக்கப்படுமா என்பதை கவனத்தில் கொள்ளாது இணைந்த செயற்பாட்டின் மூலம் இலாபம் உழைப்பதை நோக்காக கொண்டுள்ளது.

நன்மதிப்பு நிதி ஈட்டும் அலகு ஒன்றின் (அல்லது நிதி ஈட்டும் அலகுகளின் குழுவில்) பகுதி ஒன்றை உருவாக்குகையில் மற்றும் அந்த அலகினுள் செயற்பாட்டுப் பகுதியை ஒதுக்கும் போது, ஒதுக்கப் படும் செயற்பாடு மற்றும் இணைந்த நன் மதிப்பு, நடவடிக்கை ஒதுக்கல் மீது இலாபம் அல்லது நட்டம் தீர்மானிக்கப் படும் போது நடவடிக்கைகளின் முன் கொண்டு சென்ற தொகைக்கு உட்படுத்தப் படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒதுக்கப்படும் நன் மதிப்பு ஒதுக்கப்படும் நடவடிக்கையின் ஒப்பீட்டுப் பெறுமானம் மற்றும் தடுத்து வைக்கப்படும் நிதி ஈட்டம் செய்யும் அலகினை அடிப்படையாகக் கொண்டு பெறுமதியிடப்படும்.

3.3 பொதுவான நிர்வாக வணிகக் கூட்டுக்கள்

பொதுவாக நிர்வாகிக்கப்படும் வணிக கூட்டுக்கள் இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள பொதுவாக நிர்வகிக்கப்படும் வணிகக் கூட்டுக்கள் தொடர்பான விதந்துரைக்கப் பட்டுள்ள பயன்பாடு தொடர்பான அறிக்கை (SoRP) - ஒருங்கிணைந்த கணக்கின் கீழ் விதிக்கப்பட்ட வழிகாட்டியை உபயோகித்து கணக்குப் பதிவு மேற்கொள்ளப்படும். அதன் அடிப்படையில்,

- ஒருங்கிணைந்த நிறுவனங்களின் தேறிய சொத்துக்கள் நடைமுறையில் உள்ள ஏட்டின் பெறுமானங்களைப் பயன்படுத்தி ஒருங்கிணைக்கப்படும்.

- ஒருங்கிணைப்பதற்காக மற்றும் பரிவர்த்தனைக்கு உட்பட்ட தேறிய பெறுமானத்திற்கு இடையிலான வேறுபாட்டின் பெறுபோறாக உருவாகும் நன்மதிப்பாக எந்த ஒரு பெறுமானமும் இனங்காணப்பட மாட்டாது.

3.3.1 கட்டுப்பாட்டை இழத்தல்

கட்டுப்பாட்டை இழத்தல் காரணமாக குழுமத்தின் நிர்வகிக்கும் கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நிர்வகிக்கும் கம்பனிக்கு கட்டுப்படாத உரிமைகள் மற்றும் வளங்கள் மற்றும் ஏனைய கூறுகள் மீள இனம் காணப்படும். கட்டுப்பாட்டை இழத்தல் காரணமாக ஏற்படும் யாதாயினும் ஓர் மிகை அல்லது குறை இலாபம் அல்லது நட்டத்தினுள் இனம் காணப்படும் குழுமம் முன் நிர்வகிப்பில் இருந்த கம்பனி ஒன்றில் யாதாயினும் ஓர் உரிமையை தக்க வைத்துக் கொண்டிருப்பதாயின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் அவ்வாறான உரிமையை நிர்வாகித்தலை இழக்கும் தினத்தின் சராசரிப் பெறுமானத்திற்கு பெறுமதியிடப்படும். அதன் பின்னர், வளங்கள் கணிப்பிடப்பட்ட முதலீட்டாளராக அல்லது தடுத்து வைக்கப்பட்ட அதிகாரம் செலுத்தும் மட்டத்தில் நிறுத்தப்பட்டு, நிதி கருவிகளுக்காக குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இயைபானதாக ஏடுகளில் பதியப்படும்.

3.3.2 ஒருங்கிணைப்பின் மூலம் நீக்கப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் உள்ளக சமப்படுத்தல்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் உள்ளக குழும கொடுக்கல் வாங்கல்கள் மூலம் உருவாக்கப்படும் தீர்வையாகாத வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நீக்கப் படும். வளக் கணக் கெடுப்பு செய்யும் முதலீட்டாளர்களுடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் உருவாக்கப்படும் தீர்வையாகாத இலாபங்கள் குழுமத்தினுள் முதலீட்டாளரின் உரிமையின் அளவுக்கு நீக்கப்படும். தீர்வையாகாத நட்டம் தீர்வையாகாத இலாபம் போன்றதே ஆயினும், இழப்பீட்டு சாட்சிகள் இன்றிய அளவு வரை மட்டும் நீக்கப்படும்.

3.4 வெளிநாட்டுப் பயன்பாட்டு நிதி.

3.4.1 வெளிநாட்டு பயன்பாட்டு நிதியில் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்

வெளிநாட்டு பயன்பாட்டு நிதியில் மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களும் குறித்த கொடுக்கல் வாங்கல் நிகழும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட செலாவனி மாற்று விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாய்களுக்கு (ரூ) மாற்றப்படும்.

வெளிநாட்டு பயன்பாட்டு நிதிகளில் விதிக்கப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பதியப்படும் திகதியில் உள்ள வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்திற்கு சமமான செயற்பாட்டு பயன்பாட்டு நிதிக்கு மீள மாற்றப்படும்.

நிதிக் கருவிகளை மாற்றும் போது ஏற்படக் கூடிய இலாபம் அல்லது நட்டம், இலாப நட்டக் கூற்றில் இனங் காணப்படும்.

3.5 நிதிக் கருவிகள்

3.5.1 இனங்காணப்படும் திகதி

குழும நிறுவனம் ஒன்று நிதிக் கருவிகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டுப் பிரிவினராக நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில், நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் இனங்காணப்படும். சகல முறையான நிதிச் சொத்துக்களும் கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் நாள் அடிப்படையில் இனம் காணப்படுதல் அல்லது இனம் காணப்படாமை நிகழும். சந்தை ஒழுங்கு விதி ஒன்றின் மூலம் அல்லது ஒழுங்கு விதிகள் பலவற்றின் மூலம் உறுதி செய்து கொள்ளப்பட்ட கால எல்லை ஒன்றினுள் ஒப்படைப்பதற்கு தேவையான சகல நிதிப் பொறுப்புக்கள் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல் முறையான கொடுக்கல் வாங்கல்களின் வகையில் உள்ளடக்கப்படும்.

3.5.2 நிதிக் கருவிகளின் ஆரம்பப் பெறுமதியைக் கணிப்பீடு செய்தல்

நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நியாயமான பெறுமானத்திற்கு ஆரம்பத்தில் இனம் காணப்படும். நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பரிமாற்றப்படல் அல்லது வினியோகித்தல் நேரடிக் காரணமாக்கக்

நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள்

கூடியவாறான கொடுக்கல் வாங்கல்களின் செலவினம் (நியாயமான பெறுமானத்தின் மூலம் இலாப நட்டம் பெறும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தவிர) ஆரம்ப இனம் காணல் மூலம் பொறுத்தமானவாறு நிதிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் நியாயமான பெறுமானத்தின் மீது கூட்டப்படும். அல்லது கழிக்கப்படும். நியாயமான பெறுமானத்தின் மூலம் இலாபம் அல்லது நட்டம் அடையும் நிதிச் சொத்துக்களை மற்றும் நிதிப் பொறுப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு நேரடியாக காரணமாகக் கூடிய கொடுக்கல் வாங்கல் செலவுகள் உடனடியாக இலாப நட்டங்களினுள் இனம் காணப்படும்.

3.5.3 நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் பின் மதிப்பீடு செய்தல்.

நிதிச் சொத்துக்கள் ஆரம்பத்தில் கீழ் காட்டப்படும் வகைகளில் ஒரு வகைக்கு வகைப்படுத்தப்படும்.

- நியாயமான பெறுமானம் மூலம் இலாபம் அல்லது நட்டம் அடைதல் என பெயரிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் (FVTPL) (நியாயமான பெறுமானத்தின் மூலம் இலாபம் நட்டத்தை அடையும் கொடுக்கல் வாங்கல்களுக்காக உள்ள)
- கடன் மற்றும் பெறுவனவுகள் (L & R)
- முதிர்வடையும் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் (HTM)
- விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் (AFS)

நிதிச் சொத்துக்களின் இயல்புகள் மற்றும் நோக்கம் என்பவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தல் தங்கியுள்ளதுடன், ஆரம்ப இனம் காணலில் இது தீர்மானிக்கப்படும்.

3.5.4 வினைத்திறன்மிக்க வட்டி முறை (EIR)

வினைத்திறன்மிக்க வட்டி முறை என்பது கடன் உதவி ஒன்றில் தேய்வைக் கணிப்பிடல் மற்றும் உரிய காலப் பகுதி பூராகவும் வட்டி வருமானம் ஒதுக்கப்படும் முறையாகும். வினைத்திறன்மிக்க வட்டி வீதம் என்பது கடன் உதவி ஒன்றில் எதிர்பார்க்கப்படும் காலம் அல்லது பொறுத்தமான இடங்களில் மிகக் குறுகிய காலத்தினுள் ஆரம்ப இனம் காணலின் அடிப்படையில் முன் கொண்டு செல்லப்பட்ட தேறிய பெறுமானத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட எதிர் கால கிடைப்பனவுகளுக்கு (வினைத் திறன் மிக்க வட்டி வீதம் கொடுக்கல் வாங்கல் செலவுகள், ஏனைய தவணை மற்றும் கழிவுகளில் தேவைப்படும் பகுதி ஒன்றிற்காக செலுத்தப்பட்ட சகல கொடுப்பனவுகள் மற்றும் புள்ளிகள் உள்ளடங்கலாக) சரியான கழிவிடப்படும் சதவீதமாகும்.

இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமானத்தை வகைப்படுத்திய நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த கடன் கருவிகளுக்கு வினைத்திறன்மிக்க வட்டி அடிப்படையில் வருமானம் இனம் காணப்படும்.

3.5.5 இலாபம் அவ்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமானமிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

அ) கொடுக்கல் வாங்கல்களுக்கான நிதிச் சொத்துக்கள்

நிதிச் சொத்துக்கள் கொடுக்கல் வாங்கல் செய்வதற்காக உள்ள நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுவது குறுகிய காலத்தினுள் விற்பனை செய்வதற்கோ அல்லது மீள கொள்வனவு செய்வதற்கு அல்லது குறுகிய கால இலாபம் பெறும் நிலையில் இணைந்து கட்டுப்படுத்தும் சொத்து ஒன்றின் பகுதி ஒன்றாக இருப்பதனாலாகும்.

கொடுக்கல் வாங்கல் செய்வாற்கான நிதிச் சொத்துக்கள் நியாயமான பெறுமானத்திற்கு நிதி நிலமை அறிக்கையில் வெளிப்படுத்தப்படும். நியாயமான பெறுமானத்தின் பெறுமான மாற்றம் இலாபம் அல்லது நட்டத்தினுள் இனம் காணப்படுவதுடன், வட்டி மற்றும் பங்கிலாப வருமானம் ஒப்பந்த விதிகளுக்கு உடன் பட்டு, அல்லது கொடுப்பனவைப் பெறுவதற்கு உரிமையைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தேறிய வர்த்தக வருமானத்தினுள் காட்டப்படும். குழுமம் கொடுக்கல் வாங்கல்கள் செய்வதற்காகக காணப்படும் பங்குகளல்லாத சொத்துக்கள் கொத்தில் எதிர் வரும் குறுகிய காலத்தினுள் அவற்றை விற்பனை செய்தல் பொருத்தமானதா? என்று தீர்மானிப்பதற்காக மதிப்பீடு செய்யப்படும்.

செயற்றிறனற்ற சந்தையின் காரணமாக இந்தச் சொத்துக்களை எதிர் காலத்திற் விற்றல் தொடர்பில் முகாமைத்துவத்தின் நோக்கங்கள் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் அடைந்திருப்பதன் காரணமாக கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் புதிய வகைப்படுத்தல் ஒன்றிக்கு செல்ல வேண்டும். கொடுக்கல் வாங்கல் செய்வதற்காக உள்ள நிதிச் சொத்துக்களினுள் வினைத்திறன்மிக்க எல்லையிடல் உபகரணங்களாக பெயர் குறிப்பிடப்படாத வேறுபடுத்தப்பட்ட பங்குகள் உபகரணங்கள் உள்ளடங்களாக அரசின் கடன் பத்திரங்கள், எதிர் வரும் குறுகிய காலப் பகுதியினுள் விற்பனை செய்தல் அல்லது மீள கொள்வனவு செய்யும் நோக்கில் தடுத்து வைத்துள்ள உரிமையினுள் உள்ளடங்குகின்றது.

ஆ) இந்த வகையினுள் வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

ஆரம்பத்தில் இனம் காணப்படும் சந்தர்ப்பத்தில் முகாமைத்துவத்தினால் பெயர் குறிப்பிடப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாகும். கீழ்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் மற்றும் பெயர் குறிப்பிடும் கருவியின் அடிப்படையில் தீர்மானிக்கின்ற சந்தர்ப்பத்தில் முகாமைத்துவம் இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமானத்தை மாத்திரம் கருவி ஒன்றை பெயரிடலாம்.

- வேறுபாட்டின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மதிப்பீடு செய்தல் அல்லது இலாபம் மற்றும் நட்டத்தை இனம் காண்பதால் உருவாகக் கூடிய சமச்சீரற்ற தன்மை தொடர்புடையதாயின் உரிய பெயர் குறிப்பிடலில் இருந்து தவிர்ந்து செல்லல் அல்லது குறிப்பிட்டு சொல்லத்தக்க அளவில் குறைதல்
- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பது நிதிப் பொறுப்புக்கள் மற்றும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய இரண்டினதும் பகுதி ஆவதுடன், அவை எழுத்து மூல அபாய முகாமைத்துவத்தின் அல்லது முதலீட்டு வழிமுறைக்கு இயைபானதாக நியாயமான பெறுமானம் ஒன்றின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்படல் மற்றும் அவற்றின் செயலடைவை மதிப்பீடு செய்தல்

இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமானத்தில் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் நியாயமான பெறுமானத்தின் அடிப்படையில் நிதி நிலைமை அறிக்கையில் குறிப்பிடப்படும். நியாயமான பெறுமானத்தில் ஏற்படும் வித்தியாசம் இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமானத்தின் பெயர் குறிப்பிடும் நிதிச் சொத்தின் மீது தேறிய இலாபம் அல்லது நட்டம் பதியப்படும். ஈட்டிய வட்டி வினைத்திறன்மிக்க வட்டி முறையைப் பயன்படுத்தி வட்டி வருமானம் திரட்டப்படும் என்பதுடன், பங்கிலாபம் வழங்கும் உரிமை கிடைக்கப்பெற்றவுடன், தேறிய வர்த்தக வருமானத்தில் குறிப்பிடப்படும்.

3.5.6 கடன் நிதி செலவினங்கள் மீதான நிதிப் பொறுப்புக்கள்

இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமானத்தில் மதிப்பீடு செய்யாத கம்பனி மற்றும் குழுமம் மூலம் விதிக்கப்படுகின்ற நிதிக் கருவிகளை கடன் நிதி செலவினங்கள் மீதான நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகிறது.

ஆரம்ப இனங்காணலின் பின்னர் இந்த நிதிப் பொறுப்பு வினைத்திறன் மிக்க வருமானம் என்ற அடிப்படையில் இனம் காணப்பட்ட செலவினங்களுடன் வினைத்திறன் மிக்க வட்டி முறையுடனும் பிற்காலத்தில் கடன் நிதி செலவினங்கள் மதிப்பீடு செய்யப்படும். வினைத் திறன்மிக்க வட்டி முறைமை என்பது நிதிப் பொறுப்பொன்றின் மீது கடன் நிதி செலவினத்தை மதிப்பிடல் மற்றும் உரிய காலம் பூராகவும் வட்டி வருமானத்தை ஒதுக்கீடு செய்யும் முறையாகும்.

3.5.7 நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புக்களையும் மீள அடையாளம் காணுதல்

3.5.7.1 நிதிச் சொத்துக்கள்.

நிதிச் சொத்தொன்று (அல்லது தேவையான இடங்களில் நிதிச் சொத்து ஒன்றின் பகுதி அல்லாதுவிடின் சமமான நிதிச் சொத்துக்களின் தொகுதி ஒன்றின் பகுதி) கீழ்வரும் சந்தர்ப்பங்களில் இனம் காணப்படும்

- சொத்து ஒன்றின் மூலம் காசுப் உட்பாய்ச்சலுக்கான உரிமை நிறைவடைந்திருத்தல் அல்லது
- கம்பனியினது அல்லது குழுமத்தினது காசு உட்பாய்ச்சலைப் பெற்றுக் கொள்வதற்கு உள்ள உரிமை மாற்றப் பட்டிருத்தல், அல்லது தாண்டிச் செலலும் நடைமுறை ஒன்றின் மூலம் மூன்றாம் தரப்பிற்கு முக்கியத்துவம் வாய்ந்த தாமதமின்றிய பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிப்பாய்ச்சலை பூரணமாக பொறுப்பேற்கும் சந்தர்ப்பம்.
- குழுமம் சொத்தின் சகல அபாயங்கள் மற்றும் வழங்கல்களை மாற்றியுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது
- கம்பனி அல்லது குழுமத்தின் சொத்துக்களின் சகல அபாயங்கள் மற்றும் வழங்கல்கள் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றப்பட்டு அல்லது தடுத்து வைக்கப்பட்டு இல்லாவிட்டாலும் சொத்தின் நிர்வாகத்தை மாற்றியுள்ள சந்தர்ப்பத்தில்

நிதிச் சொத்து ஒன்று இனம் காணப்படலின் அடிப்படையில் சொத்தின் முன் கொண்டு சென்ற பெறுமதி (அல்லது மாற்றப்படட்ட சொத்தின் பகுதியின் முன் கொண்டுவரப்பட்ட பெறுமதி) மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட உறுதிப்பாடு (ஏற்றுக் கொண்ட புதிய பொறுப்பில் குறைக்கப்பட்டு பெறப்பட்ட புதிய சொத்துக்கள் உட்பட) வேறுபாடு மற்றும் ஏனைய விரிவான உருப்படிகளட இனம் காணப்பட்டு இருக்கும் ஏதேனும் இலாபம் இலாபநட்டக் கூற்றில் இனம் காணப்படும்.

